இது
# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 ஜனவரி, 15.2015 வியூகம்-01 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com

வாசகர்களுக்கு
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துகள்



## மேற்கு - இந்தியா
# கனவு
## நனவாகின்றதா?



# கூர்மையடைந்து செல்லும் இனவாத அரசியல்

தேர்தல் முடிவு வெளியானதும் பரவலாக அடிபட்ட செய்திகள் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வாயிலிருந்து வந்தது. தன்னைத் தோற்கடித்தது வடக்குகிழக்கில் வாழுகின்ற தமிழர்களே, என்றும் சிங்கள மக்கள் தனக்கு அதிக ஆதரவை வழங்கினர் என்றும் தெரிவித்திருந்தார். மற்றது இனவாத கட்சிகளும் தமிழர்களே ராஜபக்ஷவை தோற்கடித்து விட்டனர் என்று கூறிவருகின்றனர்.

இனி வரப்போகும் ஆட்சிக் காலத்தின் சாரத்தை இந்த செய்தி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஊடக அளவில் வெளிக்கிளம்பியிருக்கும் இந்த எண்ணம் தமிழ் - சிங்கள இனப் பிரிப்பை மேலும் ஆழப்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் தம் வாக்குப் பலத்தால் சிங்களத் தலைமைகளைத் தோற்கடிக்கும் வல்லமையுடையவர்கள் என்ற சிந்தனை சிங்கள மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றது.

உண்மையில் இந்தத் தேர்தலின் நோக்கம் என்ன? அந்த நோக்கம் யாருடையது? அது மேற்கு நாடுகளுடைய தேவை தான் எனில் ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து தோற்கடிப்பது, ஆட்சி மாற்றக் கையளிப்பு பிரச்சினைகளின்றி நடைபெற வேண்டும் என்பதே நோக்கம். அவை நிறைவேறிவிட்டன. ஆனால் சிங்கள கடும்தேசியவாதிகளைப் பொறுத்தவரை இந்த மாற்றம் ஜீரணிக்க முடியாதது. நோக்கம் பின்னணி எல்லாம் அவர்களுக்கு தேவையற்றதுமாகும். மாறாக, ஆட்சி மாற்றத்திற்கு திரளாக வாக்களித்த தமிழர்களும், இஸ்லாமியரும் தான் பிரச்சினை.

இந்திய, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்ப்பது போல் அவர்களது உரிமைகள் அனைத்தையும் கொடுக்க அழுத்தம் கொடுக்கப் போவதில்லை. மறுபுறத்தில், கூட்டங்களில் சிங்களவருக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும், தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவைகளையும் தவிர்த்து வேறு எவற்றையும் மைத்திரி செய்ய மகிந்தாவும், மற்றைய புறத்தில் ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும், முன்னாள் இராணுவத் தளபதியும் அனுமதிக்கப் போவதில்லை. இதைத் தமிழ் பேசும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலை தொடர்ந்தால், தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பு தவிர்க்கப்பட முடியாதபடி அதிகரிக்கவே செய்யும். எனவே இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் அடக்குமுறைக்குள்ளாகும் நிலை நீடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உண்டு

மறுபுறத்தில், இலங்கையில் சகலருக்கும் ஜனநாயகத்தை அனுபவிக்கச் செய்யப் போவதாகக் கூறிய மைத்திரி (சிங்கள பௌத்தத் தேசியவாதிகளின் கடும் எதிர்ப்புக்களின் மத்தியிலும் அதைச் செய்வார் என்ற போலி நம்பிக்கையை தமிழ் பேசும் மக்களுக்கு கொடுப்பதற்காக) அடுத்த முறை போட்டியிடமாட்டேன் என்றும் கூறுகிறார்.

இவைகள் நாட்டின் அரசியல் ஸ்தரத்தன்மையை சில காலத்தினுள் இழக்க வைக்க இருப்பதைத் தான் உறுதிப்படுத்துகின்றன. மீண்டும் பெரிதும் பாதிக்கப்படவுள்ளவர்கள் இலங்கையின் தமிழ் பேசும் மக்களே!! இதன் விளைவு இலங்கையானது தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தின் உச்சமான கட்டத்தை அடையும். அதற்கு மீண்டும் பலியாகப் போவது தமிழ் பேசும் மக்கள் தான். அதற்கானதே இந்த மாற்றம்.

## எல்லாம் பித்தலாட்டம்

தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாளே சம்பந்தன் ஓர் அறிக்கை விடுத்திருந்தார். தேசிய அரசில் இணைவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டால் சாதகமாகப் பரீசிலிப்போம். என்பதே அது. ஊடகங்களும் இந்தச் செய்தியை பரபரப்பாக வெளியிட்டன. பலத்த சர்ச்சைகளும் உடனடியாகவே கிளம்பின. இதன் விளைவாக அடுத்த நாளே முடிவு மாற்றப்பட்டது. அப்படியொரு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதை மறுபடியும் விடுத்தார். எனவே இந்த செய்தி ஆய்வு எழுதப்படும் வரை கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவெனில் தேசிய அரசில் இடம்பெறத் தங்களுக்கு அழைப்பில்லை என்பதே ஆகும்.

ஆனால் புதிய அரசின் அமைச்சரவையில் இடம்பெறவுள்ளவர்களின் பெயர் பட்டியல் ஒன்று கடந்த 10ம் திகதி வெளியாகியிருந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு ஓர் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக அந்த அறிவித்தலில் சொல்லப்பட்டிருந்தது. அரசு ஒன்றின் அமைச்சரவை பட்டியல் என்பது குறித்த தரப்புக்களின் சம்மதம் இன்றி வெளியிடப்பட வாய்ப்பில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வதற்கான சம்மத்தினை தெரிவித்துள்ளனர் என்பது வெளிப்படை. எனினும் அச் செய்தி வெளியானவுடன் எழுந்த எதிர்ப்பலைகளை சமாளிப்பதற்காகவும் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை கவனத்தில் கொண்டும் தமது முடிவை தலைகீழாக மாற்றியுள்ளனர் என்பதனை புரிந்து கொள்வது கடினமல்ல.



## செய்தி ஆய்வு

# கற்றுக்கொள்ள ஒரு பாடம்

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் செயல்படும் சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்தில் கடந்த 7ஆம் திகதி புகுந்த இரண்டு தீவிரவாதிகள் 12 பேரை சுட்டுக் கொன்றனர். அதைத் தொடர்ந்து பல்பொருள் அங்காடியில் புகுந்து பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த 4 பேரையும் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். பாரீஸ் நகரில் 3 நாட்களாக தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் உலக நாடுகளையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த நிலையில் தீவிரவாதத் தாக்குதலில் பலியானவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் விதமாகவும், எதிர்ப்பைக் காட்டும் விதமாகவும் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கூட்டுப் பேரணியை உலகம் முழுதும் உள்ளவர்கள் நடத்தினர். உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர். பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன், ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ், பிரான்ஸ் அதிபர் ஹோலாந்த் உட்பட 50-க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இப்பேரணியில் பொதுமக்கள் சுமார் 10 லட்சம் பேர் பங்கேற்றனர்.

இந்தச் செய்தி நம்மிடையேயும் ஒரு பலமான கேள்வியை எழுப்புகின்றது. 5 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களாகிய நாமும் இப்படித்தான் கொன்றொழிக்கப்பட்டோம். உலகமே அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தது. பிரான்ஸில் சுட்டுக் கொல்லப்பட்டது வெறும் 12 உயிர்கள் தான். ஆனால் நாம்..? எத்தனை ஆயிரம் உயிர்கள் குறுகிய காலப்பகுதியினுள் கொன்றொழிக்கப்பட்டன.

அப்போது உலகம் மட்டும் அமைதி காக்கவில்லை. தமிழ் மக்களை பிரதநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் சம்பந்தனும் தான் நீண்ட அமைதி காத்தனர். அந்த மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற சொகுசு வாழ்க்கையை அனுபவிக்கும் இந்தத் தலைமைகள் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படும் போது ஒரு எதிர்ப்பைக்கூட வெளியிடாமல் அமைதிகாத்து விட்டார்கள்.

12 உயிர்களின் இழப்புக்காக கொதித்தெழுந்த மேற்கு நாட்டவர்களின் மனநிலை, எங்கள் வாக்குகளில்சுகம் அனுபவிக்கும் இவர்களுக்கு வரவில்லை. எனவே இதுபோன்ற கட்சி தலைமைகள் அனைத்தும் லண்டன் நிகழ்விடமிருந்து கற்றுக்கொள்ள அதிக விடயங்கள் உள்ளன.

## என்ன செய்வார் பாப்பரசர்?

மஹிந்தராஜபக்சவின்காலத்தில்அழைக்கப்பட்டிருந்த பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் மைத்திரியின் காலத்தில் வருகை தந்து இலங்கை மக்களை ஆச்சரியப்படுத்திவிட்டார். ஆட்சிமாற்றத்தின் பின் நிகழ்ந்த முதல் வெளிநாட்டினர் வருகையாக இது அமைந்திருப்பதாலும், அதுவும் சமயம் சார்ந்த உயர் பீடத்தில் இருக்கும் ஒருவரின் வருகையாக இருப்பதாலும் புதிய அரசுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என தெற்கு ஊடங்கள் வர்ணிக்கின்றன.

புதிய அரசுக்கு ஆசீர்வாதமாகவே வைத்துக் கொள்ளலாம். இலங்கை வரலாற்றில் மிக நீண்ட காலம் சிலுவை சுமக்கும் தமிழர்களுக்கு இந்த வருகை என்ன தரப்போகின்றது? சாந்தியும், சமாதானமும் பெருகவும், மனித உரிமைகள் விடயங்களை இலங்கை அரசு தொடர்ந்தும் கடைபிடிக்க வலியுறுத்தவும் மட்டுமே இந்தப் புனிதரின் பயணம் அமைந்துவிட்டால் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை.

பாப்பரசரின் முன்னால் வைப்பதற்குத் தமிழர்களிடம் அரசியல் பிரச்சினைக்கு அப்பால் அதிகளவான அடிப்படை பிரச்சினைகள் உண்டு. காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினை இதில் முக்கியமானது. இந்தப் பிரச்சினைக்கு பழைய அரசுகளிடமும்

7ஆம் பக்கம் பார்க்க)




பொங்குக பொங்கல் பொங்குக
மகிழ்வென்றும்
தங்குக இன்பம் தமிழன்
வாழ்வினில்
மங்குக தீமைகள் பொங்குக
வளமைகள்
விஞ்சுக நலங்கள் மிஞ்சுக
நன்மைகள்
நீங்குக கயமை நிலவுக வாய்மை
நல்குக வெற்றி நலிக தீதென்றும்
நிறைக நிம்மதி நீடுக ஆயுள்
நிலமே செழித்து நீர்வளம்
பெருகுக
எல்லா உயிர்களும் இன்புற்று
வாழ
பொங்குக பொங்கல் பொங்குக
மகிழ்வென்றும்!

## பொங்கல்

தைமகளே தீர்ப்பாயா?
தைப் பொங்கலுக்கு
புதியதாய்ப் பானை
எடுத்ததாய் நினைவு–அன்று
அண்ணா புதிய
பானையோடு
பொங்கலுக்கு முதல்
நாளே வந்து விடுவான்.

இன்று...
பானைகள் புதியதாய்
இருக்கின்றன – நாம்
தான் பழையவர்களாய்...

அண்ணன் வருவானா?
எங்களுடன் பொங்கல்
சாப்பிடுவானா?–என்ற
எதிர்பார்ப்புகள்.
பல பொங்கல்கள்
இப்படித்தான் கழிந்திருக்கின்றன.

இந்த வருடமாவது
அண்ணா வருவான் –எங்களுடன்
சேர்ந்து சண்டை பிடித்து
பொங்கல் சாப்பிடுவான்
என்ற நம்பிக்கையுடன்
பொங்கல் பானையும்
காத்திருக்கின்றது...

சக்தி

# சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்

**தை**த்திருநாள் தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா ஆகும். தமிழர்களின் புத்தாண்டும் இந்தத் தைத்திருநாள் தான். தை முதல் நாளிலிருந்தே தமிழர்களின் புத்தாண்டு பிறக்கும். இந்தத் தமிழர் திருநாள் தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ் எனத் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்தவிழாசமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப் படுகிறது. பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும் மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப் படுகிறது.

### வரலாறு

சங்ககாலத்தில், அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் தினத்தில் இந்த விரதத்தை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காகப் பூமி, சூரியன் உதவிய மாடு போன்றவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் கொண்டாடும் பொங்கல் திருநாள் கொண்டாட்டமாக மாறியது. இந்தத் திருநாள் நான்கு நாட்கள், நான்கு விதமாகக் கொண்டாடப்படும்.

- போதிப் பண்டிகை
- தைப் பொங்கல்
- பட்டிப் பொங்கல்
- காணும் பொங்கல்

### உழவர் திருநாள்

பொங்கல் விழா, மக்களால் இயல்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கை சக்திகளுக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா. உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல்.

### மாட்டுப் பொங்கல்

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும். பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபு சற்று முன்னரான காலம்வரை இருந்தது. இப்போது வழக்கில் காணப்படுகிறது. பொங்கலோ பொங்கல் மாட்டுப் பொங்கல் பட்டிபெருக பால்ப்பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக' என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரை பட்டியில் தெளிப்பர்.

### பொங்கல் வைக்கும் முறை

தைப்பொங்கலுக்கு சில நாட்களுக்கு முன்னரே கொண்டாட்ட வெடிகள் வெடிக்கத் தொடங்கிவிடும். பொங்கலுக்குத் தேவையான பொருட்களை ஆயத்தப்படுத்திக் கொள்வர். புதுப்பானைகள், புத்தாடைகள் வாங்குவர். மேற்கு நாடுகளில் பொங்கலுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் கொண்ட பொதிகள் விற்பனைக்கு இருக்கும். பொங்கலன்று அதிகாலை எழுந்து முழுகுவர். வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு அதன் நடுவில் பானை வைப்பர். புதுப்பானையில் புது அரிசியிட்டு முற்றத்தில் பொங்க வைப்பார்கள். புதிய பானைக்குப் புதிய மஞ்சளைக் காப்பாக அணிவர். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர். முற்றத்தில் கோலமிட்டுத் தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங்குவர். சைவத் தமிழர்கள், சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று உரக்கக் கூவி அரிசியை இரு கைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர். தனது முதற் பயனை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வர். இது தமிழரின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ளது என்பர்.

### சங்க இலக்கியங்களில் தைப்பொங்கல்

"தை இத்திங்கள் தண்கயம் படியும்"
என்று நற்றிணை

"தை இத் திங்கள் தண்ணிய தரினும்"
என்று குறுந்தொகை

"தை இத் திங்கள் தண்கயம் போல்"
என்று புறநானூறு

"தை இத் திங்கள் தண்கயம் போல"
என்று ஐங்குறுநூறு

"தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ"
என்று கலித்தொகை.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் குறிப்படும் தைத் திருநாள், தமிழர்களால் மட்டுமே கொண்டாடப்படுகின்றது. பண்டைய காலத்தில் வாழ்ந்த இனக்குழுமங்கள் முதலில் இயற்கையை வழிபட்டார்கள். அறிவு பரிணாமம் பெற, தொழில்களை செய்து ஓரிடத்தில் வாழத் தொடங்கினார்கள். அவ்வாறு வாழும் காலத்தில் தம் வாழ்க்கையை சிறப்புப் பெறச் செய்த இயற்கை நிலைகளையும், தொழில்களையும் வழிபடவும், கொண்டாடவும் தொடங்கினார்கள். அதன் படி பண்டைத் தமிழர்களின் தொழிலாக விவசாயமே இருந்தது. எனவே விவசாயம் சிறப்புப் பெறும் மாதத்தில் அவர்களின் கொண்டாட்டம் ஆரம்பமானது. தைத் திருநாள் தமிழர்களின் திருவிழாவாக இவ் விதமாகவே மாறியது. இது இன்றளவும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தமிழர்கள் தொன்மையான இனம் என்பதற்கு இந்தத் தைத்திருநாள் தக்க சான்றாகவும் இருக்கின்றது. ஆகவே தொன்மையான பண்பாட்டின் இனமாகிய அனைத்துத் தமிழர்களுக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

# மேற்குலகினதும் இந்தியாவினதும் இலக்கு நிறைவேறுகின்றதா?

-முத்துக்குமார்-

மேற்குலகினதும் இந்தியாவினதும் இலங்கை தொடர்பான நகர்வுகளின் வரலாற்றை 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையில் இருந்து பார்க்க வேண்டும். 13வது திருத்தத்துடன் திருப்திப்படுவதற்கு சம்பந்தன் தலைமை தயாராக இருக்கின்றது என்பதை அன்றே அவை அடையாளம் கண்டன. இதனால் சமாதான காலம் முழுவதும் புலிகளை சிதைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விடுதலைப் புலிகளைச் சுற்றி சர்வதேச வலைப்பின்னல் உருவாக்கப்பட்டது. கருணாவின் வெளியேற்றம் இந்தியாவினதும் மேற்குலகத்தினதும் திட்டமிட்ட சதி முயற்சியே.

விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை இந்த வலைப்பின்னலில் இருந்து தப்புவதற்காக சற்றுபின்னே தள்ளி இலங்கை என்கின்ற ஒரு நாட்டுக்குள் தீர்வினைப் பெறக்கூடிய வகையில் தமிழ்த் தேசத்தின் இறைமை அடிப்படையில் இடைக்கால தீர்வு யோசனைகளை முன்வைத்தனர். சுனாமிப் பொதுக் கட்டமைப்பு முயற்சிக்கும் இணங்கினர். ஆனால் ஸ்ரீலங்கா அரசு இவை இரண்டையும் தூக்கி எறிந்தபோது இந்தியாவும் மேற்குலகும் பேசாமல் இருந்தன.

இந்நிலையில் 2005 ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச சமூகம் தனது செல்லப் பிள்ளையாகிய ரணிலை ஆதரிக்குமாறு விடுதலைப் புலிகளை வற்புறுத்தியது. அதன் போது விடுதலைப் புலிகள் தமிழர்களின் அரசியல் தீர்வு பற்றி கேட்ட போது அதற்கு எந்த உத்தரவாதத்தையும் வழங்க அவர்கள் மறுத்திருந்தனர். மறுபுறத்தில் தங்களை அழிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதனை தெளிவாக அறிந்திருந்த விடுதலைப் புலிகள் சுயநிர்ணய உரிமையை மறுதலித்து ஒற்றையாட்சியை வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் நடை பெறும் அந்த ஜனாதிபதித் தேர்தலில் பங்கெடுப்பதில்லை என்பதில் உறுதியாகவிருந்தனர். கொள்கை அடிப்படையில் அத்தேர்தலைப் புறக்கணித்தனர். அத்தேர்தலில் மஹிந்தவே ஆட்சிப் பீடமேறினார். மஹிந்தவின் வருகையுடன் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரிக்கத் தொடங்கியது. இலங்கைத் தீவினை மையமாக வைத்து ஒரு புவிசார் அரசியல் போட்டி அமெரிக்க இந்திய கூட்டுக்கும் சீனாவிற்கும் இடையே ஏற்பட்டது. இந்த புவிசார் அரசியல் போட்டி தான் இன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை என்ற தீர்மானம் நிறைவேற்றப்படக் காரணமாக அமைந்ததுடன் தமிழ்தேசிய அரசியலையும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது.

சம்பந்தன் தலைமை 13வது திருத்தத்துடன் திருப்திப்பட தயாராக இருந்தமையினால், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தி 13ஐ ஏற்கச் செய்ய இந்தியாவும், மேற்குலகும் யுத்தத்திற்கு உதவிகளை வழங்கி பகீரதப் பிரயத்தனம் செய்தன. எனினும் விடுதலைப் புலிகள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டி என்ற நிலைப்பாட்டை கைவிட மறுத்தனர். இதன்போது விடுதலைப்புலிகள் அழிவுற்றாலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை அப்படியே இருக்கும் எனத் தெரிந்திருந்தால் விடுதலைப் புலிகளை வைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க மேற்குலகும் இந்தியாவும் முனைந்திருக்கும். ஆனால் சம்பந்தன் தலைமை 13வது திருத்தத்துடன் திருப்திப்பட தயாராக இருந்தமையினாலேயே விடுதலைப் புலிகளை அழிக்க முனைந்தனர். போரில் புலிகளும் பெருமளவு மக்களும் அழியும் நிலை இருந்த போது பலர் சம்பந்தனை இதில் தலையிட்டு இந்தியாவுடனும், மேற்குலகுடனும் பேசி அழிவைத் தடுக்குமாறு கேட்டனர். ஆனால் சம்பந்தன் அசையவில்லை. ஏனெனில் புலிகள் அழிக்கப்படல் வேண்டுமென்பது சம்பந்தனின் விருப்பாகவும் இருந்தது. விடுதலைப் புலிகள் அழிந்தால் தான் தமிழர் அரசியலுக்கு தலைமை கொடுக்கமுடியும் என அவர் நினைத்திருந்தார். அழுத்தங்களை தவிர்ப்பதற்காக கடைசி நேரத்தில் சம்பந்தன் தனது தொலைபேசியையே இரண்டு மூன்று நாட்கள் நிறுத்தியும் வைத்திருந்தார்.

இலங்கைத் தீவில் இரண்டாவது அதிகார மையத்தை உருவாக்கியிருந்த விடுதலைப் புலிகளை அழித்து ஒரு அதிகார மையத்தின் கீழ் கொண்டுவந்த பின்னர் இந்தியாவும் மேற்குலகும் தமது அடுத்த கட்ட வேலைத் திட்டத்தை நகர்த்த முயன்றன. முதலாம் கட்டத்தில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி ஸ்ரீலங்கா அரசை அங்கீகரிக்கச் செய்தல் அல்லது அழித்தல் என்ற வேலைத்திட்டத்தையும், இரண்டாம் கட்டத்தில் சீனாவின் செல்வாக்கிலிருந்து இலங்கையை மீள்விக்க மஹிந்தவைச் சிதைத்தல் என்ற வேலைத்திட்டத்தை நகர்த்தத் தொடங்கியிருந்தன. இந்தியா தனது வெளியுறவுக்கொள்கை காரணமாக இந்த வேலைத் திட்ட விவகாரத்தைசற்று அமர்த்தி வாசிக்க அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமே இதனை முன்னெடுத்தது.

விடுதலைப்புலிகளை அழிக்கும் நடவடிக்கையில் இந்தியாவும் மேற்குலகும் இறங்கியிருந்தபோது மேற்குலகு இராஜதந்திரி ஒருவரை சர்வதேச பத்திரிகையாளர் ஒருவர் பின்வருமாறு கேட்டார்.

"நீங்கள் மஹிந்தவுக்கு ஆதரவாக நின்று விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு துணை புரிகிறீர்கள். மஹிந்த உங்களது தாராண்மை ஜனநாயகத்தை ஏற்பார் என நம்புகிறீர்களா?" இதற்கு இராஜதந்திரி கூறிய பதில் "மஹிந்த பிரபாகரனை பார்க்கட்டும். நாங்கள் மஹிந்தவை பார்க்கின்றோம்" என்பதே.

இந்த இரண்டாம் கட்ட வேலைத் திட்டத்தை ஆயுதப் போராட்டம் முடிந்தவுடனேயே ஆரம்பித்திருந்தன. இதன் அடிப்படையில்தான் 2010 ஆம் ஆண்டு தேர்தலில் போரை தலைமை ஏற்று நடாத்திய இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கியிருந்தன. தேர்தலில் வெல்வதற்கு யுத்த வெற்றியில் பங்குபற்றிய நாயகன் ஒருவர் தேவை என்பதனாலே பொன்சேகா களமிறக்கப்பட்டார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்

**ஜெனிவா சர்வதேச விசாரணை என்ற ஆயுதத்தை கையில் வைத்துக் கொண்டு, 2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவரை தோற்கடிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கேற்ப மஹிந்தரின் கோட்டையிலிருந்த மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக்கப்பட்டார்.**

சரத்பொன்சேகாவின் ஆதரவு கூடும் என நினைத்து பகிரங்கமாக ஆதரவு கொடுக்க அதுவே இறுதியில் அவரது தோல்விக்கு காரணமாக அமைந்தது. 2005 ஆம் ஆண்டு தேர்தலில் ஒன்றரை இலட்சம் வரையிலான வாக்குகளினால் வெற்றியடைந்த மஹிந்த இராஜபக்ஷ 2010 ம் ஆண்டு தேர்தலில் பதினாறு இலட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்றார். இந்த வெற்றி இந்தியாவும் மேற்குலகும் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்று. போர் முடிவிற்கு பின்னர் அவர்களது முதலாவது முயற்சி தோல்வியில் முடிந்தது.

தமது முயற்சி தோல்வியடைந்தாலும் தொடர்ச்சியாக மஹிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாகவே ஜெனிவாக் களம் திறக்கப்பட்டது. போர்க்குற்றம் தொடர்பாக இரண்டு தடவைகள் மஹிந்தவிற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சர்வதேச விசாரணைக்கு வழி கோலியது. மஹிந்த மட்டுமே இலக்காக இருந்ததனால் அவரது ஆட்சிகால போர்க் குற்றங்களுக்கு மட்டும் விசாரணை மட்டுப்

23ஆம் பக்கம் பார்க்க)



இது நம்தேசம்
தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com
தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com



"இப்போதைக்கு மந்திரிசபையில் இணையத் தேவையில்லை என்று சம்பந்தனார் சொல்லி விட்டார் போல் தெரிகிறது. அதனால் பதவிக் குக் காத்திருந்து, கங்குல் பகலாகக் கண் விழித்து ஓடியாடித் திரிந்த கனவான்களுக்கு தீராத சோகமாம்"

-இதயச்சந்திரன்-


# தமிழர்களைக் கைவிடுகிறதா சர்வதேசம்?

இலங்கை விவகாரம் மறுபடியும் சர்வதேச அளவில் பேசுபொருளாகியுள்ளது. இதுவரை தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காகவும், போர்க்குற்றங்களுக்காகவும் மட்டுமே இலங்கை சர்வதேச கவனிப்பை பெற்றிருந்தது. அதையும் மீறினால் கிரிக்கெட் விளையாட்டு அவ்வப்போது வந்து போகும். ஆனால் இந்தமுறை இலங்கையில் ஜனநாயகம் மலர்ந்துவிட்டது, ஆட்சிமாற்றம் இலங்கையின் புதிய அத்தியாயம் என்றெல்லாம் சர்வதேச ஊடகங்கள் எழுதித்தள்ளுகின்றது. உலகத் தலைவர்களும், இராஜதந்திரிகளும், மதத் தலைவர்களும், கடந்தகாலத்தை மறந்துவிட்டு இலங்கை உண்மையானதொரு புதுப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்திவருகின்றனர். ஆகவே இலங்கை தொடர்பிலான புதியதொரு முகம் சர்வதேச அளவில் உருவாக்கப்படுகின்றது. அது எவ்வாறெனில், இலங்கை ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டது. அதனால் தமிழ் மக்களது 60 வருட அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுமின்றி அவர்கள் சந்தித்த அழிவுகளுக்கு பொறுப்புக்கூறலும் இன்றியே தீர்வு கிடைத்ததாக திருப்திப்படுமாறு அறிவுரை கூறப்படுகின்றது.

இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக சொல்லிக் கொள்ளும் கூட்டமைப்பினரின் தொடர் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன. சர்வதேச விசாரணைக்கு சாட்சியங்கள் வழங்குவதனை முடக்கிய கூட்டமைப்பு, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எவ்வித நிபந்தனைகளுமின்றி தமிழ் மக்களை மைத்திரிக்கு ஆதரவாக வாக்களிக்கக் கோரியதிலிருந்து இந்த முயற்சி வெளிப்படையாகியது. போரின் முடிவுக்குப் பின்னர் தமிழர்களுக்கு வாய்ப்பாக உருவாகிய சர்வதேச நிலைப்பாடுகளை பல்வேறு காரணங்களை சுட்டி பிரச்சினையை திசை திருப்பிவிட்டது கூட்டமைப்பு. எதுவுமில்லாத 13 சீர்திருத்த சட்டத்திற்கு அமைவான மாகாண சபையைப் பெற்றுக் கொண்டதன் ஊடாக தமிழர்கள் மீதான சர்வதேச கவனத்தை வேறுபக்கம் திருப்பிவிட்டது. இவற்றின் உச்சத்தைத்தான் இப்போது கூட்டமைப்பு அடைந்திருக்கின்றது. அதாவது இலங்கையில் ஜனநாயகம் மலர்ந்துவிட்டது, அதற்கு தமிழர்களும் முண்டுகொடுக்க வேண்டும் என்பதே அதன் தற்போதைய வேதமந்திரமாக உள்ளது. இப்போதே கூட்டமைப்பின் அனேக உறுப்பினர்கள் மைத்திரியின் 100 நாள் திட்டத்திற்கு வாக்காளத்து வாங்க ஆரம்பித்துவிட்டனர்.

இது ஒரு புறமிருக்க தேசிய அரசியலில் கூட்டமைப்பு பங்குபற்றுவதற்கும், அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இந்த நகர்வுகள் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையுடன் பரபரப்பாக வெளிவந்தாலும், ஏப்ரலில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை கவனத்தில் கொண்டு இப்போதைக்கு அமைச்சுப் பொறுப்புக்களைப் பெறுவதை இடைநிறுத்தி வைத்திருக்கிறது கூட்டமைப்பு. இந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் தமிழ் மக்களை வழமைபோலவே மூளைச்சலவை செய்து, கூட்டமைப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்கவேண்டும், தமிழர்கள் தேசிய அரசில் அங்கம் வகித்தாலே எலும்புத் துண்டுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற பரப்புரையை வெற்றிகரமாக மேற்கொள்ள ஊடகங்களும் தயாராகிவிட்டன. ஏற்கனவே சமூக வலைதளங்களில் புதிதாக முளைத்திருக்கின்ற திடீர் தமிழ் தேசியவாதிகள் கூட்டமைப்பு அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவேண்டும், தேசிய அரசில் இடம்பெற வேண்டும், கடந்த கால இனப்படுகொலையை மறக்க வேண்டும் என்று எழுதி வருகின்றனர். இதனூடாக, தமிழர்களின் அரசியலையும், இலங்கை அரசு காலம் காலமாக தமிழர்கள் மீது புரிந்த ஒடுக்குமுறையையும் இளைய தலைமுறையினரிடமிருந்து மறைத்து மோசமான மூளைச் சலவை செய்யப்படுகின்றது.

இவை அனைத்தும் சேர்ந்து சர்வதேச அரங்கில் என்ன மாற்றத்தைக் கொண்டுவரும் எனில், இலங்கையில் தமிழர்களது பிரச்சினை தீர்ந்துவிட்டது என்பதே ஆகும். அதாவது தமிழர்கள் கடந்த காலத்தை மறந்துவிட்டார்கள். அல்லது மன்னித்து ஒற்றுமையாக வாழத் தொடங்கிவிட்டார்கள். தமிழர்களின் தேசியமும், தேசிய உணர்வும் இலங்கைத் தேசியத்துக்குள் வந்துவிட்டது போன்ற கருத்துக்களாக வளர்ந்து, இங்கு இனப்படுகொலையே நடக்கவில்லை என்பதை பாதிப்புக்குள்ளான தமிழர்களின் வாயினாலேயே வாக்குமூலமாகப் பெற்றுக் கொள்வதில் வந்து முடியும். எனவே ஐந்து வருட முடிவிலோ அல்லது அதற்கு முன்னரோ தமிழர்கள் மீது நடத்தப்பட்ட, நடத்தப்படுகின்ற இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் மறைந்து போய்விடும். அதை உலகம் ஜனநாயகத்தின் முகத்தால் மறைத்து, மறந்து போகச் செய்வதற்கான நடவடிக்கைகளிலேயே கூட்டமைப்பு தற்போது இறங்கியிருக்கின்றது.



## ஒரே உறையில் பல பேரினவாதக் கூர் வாள்கள்

மைத்திரியும் ரணிலும் சேர்ந்து மந்திரி சபையை அமைத்தாலும் நாடாளுமன்றில் பெரும்பான்மை நிரூபிக்கப்பட வேண்டும். இப்போது தொண்டமானுக்கும், ஏனைய 'மனம் மாறாத' மகிந்த விசுவாச எம்.பிக்களுக்கும் சந்திரிகா வலைவீசிக் கொண்டிருக்கிறார். ஆறுமுகன் சென்னைக்கு எஸ்கேப். முதல் விசிட் இந்தியாவிற்கு என்று சொல்லியிருக்கிறார் 'ஜனநாயகக் காவலன்' மைத்திரி. அனேகமாக எம்.பிக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இது உதவலாம்.

மைத்திரியின் தேர்தல் வாக்குறுதியில் முதல் சறுக்கல் நிகழ்ந்திருக்கிறது. மந்திரிகளின் எண்ணிக்கை 25 இலிருந்து 30 ஆக உயர்வு. இன்னும் பல சறுக்கல்கள் வரிசையாகக் காத்திருக்கின்றன. அடுத்து, தேசியப்பட்டியல் ஊடாக மகிந்தரும் வரப் போகிறார். துணை நின்ற தானைத் தள-பதி தம்பிகள் நாட்டை விட்டு ஓடினாலும், மகிந்தரின் திமிர் அடங்கவில்லை. கோத்தாவின்நட்சத்திர துபாய் விடுதியில் பசில் தஞ்சம். அப்படியே அமெரிக்காவிற்குப் போகிறாராம். வாங்கிய தீவொன்றில் குடும்பத்துடன் கோத்தா. அண்ணன் நிலைமையைச் சீர்செய்தால், வெளிநாட்டுக் கணக்கு வழக்குகளை முடித்துக்கொண்டு தம்பிகள் நாடு திரும்புவார்கள்.

தாயக அரசியலைப் பார்த்தால், இப்போதைக்கு மந்திரிசபையில் இணையத் தேவையில்லை என்று சம்பந்தனார் சொல்லி விட்டார் போல் தெரிகிறது. அதனால் பதவிக்குக் காத்திருந்து, கங்குல் பகலாகக் கண் விழித்து ஓடியாடித் திரிந்த கனவான்களுக்கு தீராத சோகமாம். தேர்தலுக்கு முன் அமைச்சுப் பதவியைப் பெற்றால், உள்ளுக்குள் குழப்பம் உருவாகி ஏப்ரல் 20 (?)இல் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சரிவு ஏற்படலாமென்று அரசியல் சாணக்கியர் சம்பந்தன் கணித்திருக்க வேண்டும். மறுபுறத்தில், கூட்டமைப்பு வராவிட்டால் 'மூன்று' மிச்சம் என்று பெருமூச்சு விடுகின்றாராம் சந்திரிக்கா. உள்குத்தைச் சமாளிக்க இந்த 3 உதவும்.

இருப்பினும், கூட்டமைப்போடும் ஏனைய தமிழ் அரசியல் கட்சித் தரப்புகளோடும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தாமல், அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை விலகி நிற்கவே மைத்திரி அணி விரும்பும். அதேவேளை கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்த ஆட்சி ஏற்படுவதையும் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அதுவே, கிழக்கில் புலிகளின் ஆட்சி உருவாகிவிட்டது என்கிற எதிர்த்தரப்பின் இனவாதப்பிரச்சாரத்திற்கு வழி சமைத்து விடலாம். இந்த 100 நாட்களுக்குள், அதிகார,பதவிப்போட்டிகள் தீவிரமடையும். ஏனெனில்; சிங்கள மக்கள் மத்தியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் மகிந்த ராஜபக்ச. அவரின் அரசியல் நிலைபாட்டில் பௌத்த சிங்கள மேலாதிக்கக் கருத்து அதிகரிக்கும். அதற்கு ஈடுகொடுக்காவிட்டால், மைத்திரி அணியினர் ஆட்சி அமைக்க கூட்டமைப்பிலும், முஸ்லிம் காங்கிரசிலும், தொண்டமானிலும் தங்கியிருக்கும் நிலை ஏற்படலாம்.

இது மட்டுமல்ல மகிந்தரை வீழ்த்த, அரசியல் எதிரியான ரணிலுடன் கூட்டுச் சேர்ந்த சந்திரிக்கா , மங்கள சமரவீராவின் துணையோடு தனது செல்வாக்கினை அதிகரிக்க முற்படும் போது விரிசல்கள் ஏற்படுமென எதிர்பார்க்கலாம்.


இருப்பினும், தற்போதைய நிலையில், 'எம்.பிக்கள்' வைத்திருக்கும் கட்சிகளுடன் மட்டுமே மைத்திரி அணி பேசும். 100 நாட்களைத் தாக்குப் பிடிப்பதற்கு இது அவசியம். இப்போது மைத்திரி அணிக்கு இரண்டு தெரிவுகள் மட்டுமே எஞ்சியுள்ளது.

1. மகிந்த பக்கத்து எம்.பிக்களை இழுத்து நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் காட்ட வேண்டும்.
2. 'தேசிய அரசாங்கம் அமைப்போம் வாருங்கள்' என்று மகிந்த எம்.பிக்களை உள்ளே இழுக்க வேண்டும்.

இந்த இரண்டாவது அறிவிப்பினை (11/1/2015) மைத்திரி வெளியிட்டுள்ளார். இதனைக் கடந்து செல்லும் போதுதான் பல மாறுதல்களை நாம் தரிசிப்போம்.

# வாசகர் கருத்து



## சிந்தித்து வெளியாகும் ஒரேயொரு இதழ்

தற்காலத்தில் நிலவுகின்ற அரசியல் தொடர்பான கருத்துக்களையும் அதன் நிலைப்பாட்டினையும் வெளிப்படையாகக் கொண்டு வரும் பத்திரிகையாக "இது நம்தேசம்" காணப்படுகிறது.

சமகாலத்தில் இந்தப் பத்திரிகையின் வளர்ச்சி பாராட்டுக்குரியதே. பல்வேறுபட்ட ரீதியில் மாற்றங்களை தொடர்ச்சியாக வெளிக்கொண்டுவரும் இந்த இதழ் தமிழ்த் தேசத்தின் உண்மை நிலையைக் கண்முன்னே கொண்டுவந்து காட்டுகின்றது.

தைமாதம் 24ஆவது இதழ் பல விடயங்களைத் தாங்கி வெளிவந்திருந்தது. மகிந்த மற்றும் மைத்திரி நிலைப்பாடு, கூட்டமைப்பும் அதன் தேர்தல் நிலைப்பாடுகளும், தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் என பல விடயங்களைத் தாங்கி சென்ற இதழ் வெளிவந்திருந்தது. அதேபோல் அதற்கு முந்திய இதழும் தேர்தல் நிலைப்பாட்டின் பல அம்சங்களை வெளிப்படுத்திய இதழாகவே காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியான நிலைப்பாடுகளே 24வது இதழும் கொண்டிருந்தது. இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் அம்சங்களைப் பல கோணங்களில் சிந்தித்து வெளியாகும் ஒரேயொரு இதழ் இது நம்தேசம் பத்திரிகை ஆகும்

ஹிசானி
மாதகல்

# நம் தலையில் நாமே போட்டுக் கொண்ட மண்

- பாமரன் -

தேர்தல் முடிந்தாயிற்று கூட்டமைப்பும், அனேக ஊடகங்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தமிழ் மக்களின் ஜனநாயகக் கடமையும் நிறைவேற்றப்பட்டாயிற்று. இனியென்ன நடக்கும். மக்கள் அவரவர் தொழிலையும், வாழ்க்கையும் பார்த்துக் கொண்டு கிளம்பி விடுவர். வாக்குகேட்டு வந்தவர்களும் அரசுக்கு முண்டு கொடுக்கப் போய் விடுவர். இந்த இரண்டுக்குள்ளும் நடக்கும் மோதல்களும், காயங்களும், வெட்டுக்குத்துக்களும், பதவி ஏற்ற இறக்கங்களும், முழக்கங்களும் தான் இனி-வரும் 5 வருட காலத்துக்குள் நடைபெற இருப்பவை. இவற்றை மட்டுமே தமிழர்களாகிய நாம் அறிந்துகொள்வோம். ஆனால் இதனையும் தாண்டி நம்மைச் சூழ நடக்கப் போகின்றவைகளையும், நம் தலையில் நாமே மண் அள்ளிப் போட்டுக் கொண்டதையும் இனிவரும் காலங்களில் தான் நாம் உணரப் போகின்றோம்.

### அது எப்படி?

இனி எங்களை நோக்கி ஒரு மாயையான வசந்த காலம் ஒடிவரும். விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் ஓமந்தை சோதனைச் சாவடிகளைக் கடந்து எம்மை நோக்கி வந்த அந்த மாயையைப் போல அது பல வர்ணங்களில் இருக்கும். 2002 ஆம் ஆண்டில் இப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் செய்த ஒப்பந்தந்தின்படியே அந்த வசந்த காலம் நமக்குள் ஊடுருவியது. ஆனால் அது நம்மை நந்திக் கடலில் எரித்துக் கொல்லும் என்ற விழிப் புணர்வு ஏதுமின்றி வசந்த காலத்தைக் கொண்டாடினோம். 4 வருடங்களுக்குள் சுருண்டு போன வசந்தம் நம் முழு யுகத்தையும் நாசம் செய்ததோடு முடிவுக்கு வந்தது. எங்கள் ஆத்மாவாக இருந்தவர்கள் மௌனித்தார்கள். அரசியல் அநாதைகள் ஆனோம், துயரமான மீதிக் காலத்தை ராஜபக்ஷ தத்தெடுத்துக் கொண்டார். அவரின் 10 வருட ஆட்சி மேலும் மேலும் துயரங்களையே அவிழ்த்தது. எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு தராது, சிங்கள பேரினவாத மன நிலையிலேயே நம்மை அணுகினார். ஆனாலும் ராஜபக்ச எம்மை ஒடுக்க ஒடுக்க நாம் சர்வதேச ரீதியில் பலம்பெற்று வந்தோம். தமிழகம் நமக்காதரவாகத் திரண்டு நின்றது. நமக்கும், தாய்த் தமிழகத்துக்குமிடையிலான உறவு இரத்தத் தொடர்ச்சிக்கு அப்பால், போராட்டத் தொடர்ச்சியாகவும் பரிணாமம் பெற்றது. புலம்பெயர் தளம் நம் போராட்டத்தின் நியாயமான பக்கங்களை ஐ.நா வரை கொண்டு சென்று நீதி கேட்டது. தமிழர் பக்கம் உண்மையிருக்கிறது என்றும், அதற்கு சரியான நீதி கிடைக்க வேண்டும் என்றும் சர்வதேச அரங்கமே நம் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கையில் இந்தப் பெருமாற்றத்தை நாம் நிகழ்த்தியிருக்கிறோம். அதுவே இலங்கையின் ஆட்சி மாற்றம். ஆட்சி மாற்றம் எனில் வசந்த காலத்தைக் காட்டி நம்மை பொறிக் கிடங்கில் வீழ்த்தியவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறோம். அவர் யாரெனில் நம் பக்கமும், நம் நீதியின் பக்கமும் மெல்லத் திரும்பிய உலகத் தவரின் பால்யகால ஆத்ம நண்பன். இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரசிங்க. அவர்களின் நட்பின் முன்னால் நமது பிரச்சினைகள் எல்லாம் ஒரு தூசு தான். எனவே இனி நமக்கு தீர்வு எழுதப் போவதற்கும், அதனை இலங்கையை நோக்கி வற்புறுத்துவதற்கும் யார் உளார்?


இதுவரை காலமும் அரசிலிருந்து விலகியிருந்து தமிழர் உரிமை பற்றியும், இனப்பிரச்சினை தீர்வு பற்றியும் பேசி வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகித்து, அமைச்சுப் பதவி-களை அலங்கரித்துக் கொண்டு இனப்பிரச்சினை தீர்வு குறித்துப் பேசப் போகிறார்கள் என்பதே இதன் அர்த்தம்.

### என்ன செய்வார் ரணில்?

ரணில் மீள் வரவு தமிழ்த் தேசிய அரசியலில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடனேயே ஆரம்பித்தது. ஆட்சி மாற்றம் என்ற ஒரே கோசத்தை முன்வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு, மனோ கணேசனின் புதிய ஜனநாயகக் கட்சி எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிற, சர்வதேச கவனிப்பை தமிழர் சார்பாகப் பெற்றுக் கொள்கின்ற கட்சிகளைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். நடந்து முடிந்த தேர்தலுக்கான பொது அணி படிப்படியாக முன்னேறி தேசிய அரசில் வந்து நிற்கிறது. அதாவது இதுவரை காலமும் அரசிலிருந்து விலகியிருந்து தமிழர் உரிமைபற்றியும், இனப்பிரச்சினை தீர்வு பற்றியும் பேசி வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகித்து, அமைச்சுப் பதவிகளை அலங்கரித்துக் கொண்டு இனப்பிரச்சினை தீர்வு குறித்துப் பேசப் போகிறார்கள் என்பதே இதன் அர்த்தம். மகிந்தவின் அடக்குமுறை காலத்திலேயே தமிழ் மக்களின் பக்கம் நின்று அரசியல் போராட்டங்களை, சுயநிர்ணயத்தைக் காப்பதற்கான வழிமுறைகளை செய்யாத கூட்டமைப்பினர் இனி வரும் மென்போக்கான, நெகிழ்வுத் தன்மையுடைய ரணிலின் காலத்திலா இதைப் பற்றியெல்லாம் கதைக்கப் போகிறார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பக்கம் வரும் அமைச்சுக்கள் தமிழ் மக்களுக்கு எவ்வாறான சேவை-களை வழங்கும் என்பதற்கு வட மாகாண சபையில் இருக்கின்ற அமைச்சுக்களே சிறந்த எடுத்துக்காட்டு. சிறு கல்லைத் தூக்கி வெளியில் போடுவதற்குக் கூட இடையூறாக இருக்கும் 13 ஆவது சீர்திருத்த சட்டத்தை தாண்டி மகாணாசபையால் எதுவும் செய்ய முடியவில்லை. இதுவரை வடக்கு கிழக்காக தனித்துவமாகப் பிரிந்து நின்ற தமிழ்த் தேசிய தன்மைகளை இலங்கை தேசியம், இலங்கை ஐக்கியம் என்ற பொது வரையறைக்குள் கொண்டுவரவே கூட்டமைப்பினரால் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குத் தமிழ் மக்களின் தேசிய, சுயநிர்ணய விடயங்களில் சிறிதளவேணும் அக்கறைகாட்டாத கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் மேலும் தூபமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நிகழ்ச்சி நிரலின் பின்னால் யார் இருப்பார் என்பதை தமிழர்கள் கண்பிடித்துக்கொள்ள அதிக நேரம் எடுக்காது.

தேசிய அரசியலில் கூட்டமைப்பு பங்கெடுப்பதிலிருந்து கூட்டமைப்பு விலகிக் கொண்டதாக மக்களுக்கு அறிவித்தாலும், அவர்கள் கடைப்பிடிக்கப்போகும் இரட்டை வேடம் தமிழ் மக்களை அதளபாதளத்திலேயே விழுத்தப் போகிறது. இந்த முறை நாம் தேசிய எண்ணமளவில் இருந்து கூட தப்பிக்கமுடியாது. 5 வருட முடிவில் நாம் அனைவரும் இருக்கின்ற எச்சசொச்சங்கள் அனைத்தையும் இழந்து சுதந்திர இலங்கையின் புதிய குடிமகன்களாக மாறியிருப்போம். தமிழர்களுக்கென்று எத்தகைய தனித்துவங்களும் இருக்கப்போவதில்லை. வரலாற்றில் அந்தப் பழியையும் கூட்டமைப்பே ஏற்க வேண்டும்.

**ரணில் மீள் வரவு தமிழ் தேசிய அரசியலில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடனேயே ஆரம்பித்தது. ஆட்சி மாற்றம் என்ற கோசம் தமிழ்த் தேசிய சக்திகளை இலங்கைத் தேசியம் என்பதற்குள் இழுத்திருக்கின்றது.**



# பேனாவைக் கொல்ல முடியாது



ஜனநாயகச் சமூகங்களின் அடிப்படையே கருத்துச் சுதந்திரம்தான். அந்தக்கருத்துச் சுதந்திரத்தின் மீது நிகழ்த்தப்பட்ட கொலை வெறித் தாக்குதல்தான் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகையின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல். அந்த இதழின் ஆசிரியர், கேலிச்சித்திரக்காரர்கள் நால்வர், காவலர்கள் இருவர் உட்பட 12 பேரைப் பயங்கரவாதிகள் கொன்றிருக்கிறார்கள். பேனாவுக்கு மாற்று பேனாதானேயொழிய, துப்பாக்கி அல்ல என்பதை உணராத அந்தப் பயங்கரவாதிகள், இந்தத் தாக்குதலின் மூலம் பிரான்ஸில் உள்ள அப்பாவி முஸ்லிம்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி விட்டார்கள்!

டேனிஷ் பத்திரிகையில் வெளிவந்து, பெரும் கலவரத்துக்குக் காரணமான முஹம்மது நபியின் கேலிச்சித்திரத்தை 2006 இல் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை மறுபிரசுரம் செய்து சர்ச்சைக்குள்ளானது. அப்போதிலிருந்து தொடர்ந்து அந்தப் பத்திரிகைக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அந்த நிலையில், 2011நவம்பரில் அந்தப் பத்திரிகை அலுவலகத்தின் மீது தீக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனாலும், அந்த அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் 2011 நவம்பரில் இஸ்லாம் மதத்தைப் பற்றிய ஒரு கேலிச்சித்திரத்தை அந்த இதழ் வெளியிட்டது.

'சார்லி ஹெப்டோ' இஸ்லாம் மதத்தை மட்டுமல்ல, கிறிஸ்தவம், யூத மதம் என்று எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிக்கும் அங்கதக் கட்டுரைகளையும் கேலிச்சித்திரங்களையும் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. சமீபத்தில், இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கேலிச்சித்திரமாக இதழின் அட்டையில் வெளியிட்டிருந்தது பெரும் எதிர்ப்புக்கு உள்ளானது. அதிகாரங்களையும் புனிதங்களையும் கடுமையாக விமர்சித்தல் என்பதும் கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படை அம்சம் என்றே அந்த இதழ் கருதுகிறது.

உலகின் பெரும்பாலான நாடுகளில் இது ஒரு பெரிய பிரச்சினை. படைப்புகளை உருவாக்குபவர்கள் கத்திமேல் நடப்பதுபோல் செயல்பட வேண்டியிருக்கிறது. இந்தியாவில் சமீபத்திய உதாரணங்களாக ஆமிர்கானின் 'பி.கே.' திரைப் படத்துக்கும் பெருமாள் முருகனின் 'மாதொருபாகன்' நாவலுக்கும் எழுந்த சகிக்க முடியாத எதிர்ப்புகளைக் குறிப்பிடலாம். தனது படைப்பின் எந்த விஷயம் யாருடைய மனதைப் புண்படுத்தக்கூடும் என்ற அச்சத்திலும் ஐயத்திலும் இருந்து கொண்டிருந்தால், எந்தப் படைப்பாளியாலும் படைப்பாக்கத்தில் ஈடுபட முடியாது.

தொடர்ச்சியான இது போன்ற தாக்குதல்களுக்குப் பிறகு உருவாகியுள்ள சூழலில், சில விஷயங்களில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களில் மிகவும் குறைந்த சதவீதத்தினரின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீது ஒட்டுமொத்தமாக முத்திரை குத்தி விடுவது ஆபத்தானது. இந்தச் சூழலில், சிட்னி தாக்குதலுக்குப் பிறகு ஆஸ்திரேலியாவில் உள்ள முஸ்லிம்கள் மீது வெறுப்பாளர்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தில் அங்குள்ள முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக 'நான் உங்களுக்குத் துணையாகப் பயணம் செய்கிறேன்' என்று உருவாக்கப்பட்ட ஹேஷ் டேகையும் அதன் அடிப்படையிலான ஆஸ்திரேலிய மக்களின் நன்னம்பிக்கைச் செயல்பாடுகளையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேபோல், பாரீஸ் தாக்குதல் நடத்தப்படுவதற்குச் சிலநாட்களுக்கு முன்னால் ஜெர்மனியில் முஸ்லிம்கள் மீது எழுந்துள்ள வெறுப்பைப் போக்கவும், அந்த மக்களுக்குத் துணைநிற்கும் விதத்திலும் மாபெரும் பேரணியை ஜெர்மானியர்கள் நடத்தினார்கள்.

நன்னம்பிக்கை மூலமாகத்தான் சமூகம் முன்னால் செல்ல முடியுமே தவிர, வெறுப்பின் மூலமாக அல்ல என்பதற்கு இந்த இரண்டு சம்பவங்களும் சரியான எடுத்துக்காட்டுகள்.

## நீங்களும் எழுதலாம்

கவிதைகள் எழுதும் புதிய படைப்பாளிகளை ஊக்குவிப்பதற்காக "நீங்களும் எழுதலாம்" என்னும் கவிதைப்பகுதி அடுத்த இதழ் தொடக்கம் ஆரம்பமாகின்றது. கவிதைகள் அனுப்பும் படைப்பாளிகள் 12 தொடக்கம் 15 வரிகளுக்குள்எழுதுமாறு வேண்டப்படுகின்றனர். தரமான கவிதைக்கு பசில்கள் வழங்கப்படும்.


அனுப்பவேண்டிய முகவரி
"நீங்களும் எழுதலாம்"
இது நம்தேசம், 43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

2 ஆம் பக்க தொடர்ச்சி

**உண்மையைச்........**

தீர்வில்லை, புதிய அரசிடமும் தீர்வில்லை. வடக்கு, கிழக்கு முழுவதிலும் வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகள் இறுதிப் போரின் போதோ, அல்லது அதற்கு முன்னரோ காணாமல் போயிருக்கின்றனர். பாதிரியார் ஜிம் பிறவுண் அவர்களும் இதில் உள்ளடக்கம். எனவே நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கை வரும் சர்வதேச மதத்தலைவரான பாப்பரசர் இந்த விடயத்தில் ஆழமான கவனத்தை செலுத்த வேண்டும். இந்த விடயத்தை இலங்கையில் இருக்கும்போது கவனியாதுவிட்டாலும் வத்திக்கான் சர்வதேச அளவில் இது குறித்த கவனார்ப்பு ஒன்றை பாப்பாரசர் கொண்டு வரவேண்டும்

# அமுதவாக்கு



1988ல் மாகாணசபைகள் ஆரம்பிக்கப்பட்ட போது நியதிச்சட்டங்கள் இருக்கவில்லை. மாகாண-சபைப் பட்டியல் மற்றும் ஒத்தியங்கு பட்டியல் தொடர்பாக பாராளுமன்றம் சுமார் 300 சட்டங்களை அங்கீகரித்திருந்தது. ஆனால் அச்சட்டங்களை மாகாணசபைகள் பயன்படுத்த முடியாது.

**கலாநிதி. ஜயம்பதி விக்ரமரட்ண**

ஒரு இனக்குழுமம் மற்றுமோர் இனக்குழுமத்திற்கு தொந்தரவு செய்ய முடியாது. அவர்களை அழிக்க முடியாது இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால் எதிர்காலத்தில் நீடித்து நிலைக்கக் கூடிய பரஸ்பர பகைமையை உருவாக்குவதற்கும், வளர்ப்பதற்கும் அது காரணியாக அமையும்.

**எம்.எஸ்.அஜீப்**

முஸ்லிம் இனத்திற்கு எதிரான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெற்றால் அதற்கு பதிற்குறி காட்டநேரிடும் என அரபு நாடுகளின் தூதுவர்கள் இலங்கை ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர்.



**கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து.**

விதைகள் விவசாயிகளின் மரபுரிமைகள் ஆகும். ஒரு தேசத்தின் உணவுப் பேணுகையின் அடித்தளமாகும். இதனைச் சில அரச அதிகாரிகளின் அல்லது பன்நாட்டுக் கம்பனிகளின் ஏகபோகத்திற்கு அடிமைப்படுத்துவது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

**கலாநிதி. லயனல் வீரகோன்**


சுமார் 70ஆண்டு காலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே ஓர் போர் மூழாவிட்டாலும் வேறுநாடுகளிலும் நாடுகளுக்குள்ளும் மோதல்கள் குறைந்தபாடில்லை. ஐரோப்பாவின் சக்திவாய்ந்த பொருளாதாரம் ஏனைய நாடுகளைச் சுரண்டும் வியாபார உபாயங்கள் மூலமே உருவாக்கப்பட்டிருந்தன.

**சட்டத்தரணி
எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

# மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பிரதிபண்ணிய கூட்டமைப்பு

-பூரணன்-

**மேற்குலகத்தையும், இந்தியாவையும் பொறுத்தவரை இரண்டு வேலைத்திட்டங்கள் உள்ளன. ஒன்றுஆட்சிமாற்றத்தைக் கொண்டுவருவது, இரண்டாவது தனக்குச் சாதகமானஆட்சியைப் பாதுகாப்பது. இரண்டிற்கும் முக்கியமான நிபந்தனை தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியடையவிடாமல் அடக்கிவைப்பது.**




ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்துள்ளது. கூட்டமைப்பு மைத்திரி ஆதரவு நிலை எடுத்தமைக்கு மேற்குலகினதும் இந்தியாவினதும் அழுத்தம் தான் பிரதான காரணம். இவை ஆட்சி மாற்றத்தினை விரும்புகின்றன என்பது கடந்த சில வருடங்களாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்று தான்.

மேற்குலகத்தையும், இந்தியாவையும் பொறுத்தவரை இரண்டு வேலைத் திட்டங்கள் உள்ளன. ஒன்று ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவருவது, இரண்டாவது தனக்குச் சாதகமான ஆட்சியைப் பாதுகாப்பது. இரண்டிற்கும் முக்கியமான நிபந்தனை தமிழ்த்தேசிய அரசியல் எழுச்சியடையவிடாமல் அடக்கிவைப்பது. தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியடைந்தால் இந்த இரண்டு வேலைத்திட்டங்களையும் நகர்த்துவது அவற்றிற்கு கடினமாகிவிடும் இதனால் தாயகம் தேசியம் சுய நிர்ணயம் என்ற தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படை எண்ணக்கருக்களை கைவிடுமாறு வலியுறுத்தி வந்தன. போராட்டங்கள் எதுவும் நடாத்த வேண்டாம் எனவும் அழுத்தம் கொடுத்து வந்தன.

சம்பந்தன் தலைமை அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு கட்சியை வழி நடத்தி இருந்தது. தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியகோசங்கள் உச்சரிக்கப்பட்டன. ஏனைய காலங்களில் அவற்றைத் தவிர்த்துக்கொண்டனர். பல்வேறு ஆக்கிரமிப்புக்கள் பச்சையாக இடம்பெற்ற போது போராட்டங்கள் நடாத்துவது பற்றி அக்கறைப் படவில்லை. இவர்களை மீறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டங்கள் நடாத்திய போது வாக்கு கிடைக்காது என்பதற்காக தாங்களும் போட்டிக்கு போராட்டங்களை நடாத்த முற்பட்டனர். அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டங்களில் முகங்களைக் காட்டினர். இப்போராட்டங்களில் மறந்தும் கூட சம்பந்தன், சுமந்திரன், விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வதில்லை. இவை தவிர இனஅழிப்பு என்றதீர்மானம்வடமாகாணசபையில்நிறைவேற்றுவதை தடுத்தனர். ஜெனீவா விசாரணைக்கு சாட்சியங்களை வழங்குவதில் எந்த அக்கறையையும் செலுத்தவில்லை. இவற்றுக்கெல்லாம் காரணம் மேற்குலகமும் இந்தியாவும் நகர்த்தும் நிகழ்ச்சி நிரலை குழப்பக்கூடாது என்பதே.

ஆட்சிமாற்றம் வந்த பின்னரும் அந்த- ஆட்சியை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக தமிழ் அரசியல் எழுச்சி அடைவதை அவை விரும்பவில்லை. இதனால் அமைக்கப் போகும் தேசிய அரசாங்கத்தில் கூட்டமைப்பிற்கும் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக் கொள்ளும் சாத்தியங்கள் உள்ளது. இந்தியாவில் இவை பற்றி பேச முயற்சிக்கப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

வடமாகாண சபையின் ஆளுநர் சந்திரசிறீ மாற்றப்படுப்படுவார். ஏனெனில் எந்தவொரு புதிய அரசும் முக்கிய அதிகார மிக்க பதவிகளில் தனக்கு நம்பிக்கையானவர்களை நியமிப்பதே வழக்கம். அதனால் ராஜபக்ஷ விசுவாசியான ஆளுநர் மாற்றப்படுவது இயல்பாகவே நடைபெறக்கூடிய வாய்ப்புள்ளது. அதனை தமது சாதனையாக கூட்டமைப்பினர் மக்களுக்கு காட்டிக் கொள்ள முடியும். காணி, பொலீஸ் அதிகாரம் கொடுக்கப்பட மாட்டாது. மத்தியில் மூன்று அமைச்சர்களும் வடமாகாணசபையும் தான் அரசியல் தீர்வு. அவற்றுடன் திருப்திப்பட்டுக் கொண்டு போக வேண்டும் என்றே மேற்குலகும் இந்தியாவும் எதிர்பார்க்கின்றது. தமிழ் மக்களை அமைதிப்படுத்துவதற்காகத் தான் ஜனவரியில் போராட்டம் ஆரம்பமாகும் என மாவை அறைகூவல் விடுத்தார். இனியென்ன தீர்வு வந்து விட்டது தானே போராட்டங்கள் எதுவும் தேவையில்லை என மாவை அறிவிக்கலாம்.



இந்தியாவினதும் மேற்குலகத்தினதும் ஆட்சி மாற்ற இலக்கிற்கு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே தீர்மானம் எடுக்கும் பொறுப்பை சம்பந்தன் தன் கையில் வைத்திருக்கின்றார். கட்சிகளின் குழு, பாராளுமன்றக்குழு, தமிழ் அரசுக்கட்சி செயற்குழு எல்லாமே பெயருக்குத் தான். தீர்மானங்களை சம்பந்தன் தனித்தே எடுக்கின்றார். எடுத்த பின் எப்பாடுபட்டாவது கட்சியை அதற்கேற்றபடி கொண்டுவந்து விடுகிறார்.

தன்னுடைய தீர்மானத்தை கட்சியை துரிதமாக ஏற்க செய்வதற்காக தமிழ்த் தேசிய அரசியல் போராட்டங்களோடு எந்த வகையிலும் தொடர்புபடாதவர்களை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்கின்றார். முதலில் சுமந்திரன் கொண்டுவரப்பட்டார் பின்னர் விக்கினேஸ்வரன் கொண்டுவரப்பட்டார். தற்போது தமிழரசுக் கட்சியூடாக ஒருவரை கொண்டுவர முயற்சிக்கின்றார்.

சம்பந்தன் தலைமை மைத்திரி பால சிறிசேனாவிற்கு ஆதரவு கொடுப்பதை நியாயப்படுத்தும் வகையில் சப்பைக் கட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் தமிழ் மக்களுக்கான உத்தரவாதங்கள் எவற்றையும் காணவில்லை. மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அப்படியே பிரதிபண்ணிய ஒன்றாகவே இருந்தது.

சட்டத்தின் ஆட்சியைக் கொண்டு வருதல், நீதித்துறைச் சுதந்திரத்தைப் பேணுதல், பாரளுமன்றத்தை வலுவுள்ளதாக்குதல் என்பவை பற்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்கும் தமிழ் மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றியோ, என்ன நன்மை என்பது பற்றியோ தெளிவேதுமில்லை. நடைமுறையிலுள்ள சட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவை. இந் நிலையில் சட்டப்படி ஆட்சி நடைபெறுவதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது. சிறீலங்காவின் நீதித்துறை என்பது வரலாற்று ரீதியாகவே தமிழ் மக்களை வஞ்சித்த நீதித்துறை இது பற்றிய வரலாற்று அனுபவங்கள் தனிச்சிங்களச் சட்டத்திலிருந்து சுனாமி, பொதுக்கட்டமைப்பு நீக்கம் ஊடாக வடக்கு - கிழக்குப் பிரிப்பு வரை நிறையவே இருக்கின்றது. இந்த நீதித்துறை சுதந்திரமாக இருப்பதால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது? இவை தவிர தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்கள் எல்லாவற்றையும் இந்தப் பாராளுமன்றமே நிறைவேற்றியது. இது எப்படி தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கமுடியும்.

இங்கு மகிந்தரின் அரசாங்கம் மட்டும் தான் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை என்கின்ற வகையில் ஒரு மாயை கட்டியெழுப்பப்படுகின்றது. இங்கு மகிந்தர் அரசாங்கம் மட்டும் பிரச்சினை அல்ல. மாறாக சிறீலங்கா அரசே பிரச்சினை. சிறீலங்கா அரசுருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்த தூண்கள் தான் பிரச்சினை. இந்த அரசுருவாக்கக் கட்டமைப்பு இருக்கும் வரை ஆட்சிக்கு வருகின்ற எல்லா அரசாங்கங்களும் தமிழ் மக்களை ஒடுக்குகின்ற நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்ளும். இவையொன்றும் நீண்ட அரசியல் வரலாறு படைத்த சம்பந்தன் தலைமைக்குத் தெரியாததல்ல. அத் தலைமை தமது எஜமான்களின் நலன்களைப் பேணுவதற்காக மக்கள் முன்னால் நாடகமாடுகின்றது.

பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் பற்றிய விவகாரங்கள் எவற்றையும் உள்ளடக்க வேண்டாம் என தான் கூறியதாக சுமந்திரன் குறிப்பிடுகின்றார். இவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளின் தலைவர்களா? அல்லது தமிழரசுக் கட்சியின் செயற்குழுவா? கட்சிகளின் கூட்டமைப்பும், கட்சியின் செயற்குழுவும் இருக்கும் போது சுமந்திரன் மட்டும் தீர்மானம் எடுப்பது எந்த வகை ஜனநாயகம்? சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற போதும், பொது எதிரணியின் தலைவர்களுடன் கூட்டமைப்பின் தலைவர்கள் பேசச்செல்லும் வரை அவருக்கு இந்தத் தகவல் தெரிவிக்கவில்லை.

18ஆம் பக்கம் பார்க்க)

**வ**ணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

வேண்டாம் வேண்டாமெண்டு படிச்சுப்படிச்சு சொன்னாலும் கேட்காமல் வேலியில போற ஓணானை பிடிச்சு வேட்டியுக்குள்ள விட்டாச்சு. இனி குத்துது குடையுதெண்டு ஆளாளுக்கு கத்தித்தீக்க வேண்டியது தான்.

ஏற்கனவே பொது வேட்பாளரான, இன அழிப்பு கூட்டுப்பங்காளி ஜெனரல். சரத் பொன்சேகாவை கொண்டு வரமுற்படு கையில கத்தித் தீர்த்தம். கண்டு கொள்ள வேயில்லை. மிச்சமென்ன மகிந்தவிற்கு தெற்கில சனம் வாக்குகளை அள்ளிப் போட்டுதுகள். அது போதாதெண்டு வட-கிழக்கு சனம் தன்னோடைதான் நிக்குதெண்டு மாகாணசபை தேர்தலில் ஜெனரல்




சரத்பொன்சேகா பின்னாளில் பிதற்றிக் கொண்டு திரிஞ்சார்.

அதேபோல மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டது போல, மாகாணசபைத் தேர்தலில போட்டியிட்டால் என்ன சூழல் உருவாகிப்போடுமெண்டு சொல்லச் சொல்ல, முட்டி மோதி போட்டியிட்டினம். கொழும்பில் பென்சன் எடுத்துப் போட்டு சிவனே என்றிருந்த ஆளை இழுத்து வந்து முதலமைச்சர் கதிரையில ஏற்றி இருக்கவைச்சினம். அந்த ஆளோ மாகாண சபையில ஒன்றுமில்லையெண்டு பக்கம் பக்கமாக எழுதிவந்து வாசிச்சுக் கொண்டிருக்குது. மற்றப் பக்கம் அதில எல்லாம் இருக்கிற மாதிரி அதை முழுசா அமுல்படுத்த வேணும் எண்டு இராச தந்திரியளுக்கு கதைவிடுது.

ஆனால் ஒண்டுமே கிள்ளிப்போட முடியாதிருக்கிறதாக இவையள் மாகாண சபையில இருந்து அறிக்கையளை அள்ளி வீசுறது சனங்களிற்கு மட்டும்தான் பாருங்கோ. அவையள் ஆளாளுக்கு மாதாந்தம் இலட்சத்தில வருமானம், கோடி ரூபாக்களில சொகுசு காரெண்டு தூள் பறக்கினம். முதலமைச்சர் வீட்டு சமையல்கார அம்மா மீன் வாங்கப்போறதும் அதிலதானாம். ஏன் அவரிட்ட தனிப்பட்ட செயலாளரின்ர குடும்பம் சுற்றுலா போறதும் அதிலதானாம். ஆனால் புள்ளடி போட்ட சனத்திற்கு மட்டும் அறிக்கை அறிக்கையாக விட்டு பட்டை நாமம்தான் சாத்துவினம். அதுவும் இன அழிப்புத் தீர்மானம் நிறைவேற்ற விடமாட்டினம், சுன்னாகம் தண்ணீர் நாசமாகிய விவகாரத்தை ஒரு பேரனர்த்தமாக பிரகடனப் படுத்திற மாதிரி உருப்படியான தீர்மானங்களையும் எடுக்க மாட்டினம். சுற்றுச் சூழல் பாதுகாப்பு எண்ட பேரில பாதீனியம் புடுங்கிற ஆக்களும் சுன்னாகம் தண்ணீர்ப் பிரச்சினையை கண்டு கொள்ள மாட்டினமாம்.

இப்ப மைத்திரியர் கதிரை ஏறினாப் பிறகு அமைச்சுக்கு பங்கு கேட்டு புடுங்குப் படப்போகினம் பாருங்கோ. தேசியப்பட்டியல் காரர் நாங்கள் அமைச்சுப்பதவி கேட்க மாட்டமெண்டு வெளியில சொல்லிக்கொண்டு திரிஞ்சாலும், அவரும், சிங்கக்கொடி காத்த வீரனும் தேசிய அரசு அமைப்பதில் அழைப்பு விடுத்தால் பரிசீலிக்கலாம் எண்டு அறிக்கை விட்டிருக்கினம் தங்கட அரசாங்கத்தோட இருவது வருசமா இருக்கிற தாடிக்கார அமைச்சர் தம்பியை கைவிடமுடியாதெண்டு அவருக்கும் எலும்புத் துண்டு ஒண்டு கொடுக்க வேணும் எண்ட நிலைப்பாட்டில தான் மைத்திரியரும் இருக்கிறதாக கேள்வி.

பிறகென்ன இனி இணக்க அரசியல் தான் பாருங்கோ. இடையிடையிலவாற தேர்தல் காலத்தில் மட்டும் தேசியம், சுயநிர்ணயமெண்டு இரண்டொரு வார்த்தைகளை அள்ளி எடுத்துவிட்டால் சரி. சனமும் பாவம். எல்லாவற்றையும் மறந்துபோட்டு போடு புள்ளடி கொடிகாத்த வீரனிற்கோ, அல்லது சாத்வீக அறிக்கை போராட்ட தளபதிக்கோ என்று குத்திப்போட்டு போக வேண்டியது தான்.

ஆனாலும் நடந்து முடிஞ்ச ஜனாதிபதித் தேர்தலில வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் அளிச்ச வாக்கு, மகிந்தவை வீட்டிற்கு அனுப்புவோமெண்ட கோசத்திற்காக எண்டதைப் புரிஞ்சு கொள்ளுங்கோ.

இந்த ஆட்சிமாற்றம், தமிழ் மக்களிற்கு சின்னச் சின்ன இடைக்கால நிவாரணங்களை சிலவேளைகளில தரலாம். மைத்திரி தனக்கு விசுவாசமானவர்களை உயர் பதவில இருத்தும்போது மகிந்த விசுவாசியான சந்திரசிறியையும் வீட்டுக்கு அனுப்பிட்டு புதிய தனது விசுவாசி ஒரு நியமிக்கும்போது அதையும் தங்கட சாதனையா காட்டுவினம் எங்கட அரசியல் தலைமையள். அவை இப்ப அமைச்சரவைப் பங்கெடுப்புப் பற்றியே பேசிக் கொண்டிருக்கினம். எத்தனை வருட போராட்டத் தியாகம் ஆளுநரை மத்திறதிற்கும் அமைச்சரவையில சீற் பிடிக்கிறதிற்கும் எண்டாகிப்போச்சு.

எது எப்படியிருந்தாலும் மகிந்தவை வீட்டிற்கு அனுப்பி மைத்திரியை கதிரையில ஏற்றினதோட சர்வதேச சமூகம் எங்களை மறந்து போகுதெண்டது மறுக்கமுடியாத உண்மை. அதிலயும் நீங்கள் அள்ளிப்போட்ட வாக்கால வெண்டு வந்த மைத்திரியெண்ட அடையாளமும் குத்தியாச்சு. அவரிட்டயே கேட்டு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கோவெண்டு அதே சர்வதேச சமூகம் இனிக் கையை விரிக்கப்போகின்றது. தேர்தல் வெற்றிக்கு முன்னதாகவே வடக்குப் பத்திரிகையாளர்களை சந்திச்ச ரணில் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கலே தீர்வெண்டும் வேறையொன்றும் இல்லையெண்டும் சொல்லிப் போட்டார். எங்கட கொடிகாத்த வீரனும் டெல்லியில் ஞானஉபதேசம் கேட்டுப்போட்டு வந்து மாகாண சபைகளிற்கு அதிகாரப்பகிர்வெண்டு அறளை பேந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்காக அரசியல் தீர்வின் ஆரம்பப்புள்ளியாகக்கூட ஏற்றுக் கொள்ள முடியாதெண்டு தமிழ்த்தேசியத் தலைமை நிராகரித்த மாகாணசபை முறைமையை இப்ப நாங்கள் ஏற்றுக் கொள்ளச் சொல்லி ஆலோசனைகள் சொல்லுகினம். எங்கட தலையில நாங்களே மண் அள்ளிப் போட்ட கதைதான் இது. ●

# நையாண்டியார் பதில்கள்



*ரமேஸ் – நெல்லியடி*

**கேள்வி :** தமிழர்களின்ர வாக்குகள திரட்டிக் கொடுக்கிறதுக் கான கூலியாக கூட்டமைப்பு ஆக்கள் ஆளுங்கட்சியிட்ட கட்டுக்கட்டா பணம் வாங்கிச்சினமாமே, உண்மையா?

**பதில் :** வாங்கின செய்தி உண்மைதானம் எண்டு கதைக்கிறாங்கள். பங்கு பிரிக்கிறதில பிரச்சினையாம். அதில வந்த சண்டையிலதானாம் தகவல் வெளியில கசிஞ்சது.

*நந்தன் – நுவரேலியா*

**கேள்வி :** இப்ப மனோ கணேசன் ஏன் கொதிக்கிறார்?

**பதில் :** எங்கட உத்தியோகத்தர்மார் வீட்டில மனுசீல உள்ள கோபத்த, அலுவலகத்தில உள்ள எழுதுவினைஞனிட்ட காட்டுற மாதிரித் தான் இதுவும். இதை முன்னரே யோசிச்சிருக்கவேண்டும்.

*ரஜேஸ் – பூநகரி*

**கேள்வி :** வடக்கு ஆளுநர் எப்பிடியிருப்பார்?

**பதில் :** தெரிந்தபேய் போக தெரியாத பிசாசு வருகுது அவ்வளவுதான்.

*மதி – கிளிநொச்சி*

**கேள்வி :** சுரேஸ் பிரேமச்சந்திரன் எண்டொரு எம்.பி கூட்டமைப்பில இருக்கிறார் தானே. அவர் இப்ப என்ன செய்யிறார்

**பதில் :** ஆள் கட்சிக்குள்ள தான் இருக்கிறார். முடிவுகள உடன எடுத்துப்போடுவார். ஆனால் மிகத் தாமதமாகத் தான் அறிவிப்பார். தேர்தலில் வாக்களிச்சிப் போட்டு சொன்னார், தனக்கு இந்த வாக்களிப்பில நம்பிக்கையில்லயாம். இதால ஒரு மாற்றமும் நடக்கப் போறதில்லையாம். இதை வாக்களிக்க முதலே சொல்லியிருக்கலாமே. ஆளுக்கு சம்பந்தன்(இந்தியா) எண்டால் சரியான பயமாம் பாருங்கோ..!

*தயா – கொடிகாமம்*

**கேள்வி :** யாழ்ப்பாண கம்பஸ் பக்கம் என்ன நடக்குது?

**பதில் :** டக்கிக்கு துதிபாடும் பேரவைய மாத்துறதுக்கு தீவிர ஆலோசனை நடக்குதாம்.

*சங்கவி – வவுனியா*

**கேள்வி :** இனி எண்டாலும் கடிதம் எழுதுற வேலைக்கு முடிவு காலம் வருமா?

**பதில் :** உலகம் எவ்வளவு நவீனப்பட்டாலும் இப்போதைக்கு முடிவு வராது என்றே நினைக்கிறன். கிட்டடியில கூட ஆனந்த சங்கரி புதிய ஜனாதிபதிக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். அப்பிடி எண்டால் கடிதத்துக்கு முடிவில்லை.


## "இது நம்தேசம்" சந்தா விண்ணப்பம்

இது நம்தேசம் பத்திரிகையை அஞ்சலில் பெற விரும்புவர்கள் சந்தாவிற்கு விண்ணப்பிக்கலாம்.

**12 இதழ்களுக்கு 600 ரூபா**

தொடர்புகளுக்கு :- ஆசிரியர்
'இது நம்சேதம்
இல.43 - 3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் :- 021 222 3739

மின்னஞ்சல் :- ithunamthesam@gmail.com

**மாதிரி விண்ணப்பபடிவம்**

பெயர் :......................................................................

முகவரி :......................................................................

தொழில் :......................................................................

தொலைபேசி இலக்கம் :......................................................................

மின்னஞ்சல் முகவரி :......................................................................

.................................. ..................................

திகதி கையொப்பம்

# எத்தனை நாள் துயின்றிருப்பாய்.. என்னருமைத் தாய்மண்ணே..!

**எனது கிராமத்தைச் சேர்ந்த 128 பேர் இராணுவத்தினரால் வெட்டிக்கொலை செய்து சூட்டுக்களவட்டுக்குள் போட்டு நெல்லுச் சாக்கை சடலங்கள் மேல் அடுக்கி, வைக்கோலை அள்ளிக்குவித்துத் தீயிட்டுக் கொழுத்தினர். இவர்களில் பலருடைய உடல்கள் அரைகுறையாகவே எரிந்த நிலையில் கிடந்தன.**

● எஸ்.ஜெயானந்தமூர்த்தி





அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் பல தமிழ்க் கிராமங்களில் மனிதப் படுகொலைகள் இடம் பெற்றன. இராணுவத்தினர் இந்தக் கிராமங்களில் பொதுமக்களை வகை தொகையின்றிக் கொலை செய்ததுடன் மக்கள் வாழ முடியாதவாறு அந்தக் கிராமங்களையும் அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட கிராமங்களில் கடுமையான உயிர் உடமை பாதிப்புகளைச் சந்தித்தது உடும்பன்குளம் கிராமம்.

உடும்பன்குளம் கிராமத்தில் கடந்த 1986.02.19 ஆம் திகதி இராணுவத்தினர் 128 பொதுமக்களை வெட்டிக் கொலை செய்ததுடன் சடலங்களைத் தீயிலிட்டு எரித்த கோரச் சம்பவம் இடம்பெற்றது. இந்தப் படுகொலை இடம்பெற்று 28 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

உடும்பன்குளம் கிராமம் திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாகத்திற்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ளது. இந்தப் பிரிவில் பாலக்கரச்சி என்னும் மற்றொரு கிராமமும் அடங்கியுள்ளது. உடும்பன்குளம் கிராமத்தில் சுமார் 175 குடும்பங்கள் உட்பட இந்தப் பகுதியில் 462 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

உடும்பன்குளம் கிராமத்தில் இந்தப் படுகொலை நடந்ததையடுத்து அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் அங்கு ஏற்பட்ட அச்சம் காரணமாக ஏனைய தங்கவேலாயுதபுரம், பாலக்கரச்சி ஆகிய இடங்களிலிருந்தும் பல மக்கள் இடம்பெயர்ந்தனர். இதன் பின்னர் 1990ஆம் ஆண்டு யூன் மாதத்தில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் மீண்டும் சண்டை ஆரம்பித்ததையடுத்து விசேட அதிரடிப் படையினர் தங்கவேலாயுதபுரம், பாலக்கரச்சி ஆகிய கிராமங்களில் தாக்குதலை நடாத்தியதோடு வீடுகள், கடைகளை எரித்தனர். இதையடுத்து எஞ்சியிருந்த குடும்பங்களும் இடம் பெயர்ந்து சென்று விட்டனர்.

அதிரடிப்படை இந்தக் கிராமத்திலிருந்து மக்களை வெளியேற்றியது மட்டுமன்றி இந்தப் பகுதியை மக்கள் செல்ல முடியாத பகுதியாகவே மாற்றியிருந்தனர். இந்தப்பகுதிக்குள் எந்தக் காரணம் கொண்டும் எவரும் செல்லமுடியாது. இதனால் இந்தப் பகுதியில் விவசாயம் செய்ய முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளானார்கள். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை அதிரடிப்படையினர் தமிழ் மக்களை அடிமைகள் போன்றே நடத்திவந்தனர். இங்குள்ள பல கிராமங்கள் திறந்தவெளி சிறைச்சாலைகள் போன்றே இருந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னரே அதாவது பதினேழு வருடங்களுக்குப் பின்னர். அந்தக்கிராம மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றனர். கிராமம் முழுமையாக அழிந்து போயிருந்தது. அப்போது வீடுகள் எதனையும் காணமுடியவில்லை. தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் மாத்திரமே மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அப்போது சுமார் 55 குடும்பங்கள் மாத்திரமே திரும்பி சென்றுள்ளன. பாலக்கரச்சி மற்றும் உடும்பன்குளம் பகுதியில் இன்னும் மீளக் குடியமர மக்கள் முன்வரவில்லை. ஆனாலும் ஒரு சிலர் அங்கு வேளாண்மை செய்கையை ஆரம்பித்துள்ளனர். எனினும் அவர்கள் தற்போது திருக்கோவில், தம்பிலுவில் போன்ற பகுதிகளிலே வாழ்ந்து வருகின்றனர்.

**"அப்போது அறுவடைக்காலம் கிராமத்தில் உள்ள ஆண்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர் காலை 10 மணியளவில் லகுகல என்னும் இடத்தில் இருந்து வந்த இராணுவத்தினர் ஆண்கள் அனைவரையும் ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று வெட்டிக் கொலை செய்தனர். பின்னர் சடலங்கள் எரிக்கப்பட்டிருந்தனர். வீடுகளில் இருந்த பெண்களும், குழந்தைகளும் பலமாக தாக்கப்பட்டனர் என்றார்.**

"அன்று 19.02.1986 ஆம் திகதி நான் சொந்த அலுவல்கள் காரணமாகக் காலையில் திருக்கோவிலுக்கு சென்றுவிட்டேன். மாலையில் ஊருக்குத் திரும்பிய போது அந்தத் துயரமிகு சம்பவத்தைக் கண்ணால் கண்டேன். எனது கிராமத்தைச் சேர்ந்த 128 பேர் இராணுவத்தினரால் வெட்டிக்கொலை செய்து சூட்டுக் களவட்டுக்குள் போட்டு நெல்லுச் சாக்கை சடலங்கள் மேல் அடுக்கி வைக்கோலை அள்ளிக் குவித்துத் தீயிட்டு கொழுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் பலருடைய உடல்கள் அரை குறையாகவே எரிந்த நிலையில் கிடந்தன. களவெட்டிகளெல்லாம் பிண நாற்றம் வீசியது. ஒவ்வொரு களவெட்டியிலும் சாம்பலைக் கிளறிய போது அரை குறையாக எரிந்த நிலையில் 66 கருகிய உடல்களும் மண்டை ஓடுகளும் கிடைத்தன. கிராமமே சோகத்தில் மூழ்கியிருந்தது. எங்கும் மரண ஓலங்கள். அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர்" என்று கூறினார், உடும்பன்குளம் வாசியான நாகமணி கந்தசாமி .

அவர் தளதளத்த குரலில் தொடர்ந்து கூறுகையில் "அப்போது அறுவடைக்காலம். கிராமத்தில் உள்ள ஆண்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர். காலை 10 மணியளவில் லகுகல என்னும் இடத்தில் இருந்து வந்த இராணுவத்தினர் ஆண்கள் அனைவரையும் ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று வெட்டிக் கொலை செய்தனர். பின்னர் சடலங்கள் எரிக்கப்பட்டிருந்தன. வீடுகளில் இருந்த பெண்களும், குழந்தைகளும் பலமாகத் தாக்கப்பட்டனர் என்றார்.

அம்பாறை மாவட்டத்தில் நடத்தப்பட்ட மனிதப்படுகொலைகளில் இது மிகவும் கொடூரமானதாகும். ஈவிரக்கமற்ற முறையில் இவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டு தீயில் இட்டு எரிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மறுநாள் இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலைக்குப் புலிச்சாயம் பூசி அரச ஊடகங்களில் செய்தி ஒலிபரப்பு செய்தது. அதாவது உடும்பன்குளம் காட்டில் விடுதலைப்புலிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாக அந்தச் செய்தி கூறப்பட்டது.

இந்தப் படுகொலையை லகுகல பகுதியில் இருந்து சென்ற இராணுவத்தினரே செய்ததாகக் கிராமவாசிகள் கூறுகின்றனர். ஆனால் கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் இருந்து சென்ற படையினரே இந்தப் படுகொலையைப் புரிந்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மிக மோசமாக நடாத்தப்பட்ட இந்தப் படுகொலை தொடர்பாக இதுவரை எந்த விசாரணையோ பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குரிய நட்டஈடோ வழங்கப்படவில்லை.

இன்று இந்த மக்கள் அந்தப்படுகொலையை மறக்கவில்லை. அந்த நாளை மறக்க முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

**அழிக்கப்பட்ட தமிழ்க் கிராமம் உடும்பன்குளம்**

# இலங்கையின் புதிய ஜனாதிபதி சீனாத் திட்டங்களுக்கு வைத்த 'செக்'

தமிழில்

-

நான்கு மாதங்களுக்கு முன்னர் ஒரு ஞாயிற்றுக்கிழமை, பாரிய கப்பலொன்று அறிவிக்காமலே கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைந்தது.

சீனாவின் கிரேட்வோல் 329 என்ற நீர்மூழ்கியே அந்த கடற்படை கப்பல்-நவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டது, அணுவாயுதங்களை தாங்கிச்செல்லக் கூடியது.

இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் அந்த நீர்மூழ்கி நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளது என குறிப்பிட்டு அதன் வருகையால் எழுந்த கரிசனைகளை அலட்சியம்செய்தார்.

எனினும் நீர்மூழ்கியின் விஜயம் புதுடில்லி வரை பதட்டத்தையும், கவலை-யையும் ஏற்படுத்தியிருந்தது. நீர்மூழ்கியின் விஜயத்தை இந்தியாவின் தென்பகுதிக்கு இலங்கை ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் சீனா வந்துசேர்ந்து விட்டதற்கான அறி-குறியாக புதுடில்லி கருதத்தொடங்கியிருந்தது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை மையமாக வைத்து சீனா வகுத்திருந்த திட்டங்கள் யாவும் 9 ஆம் திகதி காலை மகிந்த ராஜபக்ச பதவி விலகியதுடன்- முடிவிற்கு வந்துவிட்டன.

அதிகாரங்களை தன்னிடம் மாத்திரம் குவித்துக்கொண்டிருந்த அரசாங்கம் ஒன்றுடன் நட்பு பாராட்டியதற்காக சீனா செலுத்துகின்ற விலையிதுவென்கிறார் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு தொடர்பான கற்கைநெறிக்கான விரிவுரையாளர் டேவிட் பிரெவ்ஸ்டெர். நீங்கள் ஒரு நபர் மாத்திரம் தான் முக்கியமானவர், அவருடன் தொடர்புகொண்டால் அனைத்தும் சரியாகிவிடும் என கருதுகின்றீர்கள், திடீரென அந்த நபரை நீங்கள் இழந்தால் அந்த உறவு பாதிக்கப்பட்டுவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை மீது மனித உரிமை நிலவரங்கள் தொடர்பாக மேற்குலக நாடுகள் கடும் அழுத்தங்களை கொடுத்து வந்த காலப்பகுதியிலேயே சீனாவிற்கும், இலங்கைக்கும் இடையில் உறவுகள் வேகமாக வளர ஆரம்பித்தன. சீனா இக்காலப் பகுதியில் துறைமுகங்கள், விமானநிலையங்களை அமைப்பதற்கு மில்லியன் டொலர்களை வழங்கியது.

கடந்த சிலமாதங்களாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிக வேகமாக வளரத்தொடங்கின, இது இந்தியாவிற்கு கவலையளிக்கும் விடயமாக மாறி வந்தது.

ராஜபக்ச பாரம்பரியங்களையும் மீறி சீனாவின் நீர்மூழ்கி கப்பல்களுக்கு இலங்கை கடற்பரப்பில் இடமளிக்க தயாராக யிருந்தார்.

மேலும் சீனாவின் முதலீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்களே ராஜபக்சவின் முக்கிய சாதனைகளாக விளங்கின.



இலங்கையில் சீனா அமைத்துவரும் துறைமுகப் பணிகள் புதிய ஜனாதிபதியின் வருகையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு காலிமுகத்திடலில் பாரிய பாரம்தூக்கிகளை காணமுடிகின்றது, இப்பகுதியிலேயே கடந்த செப்டம்பரில் சீனா ஜனாதிபதி 1.5 மில்லியன் டொலர் பெறுமதியான போர்ட்சிட்டி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார், சீனாவிடமிருந்து நான்கு பில்லியன் கடன்களை இந்த திட்டத்திற்காக இலங்கை பெற்றுள்ளது.

இலங்கையில் சீனாவின் கட்டுமானத்தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சீனாவின் மண்டரின் மொழியை கற்பதற்கான ஆர்வம் அதிகரித்துள்ளதாக பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. அதேவேளை சீனா திட்டங்கள் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மாதம் இலங்கையின் சண்டே டைம்ஸ் இரகசியத்தன்மையும், சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வரும் வேகமும், இலங்கை சீனாவின் காற்சட்டை பையினுள் இருக்கின்றது என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளதாக எழுதியிருந்தது. சீனா ஜனாதிபதியின் விஜயத்திற்கு முன்னதாக இது வெளியாகியிருந்தது. எதிர்கட்சி தலைவர்கள் இலங்கை சீனாவிற்கு செலுத்தவேண்டிய கடன்கள் அதிகரித்துவருவது குறித்து மக்களுக்கு எச்சரித்திருந்தனர்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ராஜபக்ச மூன்றாவது தடவை வெற்றி பெற்றால் இலங்கை சீனாவின் பிடியில்சிக்கிய காலணியாக மாறும், நாங்கள் அடிமைக-ளாக மாறிவிடுவோம் என எச்சரித்திருந்தார்.

இராணுவத்தை பயன்படுத்தி வெள்ளையர்கள் கைப்பற்றிய அந்த நிலத்தை ஒரு சிலருக்கு இலஞ்சத்தை வழங்கி வெளிநாட்டவர்கள் அபகரிக்கின்றனர் என அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதியிருந்தார்.

தற்போதைய பிரமதர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய தேசிய கட்சி பேச்சாளர் ஹஉசா சில்வாவும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் போட்சிட்டி திட்டம் இரத்துச் செய்யப்படும், சகலபாரிய உட்கட்டமைப்பு திட்டங்களையும் மீளாய்வு செய்வோம் என குறிப்பிட்டிருந்தார்.

இது சீனா குறித்த கசப்புணர்வு எதனையும் வெளிப்படுத்த வில்லை, சீ-னாவை நல்ல நண்பனா கருதுகின்றோம், நாங்கள் இந்தியாவையும், சீனாவையும் சமமாக நடத்துவோம், மகிந்த ராஜபக்ச அரசாங்கம், சீனாவுடனான நெருக்கம் காரணமாக இந்தியாவை சீற்றத்திற்குள்ளாக்குகின்றது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் என கருதப்படுபவை விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின்போது அரசாங்கம் நடந்துகொண்ட முறையை கடுமையாக சாடி நிதியுதவியை குறைத்துக்கொண்டதே மகிந்த சீனா பக்கம் செல்வதற்கு ஒரு காரணம். சீனா தாராளமாக நிதியுதவியை வழங்க முன்வந்ததுடன் மனித உரிமைகள் குறித்து பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை. மேலும் இந்துசமுத்திரப்பகுதியில் தனது நிலையை வலுப்படுத்துவது குறித்தும் அது விருப்பம்கொண்டிருந்தது. சீனா ஜனாதிபதியின் முக்கிய திட்டங்களில் ஒன்றான புதிய பட்டுப்பாதை திட்டத்தில் இலங்கை ஒரு முக்கிய அங்கமாகும். 40 பில்லியன் டொலர் செலவில் முன்னெடுக்கப்படும் இந்த திட்டம் இந்தியாவை அச்சத்திலாழ்த்தியுள்ளது. பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை இந்த திட்டம் குறைக்கும், இறுதியில் இந்த பகுதியில் சீனாவின் பல இராணுவவசதிகள் உருவாகும் என இந்தியா கருதுகின்றது.

இந்திய பிரதமர் நரேந்திரமோடி தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியாவதற்கு முன்னரே சிறிசேனவை பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கு முன்னர் ஒன்றை தெரிவிப்பதும், பின்னர் வேறொன்றை செய்வதும் அரசியல்வாதிகளின் இயல்பு, போர்ட் சிட்டி திட்டம் இலங்கைக்கு பல நன்மைகளை அளிக்கின்றது அவர்கள் ஏன் அதனை இரத்துச்செய்யவேண்டும் எனக் கேள்வி எழுப்புகிறார், சர்வதேச கற்கை நெறிகளுக்கான ஷங்காய் நிறுவகத்தை சேர்ந்த வாங்டெகுவா சீனா தான் பெருமளவு முதலீடு செய்த நாடுகளில் இவ்வாறான எதிர்ப்புணர்வு உருவானதை ஏற்கனவே சந்தித்துள்ளது என்கிறார் இன்னொரு ஆய்வாளர், இவ்வாறான சூழ்நிலைகளில் சீனா பல மாதங்களுக்கு அமைதியாக இருந்துவிட்டு பின்னர் புதிய அரசாங்கத்திடம் கூட்டு முயற்சிகள் குறித்த திட்டங்களை முன்வைக்கும், இந்த அணுகுமுறை அதற்கு பயனளித்துள்ளது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். சீனாவை கடுமையாக விமர்சித்த எதிர்கட்சி தலைவர்களிடம் கூட இந்த அணுகுமுறை பயனளித்துள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

13ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விசாரணைக்கு இனி என்ன நடக்கும்

**பதிலாளிக்கின்றார் யாழ் பல்கலைக்கழக அரச அறிவியற் துறைத் தலைவர் கே.ரி. கணேசலிங்கம்**

### நேர் கண்டவர் : ராம்

**கே: தேர்தல் முடிவுகள் குறித்து என்ன கருதுகின்றீர்கள்?**

ப:. நடந்து முடிந்த தேர்தலைப் பொறுத்தவரையில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட முறையில் நோக்கமுடியும். ஒன்று இந்தத் தேர்தல் இலங்கை முழுவதற்குமான ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது உண்மையான அரசியல் மாற்றமா என்பது ஒரு கேள்வி இருந்தாலும் ஆட்சித்துறையில் புதிதாக இணைந்திருக்கிற மைத்திரி - ரணில் கூட்டு எவ்வகை மாற்றத்தைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்போகிறது என்பதுதான் இந்த மாற்றத்திற்கு அடிப்படை.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை ஒரு மோசமான ஆட்சியில் இருந்து விடுபட்டிருப்பதாக மிதவாதிகள் மத்தியதர வர்க்கத்தினர், உயர்வர்க்கத்தினர் என்போர் பெருமளவில் கருதுகிறார்கள். ஆனால் அதை ஒரு பொருத்தப்பாடு உடைய நிலைக்குத் ஈழத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற ஒரு கேள்விக்குறி உள்ளது.

இந்த வாக்களிப்பினை அவதானிக்கின்றபோது தமிழ் மக்களின் வாக்குகள்தான் மைத்திரிபால சிறீசேன ஜனாதிபதியாக வருவதற்கு உதவியது என்று தெரிகின்றது. ஆகவே நிச்சயமாகத் தமிழர்களின் இந்த ஜனாதிபதித் தேர்தலினுடைய, மைத்திரிபால சிறீசேனவினுடைய வெற்றியை நிர்ணயித்து இருக்கிறார்கள்.

**கே: சிங்கள பிரதேசங்களில் கணிசமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

ப: சிங்களமக்களினுடையவாக்களிப்புத்தன்மையில் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பது இங்கு கோடிட்டுக்காட்டக்கூடிய ஒரு விடயம்.

அதே வேளையில் சிங்கள மக்கள் பெருமளவிற்குப் பொது வேட்பாளருக்குரிய ஆதரவினை எந்தளவிற்கு மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு அளித்தார்களோ அதே அளவிற்கான சம பங்கீட்டை மைத்திரிபால சிறீசேனாவிற்கு வழங்கியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இலங்கையினுடைய சமூகக் கட்டமைப்பு முறையினுடைய தன்மைகள் ஆகும். இதில் வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு விடயம் ஆழமாகப் பதிந்திருக்கின்றது. சமூகக் கட்டமைப்பு முறைகளுடைய தன்மைகளைப் பொறுத்தவரையில் சிங்கள மக்களிடமும் தமிழ் மக்களிடமும் சாதியம் அல்லது சாதியம் சார்ந்திருக்கக்கூடிய வர்க்கம், சொத்து அடிப்படையிலான சமூக அடுக்கமைவு இருக்கின்றது. இதுவும் இந்த ஆட்சிமாற்றத்தில் தாக்கம் செலுத்திய ஒரு காரணியாகும்.

மைத்திரிபால சிறீசேனவைப் பொறுத்தவரையில் அவர் பிரதான மத்தியதர மரபுக்குள் தோன்றியவர் அல்ல. அதனால் அவர் எப்போதுமே விவசாய மரபிற்குள்ளும் சாதாரண மக்களுக்குரிய வாழ்க்கை முறைக்குள்ளும் இருந்ததனால் அவரோடு இணைந்து செயற்படக்கூடிய சக்திகள் பெருமளவிற்கு இந்தத் தேர்தல் கைகோத்திருக்கின்ற தன்மை இந்த பிரதேச மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்குரிய ஏதோ ஒரு காரணமாக இருந்திருக்க முடியும். போரும், போருக்குப் பின்னர் இவருடைய எழுச்சியும் சிங்கள மக்கள் தங்களுடைய எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பைக்கொடுத்திருக்கின்றது. சிங்கள மக்களிடம் சிங்களத் தேசியத்தை முதன்மைப்படுத்துகின்ற சக்திகள் எழுச்சி பெற்றாலும் அங்கும் பெறுமளவிற்கு மத்தியதர வர்க்கத்தினுடைய மரபுகளைப் பேணக்கூடிய அல்லது உயர்வர்க்கத்தினுடைய மரபுகளைப் பேணக்கூடிய சமூகக் கட்டமைப்பு முறைகள் பெருமளவுக்குக் கடந்த யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் வளர்ச்சியடைந்திருக்கின்றது என்பதையே வெளிப்படுத்துவதாக என்னால் அவதானிக்கமுடிகிறது.

**கே: இனவாதத்தை சிங்கள மக்கள் கணக்கில் எடுக்கவில்லை என்கிற அபிப்பிராயம் முன்வைக்கப்படுகின்றது. இது பற்றி என்ன குறிப்பிடுகிறீர்கள்?**


ப: இனவாதம் என்ற சுலோகம் பெருமளவிற்குக் கணக்கிலெடுக்கப்படவில்லை என்ற கருத்து எந்தளவிற்குப் பொருத்தபாடுடையதாக அமையும் என்றதொரு கேள்வி உண்டு. காரணம் இனவாதத்தினுடைய சக்திகளாக இரு பிரிவினர் இனங்காணப்படுகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட இனவாதக் கட்டமைப்பு முறை அங்கு வளர்ந்திருக்கின்றது. ஒன்று பொதுபல சேனா மற்றது ஹெல உறுமய. இந்த இரண்டுமே ஏறக்குறைய இரண்டு தரப்பையும் திருப்திப்படுத்துகின்ற நிலையில் செயற்படுகின்றார். பொதுபல சேனா பெருமளவிற்கு மகிந்த ராஜபக்சவின் அரசியல் சக்தியோடு இணைந்து செயற்படுகின்றது. அதேவேளையில் பொதுவேட்பாளரோடு ஹெலஉறுமய உடன்பாடுகளுக்குச் சென்றிருந்தது. தேர்தல் காலங்களில் அவதானிக்கக் கூடிய விடயங்களாக இவை இருந்தன. எனவே அந்த அடிப்படையில் பார்த்தால் இனவாதத்தினுடைய அடிப்படைகள் அங்கு மழுங்கடிக்கப்பட்டு போய்விட்டது என்று கூறுவதை விட இனவாதத்தினுடைய தன்மை, தனது நலன்களுக்கும், வாய்ப்புக்களுக்கும் நெருக்கடி ஏற்படுகிற போது உருமாறிக் கொள்ளும். இது, வழமையான தென்னிலங்கை சிங்களப் பெரும்பான்மை அரசியலின் ஒரு மரபாகக் காணப்படுகின்றது. அதை நாங்கள் முற்றாக முடிந்து போய் விட்டது எனக் கூறமுடியாது. இந்த இனவாதத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற அதே மாதிரியான எண்ணப்பாங்கு தமிழ் மக்களிடமும் உண்டு என்பதை ஒரு நாளும் மறந்துவிட முடியாது. இரண்டு பக்கங்களுமே பெருமளவுக்குத் தனது இனத்தின் மேன்மைக்குரிய அம்சங்களை முதன்மைப்படுத்தி அதற்கு எதிராக செயற்படுகின்ற போக்கு காணப்படுகின்றது. ஆனால் தமிழர்கள் மத்தியில் அது ஒழுங்குபடுத்தப்பட்டதாகவோ அல்லது ஒரு தயார் நிலைக்கு உட்படுத்தப்பட்டதாகவோ அல்லது ஒரு கட்டமைப்புப் பரிணாமம் பெற்றதாகவோ இதுவரை இருக்கவில்லை. ஆனால் சிங்கள மக்கள் மத்தியிலே அவை அவ்வாறு பேணப்படுகின்றது. ஏறக்குறைய தொழில் கட்சிகள், தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்ட கால கட்டத்திலிருந்து வி. குணசிங்கா அவர்களுடைய தொழிற்சங்க மரபுகளுக்குள்ளேயிருந்தே பெருமளவுக்கு இனவாதத்தினுடைய மரபுகள் அங்கு தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் அது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்டதாக அல்லது ஒரு கட்டமைப்பு வடிவத்தைப் பெற்றதாக அமைந்திருக்கின்றது. இந்த சக்திகள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து அவ்வப்போது எழுச்சி பெறக்கூடிய விதத்தில் தான் மைத்திரிபால சிறீசேனாவினுடைய ஆட்சியினுடைய அல்லது ஆசனத்தினுடைய பங்கு சாத்தியப்பட்டிருக்கிறது என்றே கருதமுடியும். இதனால் இனவாதம் அழிந்துவிட்டது என்பது அல்ல இனவாதம் தனது நலன்களுக்கு ஏற்றவகையில் தனக்கு நெருக்கடி வருகின்றபோது தன்னுடைய சுய இருப்புக்கள் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றபோது அது தன்னுடைய உருவத்தை அல்லது தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தும்.

**கே: பேரினவாதத்தின் இருப்பிற்குத் தற்போதைய நிலையில் மகிந்தரை விட மைத்திரி பாதுகாப்பானவர் என்றொரு அபிப்பிராயம் நிலவுகின்றது. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப: பேரினவாதத்தினுடைய ஒரு அடையாளம் தான் ஜனாதிபதி ஆட்சிமுறை அல்லது அதிகார ஆட்சிமுறை. இந்த அடிப்படையில் அவதானிக்கின்ற போது நீங்கள் குறிப்பிடுவது பொருத்தப்பாடுடையதாக அமையலாம். ஏனென்றால் பேரினவாதத்தினுடைய இயல்புகள் இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு காலப் பகுதியில் ஒவ்வொரு வடிவத்தை பெற்றிருக்கும். 1956ஆம் ஆண்டு அது தனக்குரிய தனித்துவ எண்ணங்களோடு அது தன்னுடைய அதிகார அரசியல் விம்பங்களை பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டிருந்தது. அதே போன்று 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகாரத்தினுடைய உச்சத்தை அது தொடுகின்றபோது பெருமளவு பேரினவாதத்தினுடைய சக்திகளாக அவர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். அந்த அதிகாரத்தினுடைய கட்டமைப்பு முறைகள் தான் பெருமளவிற்கு இன்று சிங்களப் பேரினவாதத்தினுடைய மேன்மையான அம்சங்களாகக் காணப்படுகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு அதனுடைய ஆட்சிக்கு வருகின்றவர் ஒரு தமிழராக இருந்தால் கூட அவருடைய அதிகாரத்தினுடைய வெளிப்பாடு ஏறக்குறைய மகிந்த ராஜபக்சவோ அல்லது பிறேமதாஸா போன்றே காணப்படும் என்பதில் எந்தவிதமான விதிவிலக்கும் கிடையாது. ஏனென்றால் இலங்கையினுடைய அரசியல் வரலாற்றில் 1978 ஆம் ஆண்டு வரையுள்ள அரியல் யாப்பு உலகத்திலே பேரினவாதத்தின் வெளிப்பாடுகளைச் செய்யக்கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்ற ஒரு அரசியல் யாப்பாக அது அமைந்திருப்பது அதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. இதைவிடுத்து இனரீதியாக சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினுடைய தன்மைகளைப் பேணக்கூடிய விதத்திலான கருத்துக்களை அந்த அரசியல் யாப்பு தனக்குள்ளே உள்வாங்கியிருப்பதனால் அதை அலங்கரிக்கின்ற எவரும் அதற்குரித்துடைய பாத்திரங்களைப் பெறத்தவறுகின்ற போது அவர்களுடைய ஆட்சியினுடைய ஸ்திரம் குறைந்து அவர்களுடைய தனித்துவம் இழக்கப்பட்டுப் போலியான நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இதனால் மகிந்த ராஜபக்சவோ அல்லது மைத்திரிபால சிறீசேனாவா அல்லது ஜே.ஆர் ஜெயவர்த்தனாவோ இந்த அரசியல் யாப்பிற்கு முற்றிலும் விதிவிலக்கானவர்களாக இயங்கமுடியாது என்பது தான் இந்தப் பேரினவாதத்தினுடைய அடையாளத்தை முதன்மைப்படுத்திய காரணி. மகாவம்சத்தைப் போன்று தான் இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்புடைய வடிவம் அமைந்திருக்கின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

**கே: மைத்திரி எப்படி தமிழ்மக்களின் வாக்குகளில் தான் வெற்றி பெற்றிருக்கிறார். மைத்திரியின் ஆட்சி தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கப்படும் என்று நினைக்கிறீர்களா?**

ப: நிச்சயமாக இந்தக் கேள்விக்குரிய பதில் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுப்பது, தமிழ் மக்களுடைய அரசியல் தலைமையின் பங்கேற்பு என்பவை ஆகும். தமிழ் மக்களுடைய



அரசியல் தலைமைகள் தமிழர்களுடைய அபிலாசைகளை முன்னிறுத்தி செயற்படுகின்ற ஒரு சூழல் ஏற்படுமாக இருந்தால் நிச்சயம் தமிழரின் சுயநிர்ணய உரிமை வெற்றிபெறும்நிலை ஏற்படும். அதற்காக மைத்திரிபால சிறீசேனவோ அல்லது தென்னிலங்கையோ அல்லது மைத்திரி - ரணில் விக்கிரமசிங்க கூட்டோ தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு எந்தவித வாய்ப்பையும் தந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. இதைப்பெற்றுக் கொள்ளக்கூடிய பலத்தையும் , உத்தரவாதத்தையும் இந்தத் தேர்தல் ஊடாகத் தமிழ் மக்கள்ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பயன்படுத்தக்கூடிய திறன், தமிழ் அரசியல் தலைமைகளிடம் வர வேண்டும். அதை ஊக்குவிக்கின்ற வல்லமை ஊடகங்களிடம் வர வேண்டும். அதை முன்னெடுக்கக் கூடிய சக்தியான ஒரு ஆலோசனை அல்லது கருத்தாடலைப் புலமை சமூகம் ஏற்படுத்த வேண்டும். இந்த மூன்று பிரிவினரிடமும் தான் தமிழ் மக்களினுடைய அபிலாசைகள் எண்ணம் தங்கியிருக்கின்றது. தமிழ் தேசிய இனம் கூட்டாகத் தன்னுடைய எண்ணப்பாடுகளை வெளிப்படுத்தி அதற்குச் சரியானதொரு தந்திரோபாயமான ஒரு அரசியல் நகர்வு ஒன்றைத்திட்டமிட்டு நகர்த்துமாகஇருந்தால்நிச்சயம்தமிழ்மக்கள்பெறக்கூடியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது எட்டக்கூடிய விடயங்களை எட்டிக் கொள்ளலாம். அடையக்கூடிய வாய்ப்புக்கள் முற்றாகத் தகர்ந்து போகவில்லை. எனவே இதைப் புரிந்துகொண்டு தமிழர்கள் தங்கள் அரசியலை நகர்த்த வேண்டும்.

**கே: சர்வதேச விசாரணைக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது? அது மேற்குலக முயற்சி என்பதால் எதிர்காலத்தில் பலவீனப்படும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. நீங்கள் அதை எப்படி பார்க்கிறீர்கள்?**

ப: புதிய ஆட்சி மாற்றத்துடன் இலங்கை மீதான சர்வதேசவிசாரணை கைவிடப்பட்டுவிடும் என்ற எண்ணத்தின்பாற்பட்டே உங்களிடமிருந்து இந்தக் கேள்வி எழுப்பப்படுகின்றது என்றே கருதுகிறேன். இலங்கையிலிருந்து சீன சார்புடைய ஆட்சியை அகற்றுவது மேற்குலகத்துக்கு அவசியமான ஒன்றாக இருந்தது. அந்த வகையில் ஆட்சிமாற்றத்தின் மூலம் இலங்கையிலிருந்து சீனாவை அகற்ற முடியுமா என்பது என்னுடைய ஒரு கேள்வி. இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்களுக்கும், மீள் நிர்மாணத்துக்கும் சீனா முதலிட்டிருக்கும் தொகை பாரிய அளவானது. மேற்குநாடுகளைப் போல மனித உரிமை விடயங்களை நிபந்தனையாகக் கொள்ளாமல் தாராள உதவிகளை வழங்குவதன் ஊடாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முக்கிய நாடாக இலங்கையை மாற்றிக் கொண்டது சீனா. குறிப்பாக சீனாவின் முத்துமாலைத்திட்டத்தில் முக்கிய இடமாக இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்திருப்பது இதன் இன்னுமொரு கட்டம்.

ஆகவே மேற்கு நினைப்பதுபோல் உடனடியாகவே சர்வதேச விசாரணையை நிறுத்தக்கூடிய நிலை உருவாகும் என நினைப்பது சந்தேகத்திற்கிடமானது. காரணம் மேற்கு இலங்கையில் அடைய நினைக்கும் லாப நட்டங்களுக்குள் விசாரணையும் வருகின்றது. எனவே ஆட்சிமாற்றத்துடன் அடைய வேண்டிய லாபங்களை அடைய முடியாவிட்டால் விசாரணையை கைவிட்டு எதுவும் செய்ய முடியாது. இன்னொரு விடயம், சர்வதேச விசாரணை என்பது இலங்கைக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல. இலங்கையின் அரசியல் சூழலில் சர்வதேச மட்டத்தில் ஒரு தனிநபர் தண்டிக்கப்படவேண்டிய நிலையேற்பட்டால் விசாரணையை தொடர்ந்தும் தக்க வைக்கவேண்டிய தேவை இருக்கின்றது. மறுவலமாக இலங்கையில் மேற்கு அடையநினைக்கின்ற லாபத்தை அடைந்துகொண்டால், சர்வதேச விசாரணைகள் கைவிடப்படும் என்றே நான் கருதுகின்றேன். உண்மையில் சர்வதேச விசாரணை என்று வந்தால், இப்போது ஆட்சியிலிருக்கின்ற பலரும் விசாரிக்கப்படும் நிலை ஏற்படும். தனிநபரை மட்டும் தண்டித்தலோடு விசாரணை முற்றுப்பெறாது. சரத்பொன்சேகா அந்த வரிசைக்குள் வருவார். எனவே சர்வேதேச விசாரணை என்பது எதிர்பார்த்தமாதிரி நடக்கக்கூடிய ஒன்றல்ல. இலங்கை தொடர்ந்தும் மேற்கை ஏமாற்றும் நிலைதொடர்ந்தால் விசாரணை ஒன்று வரும் என்றே நான் கருதுகின்றேன்.

**கே: மைத்திரி வெற்றியடைந்துள்ளதால் இலங்கை தீவினை மையப்படுத்திய புவிசார் அரசியல்போட்டி இல்லாமல் போகும் என்கிற அபிப்பிராயம் நிலவுகின்றது. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? சீனாவின் ஆதிக்கம் குறைந்துவிடுமா?**

ப: புவிசார் அரசியல் களமென்பது நிரந்தரமானது. இந்தப் போட்டியில் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் முக்கிய இடம்பெறுகின்றன. இந்து சமுத்திரத்தின் இருப்பை உத்தரவாதப்படுத்தக்கூடிய விதத்தில் இந்தசக்திகள் தங்களுக்கிடையில் மோதிக்கொள்கின்றன. இந்து சமுத்திரத்தை எந்த சக்திதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள விரும்புகின்றதோ, அந்த சக்தி இலங்கைகையையும் தன் ஆட்சிக்குள் வைத்துக்கொள்ள முனைவதை வரலாறு முழுவதும் அவதானிக்கலாம். ஐரோப்பியர்கள் இலங்கையை கைப்பற்றியதன் நோக்கம், இந்தியாவை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதற்காகத்தான். அதேநோக்கம் இன்றும் மாறவில்லை என்று கருதுகின்றேன். சீனாவின் முத்துமாலைத் தொடரில் அம்பாந்தோட்டை முக்கிய இடம்பிடிப்பதால், அந்தநாடு இந்தப் பிரதேசத்தை விட்டுக்கொடுக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும். இதேவேளை மேற்கு மற்றும் இந்திய சக்திகள் இணைந்து ஐரோப்பிய அரசியலின் ஓர் அடையாளமாக மாற்ற நினைத்தால், இந்து சமுத்திரத்தில் இலங்கை மீளவும் அதிக முக்கியத்துவத்தைப் பெறும். வல்லரசு சக்திகளின் அதிகாரப் போட்டிக்குள் இலங்கைத்தீவு சிக்கிக் கொள்ளும். அதற்கு மைத்திரிபால கருதுவதுபோல மேற்கு நாடுகள் இலங்கையின் அரசியல் மாற்றத்துக்கு வழங்கும் அதேயளவான ஆதரவு, பொருளாதாரத் துறைகளுக்கும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. காரணம், மேற்கு நாடுகளின் பொருளாதாரம் மிகமோசமான சரிவை சந்தித்திருக்கின்றது. இந்தநிலையில் சீனா போன்று இலங்கைக்கு நிபந்தனையற்ற கடன்களை மேற்கு நாடுகள் வழங்குமா என்பது கேள்விக்குரிய விடயம். இதனால் மைத்திரிபாலவின் ஆட்சியில் சீனாவின் செல்வாக்கு இல்லாமல் போகும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் எந்த அரசுகளும் நிபந்தனையற்ற உதவிகளை பெறுவதில் ஆர்வம்காட்டுவது வழமையான ஒன்று. எனவே புவிசார் மற்றும் பொருளாதார அரசியல் இலங்கையில் மீளவும் ஓர் இழுபறித்தன்மை மிக்க அரசியலையே உருவாக்கும். ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாத வண்ணம் நிகழும் என்பதையே நான் கருதுகின்றேன்.

**கே: இலங்கைத்தீவினைப்பொறுத்தவரையிலும், தமிழ் அரசியலைப் பொறுத்தவரையிலும் இந்தியாவின் நகர்வுகள் எதிர்காலத்தில் எப்படி இருக்கப் போகின்றது?**

ப: இந்தியாவுக்கு எப்போதும் விசுவாசமாக இருப்பதே இலங்கையின் நிலைப்பாடு. அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் புதிய ஆட்சி இந்தியாவின் நலன்களுக்கு பாதகமற்ற வகையிலேயே தொழிற்படும். மைத்திரியை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு தமிழர்களின் வாக்குப் பலம் அதிகளவில் தாக்கம் செலுத்தியது. அதன் பின்னணியில் இந்தியா இருந்ததாகவே பல்வேறு ஆருடங்களும் தெரிவித்திருந்தன. அந்த அடிப்படையில் இந்த ஆட்சி இந்தியாவின் நலன்களுக்கு அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தாது என்றே கருதுகின்றேன். ஏனெனில் இந்தியா-மேற்குநாடுகள் இணைந்து இந்த ஆட்சி மாற்றத்தோடு தொடர்புபட்டிருப்பதால் இந்த ஆட்சி அதிகளவு இந்திய நலன்களுக்கு சாதகமானதாகவே இருக்கும். இலங்கை சீன சார்பு நிலையை குறைத்துக்கொண்டால் மேலும் இந்தியாவின் ஆதரவு அதிகரிக்கவும், இலங்கை விடயத்தில் ஒரு மென்போக்கு அரசியலைக் கடைபிடிக்கவுமே வாய்ப்புகள் உண்டு. இலங்கைத் தேசிய அரசியல் இவ்வாறு சீனாவிடமிருந்து மாறி இந்தியாவிடம் சிக்கிக்கொள்ளும் நிலையில் தமிழர்களுடைய அரசியல் ஆபத்தான கட்டத்தை நோக்கியே நகரும். இந்த இடத்தில் தான் ஊடகங்களும் தமிழ் புத்திஜீவிகளும் தமக்கிருக்கினற் தார்மீக கடமையை உணர்ந்து சிந்தித்துச் செயற்படவேண்டும். ஆகவே நமக்குள்ள அரசியல் வெளியை சரியான திசையில் நகர்த்தும்.

---

11 ஆம் பக்க தொடர்ச்சி

**இலங்கையின் புதிய....**

எப்படியும் அவர்கள் சீனா பக்கம் செல்வார்கள்,ஏனென்றால் உட்கட்டமைப்புவசதிகள் மற்றும்,நிதியுதவிகளை வேறுயார் வழங்கப் போகின்றார், இலங்கை விடயத்திலும் இது நடைபெறும் என அவர் தெரிவிக்கின்றார்.

புதிய ஜனாதிபதி பதவியேற்றதை பல நாடுகள் பயன்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு தொடர்பான கற்கைநெறிக்கான விரிவுரையாளர் டேவிட் பிரெவ்ஸ்டெர். தெரிவிக்கின்றார்,

இதில் அமெரிக்கா முக்கியமான நாடு,வாசிங்டன் யுத்தகுற்றச்சாட்டுகள் தொடர்பாக கடுமையான நிலைப்பாட்டை எடுத்ததால் இலங்கை மீது செல்வாக்கு செலுத்தும் நிலையை முற்றாக இழந்தது, ராஜபக்ச வெற்றிபெற்றிருந்தால் அது பல வருடங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலையிலேயே இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இம்முறை அமெரிக்கா தனது சொந்த முதலீட்டு திட்டங்களுடன் தயாராகயிருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

சீனாவின் பணரீதியான செல்வாக்கு குறித்து குறைத்து மதிப்பிடப்படுகின்றனர், பிராந்தியத்தில் தனது நன்மைக்காக அது எவ்வளவு செலவிட தயாராகவுள்ளது என்பதையும் கணக்கிலெடுக்க தவறுகின்றனர், இந்த நாடுகளில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள், கொள்கை வகுப்பாளர்களுடன் நான் உரையாடியுள்ளேன், அவர்கள் சீனாவுடன் ஒப்பிடும்போது அமெரிக்கா எதுவுமேயில்லை. பணமே அனைத்தையும் தீர்மானிக்கின்றது என்கிறார் அவர்..

# காணாமல் போன அண்ணன்

*தீபச்செல்வன்*

ஓர் நாள் கும்மிருட்டில் அண்ணனைக்
கொண்டு செல்லும்பொழுது
வாகனத்தின் பேரிரைச்சல் கேட்கையில்
அண்ணன் எங்கே என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

தெருவில் அண்ணனைப் போன்றவர்களைப்
பார்க்கும்போதும்
அடுத்த வீட்டுப் பிள்ளைகளுடன்
விளையாடச் செல்லும்போதும்
அண்ணன் வந்துவிட்டானா? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

யாராவது திருவிழாவுக்கு செல்லும்போதும்
கொண்டாட்டநாட்கள் வரும்போதும்
அண்ணன் வரமாட்டானா? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

தூங்கி எழும்பும்போதும்
பள்ளிக்கூடம்செல்லும்போதும்
அண்ணா எப்பொழுது வருவான்? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

வருடங்கள் பல ஓடிய பின்னரும்
யாரைப் பார்த்தாலும்
எங்காவது அண்ணாவைக் கண்டீர்களா?
என்பதைத் தவிர
அவள் வேறெதையும் கேட்கவில்லை.



–செல்வக்குமார்–



**அவருக்கு விடுதலைப்புலிகள் அமைப்புடன் எந்தவித தொடர்பும் இல்லை. அவர் போரின்போது படையினரின் தாக்குதலில் ஒரு மகளைப் பறி கொடுத்தவர்**

# கைதிகளுக்கு முடிவென்ன?

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் பல நூற்றுக் கணக்கானோர் யுத்தம் முடிந்து 5 வருடங்கள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளில் வாடுகின்றனர். அவர்களது விடுதலை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சுமார் 20 வருடங்களாகத் தண்டனை வழங்கப்படாமலும், விடுதலை இல்லாமலும் வாடும் இளைஞர்களது நிலையை யாரும் கண்டுகொள்வதாக இல்லை. ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி யினரது போராட்டம் அழிக்கப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டனர். ஆனால் தமிழருக்கு எதிரான போரில் அரசால் கைது செய்யப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதனால் வேண்டுமென்றே அடைத்து வைத்துள்ளனர்.

புனித பாப்பரசர் முதலாம் பிரான்சிஸின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு சிறைக் கைதிகள் சிலருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. நோய்வாய்ப்பட்டவர்கள், நல்லொழுக்கமானவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகிய அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாப்பரசரைக் கௌரவப்படுத்தும் நோக்கில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி கைதிகளும், பல்வேறு தரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருகின்றபோதும், கோரிக்கைகளை முன்வைக்கும் போதும், அரசாங்கம் அதற்கு நேர்மாறாகவே செயற்படுகின்றது. அதாவது விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கும் கைதிகளின் தொகையை மேலும் மேலும் அரசு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் விடுதலைப் புலிகளின் மீளமுச்சியைத்தடுப்பது என்ற போர்வையில் தொடர்ச்சியாகப் பலரைக் கைது செய்து தடுத்து வைத்திருக்கின்றனர். தொடர்ந்தும் அந்த வகையான செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவிடம் சாட்சியமளிப்பதில் அக்கறை காட்டுவர்கள், அடுத்தடுத்து வெவ்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேரடியாகச் சொல்வதானால் அவர்கள் சாட்சியமளிக்காதபடி பூசா முகாமில் தடுத்து வைக்கப் படுகின்றனர்.

காணாமல் போன ஓர் இளைஞனின் தாயாரான தர்மபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரி என்பவர் காணாமற் போனோர் தொடர்பான போராட்டங்களில் தீவிரமாகப் பங்குகொண்டவர். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களுக்குப் பேட்டியும் வழங்குபவர். அவர் விடுதலைப்புலி சந்தேகநபர் ஒருவரை வீட்டில் மறைத்து வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். ஒரு வருடம் கடந்துவிட்டநிலையிலும் அவர் இன்னமும் விடுதலை செய்யப்படவுமில்லை. குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படவுமில்லை.

அவர் கைது செய்யப்பட்ட அதே காலப்பகுதியில் பல இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் கூடக் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் முழங்காவில் இரணைமாதா நகர்ப் பகுதியில் வைத்துக் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை வைத்திருந்தார் என முதலில் கூறப்பட்டது. பின்பு அவர் முன்னாள் புலி உறுப்பினர் எனவும், ஆயுதப்பயிற்சி பெற்றவர் எனவும், புனர்வாழ்வு பெற்றவர் எனவும் கூறப்பட்டது. ஆனால் அவர் புனர்வாழ்வு பெறாமையாலே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் தரப்பினரால் இப்போது தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் கைதானவரின் குடும்பத்தவரோ "அவருக்கு விடுதலைப்புலிகள் அமைப்புடன் எந்தவித தொடர்பும் இல்லை. அவர் போரின்போது படையினரின் தாக்குதலில் ஒரு மகளைப் பறி கொடுத்தவர்" எனவும் கூறுகின்றனர். தனது மகளை இழந்த ஒருவர் அது தொடர்பாக முறைப்பாடு செய்வதைக் கூட இலங்கை அரசு குற்றமாகக் கருதுகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தமிழ் மக்களது வாக்குகளைப் பெற்றவர்கள் அதிகாரமில்லா மாகாண சபையில் தீர்மானங்களை நிறைவேற்றி மக்களை ஏமாற்ற முயல்கின்றார்கள். மாறாக சர்வதேச மட்டத்திற்கு அந்தக் கைதிகளது நிலைமையைக் கொண்டு செல்வதற்கோ அன்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கோ தயாராக இல்லை.

ஒன்றில் இந்த தலைவர்கள் இந்தப் பிரச்சினையை சர்வதேச அளவில் பேசு பொருளாக்க வேண்டும் என்ற அழுத்தத்தை மக்கள் இவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அல்லது இந்தக் கைதிகளது விடயத்தில் உண்மையான அக்கறை கொள்ளக்கூடிய தமிழ்த் தேசிய தலைமைகளை மக்கள் இனங்கண்டு பலப்படுத்த வேண்டும்.



மலையக மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாரிய மனிதஉரிமை தொடர்பான பதிவு

-பழனிவேல் -

# சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு வயது ஐம்பது

மலையக மக்களை அவர்களது சம்மதமில்லாமல் நாடு கடத்திய சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு கடந்த ஒக்டோபருடன் வயது ஐம்பதாகிவிட்டது. இந்த நாடு கடத்தலினால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து மலையக மக்கள் இன்னமும் விடுபடவில்லை. சுதந்திரமடைந்த போது இலங்கையில் இரண்டாவது சனத்தொகையைக் கொண்ட இனத்தவர் மலையகத் தமிழர்களேயாவர். அவர்கள் 13 வீதத்தவராக இருந்தனர். இலங்கைத் தமிழர் 12.5 வீதத்தவராகவே இருந்தனர். இன்று மலையக மக்கள் நான்காம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய அரசு தன்னுடைய புவிசார் அரசியல் நலன்களுக்காக மலையக மக்களை வஞ்சித்து விட்டது. இந்தியா மலையக மக்களை அழைப்பதாயின் அனைவரையும் அழைத்திருக்க வேண்டும் அல்லது அனைவரையும் விட்டிருக்க வேண்டும். ஒரு பகுதியை அழைத்து மறுபகுதியை விட்டதன் மூலம் இந்தியாவிலும் இலங்கையிலும் மலையக மக்கள் அநாதரவாகியுள்ளனர். அன்றைய காலத்தில் கணக்கிடப்பட்டிருந்த 975,000 பேரில் 600,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதென சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலமும் பின்னர் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - இந்திரா ஒப்பந்தத்தின் மூலமும் இணக்கம் காணப்பட்டிருந்தது. இது மலையக மக்களின் மொத்தச் சனத்தொகையில் ஏறத்தாழ 2/3 பங்காகும்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கை மந்திரிசபை 1964ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி இவ் ஒப்பந்தத்தினை அங்கீகரித்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் சிறிமா அரசாங்கத்தில் நியமன பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் அவருடன் எந்த ஆலோசனையையும் மேற்கொள்ளாமலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

1964 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதி அளவில் மலையக வம்சாவழியினர் 975,000 பேர் இலங்கையில் வாழ்ந்திருந்தனர். இவர்களில் 525,000 பேருக்குப் பிரஜாவுரிமை வழங்க இந்தியா சம்மதித்தது. இலங்கை 300,000 பேருக்குப் பிரஜாவுரிமை வழங்க சம்மதித்தது. மீதி 150,000 பேரின் பிரஜாவுரிமை பற்றி 1974 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - இந்திரா ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 75,000 பேராக இரு நாடுகளுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டன. மொத்தத்தில் 6 இலட்சம் பேரும் அவர்களின் இயற்கை அதிகரிப்புக்களும் இந்தியாவிற்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தன. எனினும் 5,505,000 பேரே இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்றுக்கொண்டனர். 95,000 பேர் இருநாடுகளும் ஏற்றுக் கொள்ளாத நாடற்றவர்களாக இருந்தனர். பின்னர் இலங்கை அவர்களைத் தமது பிரஜையாக ஏற்றுக் கொண்டது. சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் கொண்டிருந்த நெருக்கத்தைக் குறைத்து தன்னுடன் நெருக்கம் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தியா இந்த ஒப்பந்தத்திற்கு முன் வந்தது. பாகிஸ்தான் அக்காலத்தில் இலங்கையில் இருந்த பாகிஸ்தானியர்களை ஏற்றுக்கொள்ள முன்வந்தமையும், பர்மாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருந்த 3 இலட்சம் இந்தியர்களை இந்திய அரசு ஏற்றுக் கொண்டமையையும் சுட்டிக்காட்டியே அப்போது இலங்கைப் பிரமதர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றச் செய்தார்.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்த போதும் இரு அரசாங்கங்களும் அவற்றைக் கணக்கில் எடுக்கவில்லை. இதனை ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாகப் பார்க்காமல் கணித முறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்களினுடையதோ, மக்கள் பிரதிநிதிகளினுடையதோ விருப்பங்கள் எதுவும் கேட்கப்படவில்லை. முடிவுகள் கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. மறுபக்கத்தில் இந்தியாவில் அமையப்போகும் புது வாழ்வு பற்றி கவர்ச்சிகரமான பிரச்சாரங்கள் செய்யப்பட்டபோதும் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

இந்தியாவிற்கு அனுப்பப்படும் செயன்முறைகளிலிலும் மனிதாபிமானமற்ற கெடுபிடிகள் இடம்பெற்றன. இந்திய பிரஜாவுரிமை பெற்றவர்கள் ஒரு வருடத்திற்குள் ஊழியர் சேமலாபநிதி, சேவைக்கால உபகாரப்பணம், நாணயப் பரிவர்த்தனை, அனுமதிப்பத்திரம், குடும்பஅட்டை என்பவற்றை பெற்றாக வேண்டும். தோட்டங்களைவிட்டு அதிகம் வெளியேறாத கல்வி அறிவற்ற தொழிலாளர்கள் இதனால் பெரிதும் அல்லற்பட்டனர். பலருக்கு இலஞ்சம்கொடுத்தே அவற்றைச் செய்யவேண்டியிருந்தது.

இந்த ஒரு வருட காலம் கடந்ததும் வெளியேற்ற அறிவித்தல் வழங்கப்பட்டது. அதற்கு மேல் தங்கியிருந்தவர்களை அரசாங்கம் கைதுசெய்து நாடு கடத்தியது. 1971க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நாய்களை பிடித்துச் செல்வது போல பொலீஸ் ஜீப்புக்களில் ஏற்றி, உடுத்திருந்த உடுதுணியுடன் நாடு கடத்திய சம்பவங்கள் சர்வ சாதாரணமாக இடம் பெற்றிருந்தன. பயணம் செய்யும் போது கூட பியோன் முதல் போர்ட்டர் வரை, கிளார்க் முதல் உயர் அதிகாரிகள் வரை பலர் இந்த மக்களை ஏமாற்றிப் பணம் பிடுங்கிக் கொண்டனர்.

இந்தப் பயணத்தின்போது, குடும்ப உறவுகள் துண்டிக்கப்படுவது தான் மிகவும் சோகமாக இருந்தது. பிரஜாவுரிமை முடிவு செய்யப்பட்டபோது தந்தையுடன் சேர்த்து பிரஜாவுரிமை பெற்ற குழந்தைகள் பயணம் செய்யும் காலத்தில் 18 வயதினைக் கடந்திருந்தால் தனியாக விண்ணப்பிக்க வேண்டும். அவர்களுக்குப் பிரஜாவுரிமை கிடைப்பதற்கு முன்பே பெற்றோர்களுக்கு வெளியேற்ற அறிவித்தல் வந்துவிடும். இதனால் தந்தையும் பிள்ளைகளும் பிரிய நேரிடும். சில சமயம் கணவனை மனைவி பிரிய நேரிடும். ஒரே குடும்பத்தில் ஒருவர் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றிருப்பார். இன்னொருவர் இந்தியப் பிரஜாவுரிமையைப் பெற்றிருப்பார். அவர்கள் பிரிய நேரிடும் அந்தப் பிரிவின் சோகங்களை, அழுகுரல்களை 1970 - 1977 காலத்தில் மலையகத்தின் புகையிரத நிலையங்களான நானுஓயா, ஹட்டன், நாவலப்பிட்டி, பதுளை போன்றவற்றில் தினமும் தரிசிக்க முடிந்தது.

இந்தியாவிற்கு சென்றவர்களையும் இந்திய அரசு ஒழுங்காகப் பராமரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு கடுமையாக முன்வைக்கப்பட்டிருந்தது. 4 வீதத்தவரே அம்மக்களுக்குப் பழக்கமான பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்டனர். 72 வீதமானவர்களுக்கு வியாபாரக் கடன் வழங்கப்பட்டது. சுயதொழில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். வியாபாரக் கடனாக 5000 ரூபா கட்டம் கட்டமாக வழங்கப்படும் எனக்

(23 ஆம் பக்கம் பார்க்க)

**சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கை மந்திரிசபை 1964 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தினை அங்கீகரித்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் சிறிமா அரசாங்கத்தில் நியமன பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் அவருடன் எந்த ஆலோசனையையும் மேற்கொள்ளாமலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.**



# மலையகத் தேசியம்

- வோல்டர் டெரி -

இன்று இலங்கையில் வாழுகின்ற இனக்குழுமங்களை எடுத்துக் கொண்டால் சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், இலங்கைச் சோனகர்கள் (முஸ்லீம்கள்), மலையகத் தமிழர்கள் (இந்திய வம்சாவழி தமிழர்கள்) ஆகிய இனக் குழுமங்களே பெருமளவில் அறியப்பட்டதாக இருக்கின்றனர். ஆனால் பேகர், மெலே, இலங்கையிலுள்ள ஆபிரிக்க சமூகமான கபீர் இனம், பரதர், கொழும்பு செட்டி, குறவர் மற்றும் இலங்கையின் சுதேச குடிகளான வேடுவர் பற்றிப் பெரிதாகப் பேசப்படுவதில்லை.

சிங்களவர் வட இந்தியாவின் பீகார் மேற்கு வங்காளம் பிரதேசத்தி லிருந்து வந்து இலங்கையில் குடியேறியவர்கள். இலங்கைச் முஸ்லீம்களில் பெரும்பாலானோர் துருக்கியிலிருந்து வந்து இலங்கையின் கரையோரங்களில் குடியேறியவர்கள். மலையகத்தமிழர் தமிழகத்தின் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, வடார்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆங்கிலேயர்களினால் அழைத்து வரப்பட்டு இலங்கையில் மலையகப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்டவர்கள்.

***மலையகத் தமிழர் தமிழகத்தின் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, வடார்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆங்கிலேயர்களினால் அழைத்துவரப்பட்டு இலங்கையில் மலையக பிரதேசங்களில் குடியேற்றப்பட்டவர்கள்.***

**முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள வெலிஓயா (மணலாறு என்ற தமிழ் பிரதேசம் வெலிஓயா ஆக்கப்பட்டது ) உதவி அரசாங்க பிரிவு என்பனவும் சிறந்த உதாரணங்கள் ஆகும். பேரின குடியேற்ற பிரதேசங்களின் எல்லைகளை விஸ்தரித்தல் மற்றுமொரு உத்தியாகும்.**

**சிங்களவர் வட இந்தியாவின் பீகார் மேற்கு வங்காளம் பிரதேசத்திலிருந்து வந்து இலங்கையில் குடியேறியவர்கள்.**

ஒரு தேசியத்தின் இருப்பானது பொதுப் பிரதேசம், பொதுப் பொருளாதாரம், பொது மொழி,பொதுக் கலாசாரம் என்பவற்றினால் கட்டியெழுப்பப்படுகின்றது. இதனடிப்படையில் பார்க்கும் போது மலையக தேசியமும் இந்த நான்கு அடிப்படை தூண்களினாலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆனால் இன்று மலையக்தேசியத்தின் அனைத்து அம்சங்களும் சவாலுக்கு உட்பட்டு வருவதனை அவதானிக்கலாம். குறிப்பாகப் பொது நிலம் படிப்படியாக அச்சுறுத்தல்களை சந்தித்து வருகின்றது.

நிலம் தேசியத்தின் உயிர்நாடியாகும். நிலம் இருந்தால் ஏனையவற்றைக் காலப்போக்கில் உருவாக்கிக் கொள்ளலாம். நிலம் இல்லாவிடின் ஒன்றுமே இல்லை என்ற நிலை தான். மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்பதற்கு அப்பால் இந்த மலையக மண்ணை வளப்படுத்தியவர்கள். எனவே இந்த மண்ணின் உரிமைக்குரியவர்கள்.

இலங்கையின் வட கிழக்கு அனுபவங்களும்இதையேஎங்களுக்கு உணர்த்துகின்றன சுதந்திர இலங்கையின் முதல் குடியேற்றமான கல்லோயா திட்டம் தென்பகுதி சிங்கள பிரதேசம், கிழக்குடன் இணையும் இடத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. பிறகு திட்டமிட்டமுறையில் வடக்கும் கிழக்கும் இணையும் பகுதியில் வில் வடிவில் பல குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. குடியேற்றப்பட்ட அனைவரும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் குறுகிய மனப்பான்மைகொண்ட இனவி-ரோத சிந்தனையின் அடிப்படையில் சலு-கைகளும் பல்வேறு விதமான வாக்குறுதிகளும் கொடுக்கப்பட்டும் ஒன்றும் அறியாதவர்களும்,அரசியல் கைதிகளும், இனவிரோத போதை ஊட்டப்பட்டவர்களுமான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இதனுடாக முல்லைத்தீவு - திருகோணமலை மாவட்டங்களில் தமிழரின் நிலத்தொடர்ச்சி பாதிக்கப்பட்டது. வட - கிழக்கின் தமிழரின் போராட்டத்தை பலவீனப்படுத்துவதில் இந்த குடியேற்றங்கள் பிரதான இடம் வகித்தன.

## நில உரிமையும் திட்டமிட்ட ஆக்கிரமிப்பும்

ஐரோப்பியர்- இலங்கையர் கலப்பில் உருவானதே பேகர்(பறங்கியர்) இனமாகும். மெலே இனத்தவர் இந்தோனேசியா ஜாவா தீவிலிருந்தும், பரதர்கள் தமிழகத்தின் தூத்துக்குடியிலிருந்தும் வந்தவர்களாவர். இந்திய செட்டி சமூகத்தின் வழித்தோன்றல்களே கொழும்பு செட்டிகளாவர் ஆபிரிக்க நாட்டிலிருந்து வந்தவர்களே இலங்கை வாழ் ஆபிரிக்க சமூகமான கபீர் இனமா-கும். குறவர்(நாடோடிகள்) இனத்தவரும் தென்னிந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வந்தவர்களே.

சிங்களவர்கள், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் ஆகிய இனங்கள் இன்று எண்ணிக்கை அடிப்படையில் முதன்மை பெறும் தேசியங்களாக கணிக்கப்படுகின்றன. இலங்கையிலுள்ள ஏனைய இனங்களை போன்றே சிங்கள இனம் தவிர்ந்து இலங்கைத்தமிழர், முஸ்லீம்கள் மற்றும் மலையகத்தமிழர் ஆகிய இனங்கள் தமது இருப்பு தொடர்பில் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சர்வதேசரீதியாக அவதானிக்கின்றபோது பேரினங்கள் ஏனைய தேசிய இனங்களையும், சிறு இனக் குழுமங்களையும் ஒடுக்குவதற்குப் பயன்படுத்துகின்ற பிரதான ஆயுதம் நிலமாகும். நிலத்தொடர்ச்சியை இல்லாமற் செய்தல் அல்லது நிலத்தொடர்ச்சியின் அளவை குறைத்தல் என்ற செயற்பாட்டின். ஊடாக இதனை செய்ய முயற்சிக்கின்றன. இதனை நிலப்பறிப்பு அல்லது ஆக்கிரமிப்பு எனவும் கொள்ளலாம்.

உதாரணத்திற்கு சர்வதேச அனுபவங்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம். பாலஸ்தீன பூமியை ஊடறுத்து உருவாக்கப்பட்ட யூத குடியேற்றங்களினால் இன்று பாலஸ்தீனபூமிமுழுமையாகதுண்டாடப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்தில் மிஞ்சிய பகுதிகளாகக் காசாவும், மேற்குக் கரயும் நிலத் தொடர்பற்ற இரு முனைகளில் உள்ளன. மக்களும் இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று பிலிப்பைன்ஸில் மிந்தானோ பகுதியில் இடம்பெறும் கிறிஸ்தவ குடியேற்றங்களும், கொசோவாவில் அல்பேனியரின் இடத்தை சேர்பியர்கள் ஆக் கிரமிப் பதும் ஒடுக்கு முறையின் வெளிப்பாடுகளே! ஜம்மு-காஸ்மீரில் முஸ்லீம்களின் நிலப் பகுதிகளில் இந்துக்களைக் குடியேற்ற எடுக்கும் இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளும், தேசிய இனப்பிரச்சினையை ஒடுக்க பிர-தான கருவியாக நிலப்பறிப்பு அல்லது ஆக்கிரமிப்பு எவ்வாறு பயன்படுத்தப்படுன்றது என்பதற்கான சிறந்த சர்வதேச உதாரணங்களாகும்.



குடியேற்றங்களை உருவாக்கி நிலத் தொடர்ச்சியினை ஊடறுத்த பிறகு அப்பகுதியில் பொருளாதாரத்தினை பலப்படுத்துவது ஊடாகபேரின அரசியலை பலப்படுத்துதல் என்ற தொடர் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. சுதந்திர காலத்தில் ஒரு சிங்கள தேர்தல் தொகுதி கூட கிழக்கு மாகாணத்தில் இருக்கவில்லை. ஆனால் குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு ஊடாக 1959 இல் அம்பாறைத் தொகுதியும், 1977 இல் சேருவி ல தொகுதியும் உருவாக்கப்பட்டன. இதே போன்றுதிருகோணமலைஅம்பாறைமாவட்டங்களில் இன்று சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு 10ற்கு மேற்பட்ட பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் சிங்கள பிரதேசங்கள், தமிழர் பிரதேசங்களுடன் இணைப்பதனூடாகவும் பேரின ஆக்கிரமிப்பு இடம் பெறுகின்றது. மொனராகலை மாவட்டத்தின் பதியந்தலாவை பிரதேசம் கிழக்கின் அம்பாறையுடன் இணைக்கப்பட்டது. திருகோணமலை- முல்லைத்தீவு இடையிலான தென்னைமாவடி (தமிழர் பிரதேசம்) இப்போது சிங்களவர் அதிகமாகவுள்ள அநுராதபுரம் மாவட்டம் பதவிசிரிபுர உதவி அரசாங்க பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள வெலிஓயா(மணலாறுஎன்ற தமிழ் பிரதேசம் வெலிஓயா ஆக்கப்பட்டது ) உதவி அரசாங்க பிரிவு என்பனவும் சிறந்த உதாரணங்கள் ஆகும். பேரின குடியேற்ற பிரதேசங்களின் எல்லைகளை விஸ்தரித்தல் மற்றுமொரு உத்தியாகும். மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம், சிலாவத்துறை என்பன இன்று இந்த அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன.

(தொடரும்)

# எத்தியோப்பியாவின் தேவதை

- ஸ்லெ. சுஜாதா -

எத்தியோப்பிய பெண்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார் கேத்தரின். மூன்றாண்டுகள் முடி - வடையும் நேரத்தில் எத்தியோப்பிய பெண்களை பிஸ்டுலா பிரச்சினையில் இருந்து மீட்க வேண்டிய கடமை தனக்கு இருப்பதாக நினைத்தார். ரெஜினால்டும் கேத்தரினும் ஆஸ்திரேலியா வந்தனர். மருத்துவமனை, செவிலியர்களுக்கான மருத்துவப் பயிற்சி மையம் போன்றவற்றை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கினர். பல்வேறு அமைப்புகளிடம் இருந்து நிதி சேகரித்தனர். சேவை செய்வதில் ஆர்வம் கொண்ட மருத்துவர்கள், செவிலியர்களை அழைத்தனர். எத்தியோப்பியப் பெண்கள் மிகவும் வறுமையில் இருப்பதால், முழுக்க முழுக்க இலவசமாக பிஸ்டுலா சிகிச்சை அளிக்க முடிவு செய்தனர்.

குழந்தைப் பிறப்பின்போது உருவாகும் பிரச்சினைகளில் ஒன்று அப்ஸ்டெட்ரிக்பிஸ்டுலா(Obstetric fistula). நவீன மருத்துவம், சிசேரியன் போன்ற காரணங்களால் வளர்ந்த நாடுகளில் இந்தப் பிரச்சினை அதிகம் இருப்பதில்லை. ஆனால் ஏழ்மையில் இருக்கும் ஆபிரிக்கா மற்றும் சில ஆசிய நாடுகளில் உள்ள பெண்கள் மி-கவும் பாதிக்கப்படுகிறார்கள். உலகம் முழுவதும் 20 லட்சம் பெண்கள் பிஸ்டுலா பிரச்சினையால் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பிரசவ காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் இதுபோன்ற பிரச்சினைகளுக்குச் சிகிச்சையளித்து வருகிறார் கேத்தரின் ஹாம்லின். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கேத்தரின், மருத்துவப் படிப்பை முடித்தவுடன் புகழ் பெற்ற இரண்டு மருத்துவமனைகளில் வேலை செய்துகொண்டிருந்தார். அப்போது மெடிக்கல் மருத்துவ ஆலோசகராக இருந்த ரெஜினால்ட் ஹாம்லினைத் திருமணம் செய்துகொண்டார்.

1959 ஆம் ஆண்டு மருத்துவப் பத்திரிகை ஒன்றில் விளம்பரம் வந்தது. எத்தியோப்பியாவில் குழந்தைப்பேறு மருத்துவராகப் பணிபுரிய மருத்துவர்கள் தேவை என்பதைக் கண்டவுடன், ரெஜினால்ட் ஆர்வம் காட்டினார். எத்தியோப்பியா என்றதும் கேத்தரினுக்குக் கொஞ்சம் தயக்கம் இருந்தது. மருத்துவம் படித்தால் உலகின் எந்தப் பகுதியிலும் வேலை செய்ய வேண்டியது நம் கடமை என்றார் ரெஜினால்ட். கேத்தரினும் ஏற்றுக்கொண்டார்.

எத்தியோப்பியாவில் மருத்துவப் பணி அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. வாகனங்கள் இல்லாத கிராமங்களுக்கு நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டும். குழந்தை பிறக்கும்வரை சில நாட்கள் அங்கேயே தங்க வேண்டும். குழந்தை பிறப்புக்குப் பிறகும் சிலரைக் கண்காணிக்க வேண்டியிருக்கும். கேத்தரின் அத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டார். அங்கே 14,15 வயது பெண்கள் குழந்தை பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் போதுமான ஊட்டச்சத்து கிடையாது. நான்கு, ஐந்து நாட்கள் பிரசவ வலியால் தவித்து, மிகவும் கஷ்டப்பட்டு குழந்தை பிறக்கும். அதுபோன்ற பிரசவங்களில் பிஸ்டுலா பாதிப்பு ஏற்படும். துளை மூலம் சிறுநீர், மலம் எப்போதும் வெளியேறுவதால் சகிக்க முடியாத துர்நாற்றம் வரும். இதனால் இந்தப் பெண்களை வீட்டில் அனுமதிக்க மாட்டார்கள். சிலரை வீட்டை விட்டுத் துரத்தி விடுவார்கள். சிலரை ஒதுக்குப்புறமான இடத்தில் தங்க வைத்து விடுவார்கள். கணவர்கள் வேறு திருமணம் செய்துகொள்வார்கள். கணவன், உற்றார், உறவினரை இழந்து, நோயால் அவதியுறும் பெண்கள் மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாவார்கள். உணவும் மருந்தும் இன்றி விரைவில் இறந்தும் போய்விடுவார்கள்.

எத்தியோப்பிய பெண்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார் கேத்தரின். மூன்றாண்டுகள் முடிவடையும் நேரத்தில் எத்தியோப்பிய பெண்களை பிஸ்டுலா பிரச்சினையில் இருந்து மீட்க வேண்டிய கடமை தனக்கு இருப்பதாக நினைத்தார்.

ரெஜினால்டும் கேத்தரினும் ஆஸ்திரேலியா வந்தனர். மருத்துவமனை, செவிலியர்களுக்கான மருத்துவப் பயிற்சி மையம் போன்றவற்றை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கினர். பல்வேறு அமைப்புகளிடம் இருந்து நிதி சேகரித்தனர். சேவை செய்வதில் ஆர்வம் கொண்ட மருத்துவர்கள், செவிலியர்களை அழைத்தனர். எத்தியோப்பியப் பெண்கள் மிகவும் வறுமையில் இருப்பதால், முழுக்க முழுக்க இலவசமாக பிஸ்டுலா சிகிச்சை அளிக்க முடிவு செய்தனர்.

1974-ம் ஆண்டு எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அப்பாவில் முதல் பிஸ்டுலா மருத்துவமனை ஆரம்பிக்கப் பட்டது. சிகிச்சைக்காகப் பெண்கள் வந்த வண்ணம் இருந்தனர். போதுமான படுக்கைகள் இல்லை. மருத்துவர்கள் இல்லை. அந்த ஆண்டு 32 பெண்களுக்குச் சிகிச்சையளித்தனர். மூன்றாவது ஆண்டில் 300 பெண்களுக்குச் சிகிச்சையளிக்க முடிந்தது.

செவிலியர்களுக்கும் மருத்துவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. பிரசவத்துக்கு முன்பே பெண்களைக் கண்டறிந்து, போதிய மருந்துகளும் ஊட்டச்சத்துகளும் வழங்கப்பட்டன. பாதுகாப்பான பிரசவம் நிகழ்ந்தது. பிரசவத்துக்குப் பின்பும் தேவையான மருத்துவ உதவிகளை அளித்தனர். இதன் மூலம் புதிதாக பிஸ்டுலா நோயாளிகள் உருவாவது ஓரளவு தடுக்கப்பட்டது. ஏற்கனவே பல்லாண்டுகளாக நோயில் சிக்கித் தவித்த பெண்களைத் தேடிச் சென்று சிகிச்சையளித்தனர். எத்தியோப்பியாவின் பல பகுதிகளிலும் மருத்துவ உதவி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

வாழ்க்கையிலும் பணியிலும் உறுதுணையாக இருந்த ரெஜினால்ட் மறைந்து போனார். முழுப் பொறுப்பும் கேத்தரினுக்கு வந்து சேர்ந்தது. எத்தியோப்பியப் பெண்களின் கொடூரம் நிறைந்த வாழ்க்கையைப் பதிவு செய்யும் விதத்தில் புத்தகம் எழுதினார் கேத்தரின்.

மருத்துவத்தோடு பெண்கள் திருமணம், குழந்தைப்பிறப்பு போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வையும் தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டிருந்தார். ஆனாலும் காலம் காலமாகக் கடைப்பிடித்து வரும் பழக்கங்களில் இருந்து அவர்களை மாற்றுவது அத்தனை எளிதனதாக இல்லை. அவருடைய முயற்சி தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

கடந்த 40 ஆண்டுகளில் 30 ஆயிரம் எத்தியோப்பியப் பெண்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார் கேத்தரின். இன்று நவீன கருவிகளுடன் 9 நிபுணர்கள், 500 மருத்துவ ஊழியர்களுடன் அவரது மருத்துவமனைகளும் மருத்துவ மையங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அறுவை சிகிச்சை, சத்தான உணவு, புதிய ஆடைகள், சிகிச்சைக்குப் பின் தொடரும் மருத்துவ உதவிகள் என்று ஒரு பெண்ணுக்கு சுமார் 28 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அத்தனையும் இலவசமாகவே இவரது மருத்துவமனையில் அளிக்கப் படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் 1 லட்சம் பெண்கள் பிஸ்டுலாவால் பாதிக்கப்படுகிறார்கள். அதில் 9 ஆயிரம் பெண்கள் எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர்கள். இன்றும் கேத்தரினின் தேவை இருக்கிறது. 90 வயதைக் கடந்த பிறகும் வாரத்துக்கு 6 நாட்கள் மருத்துவமனைக்குச் செல்கிறார் கேத்தரின்.

இரண்டு முறை அமைதிக்கான நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருப்பவருக்கு உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான விருதுகளும் பட்டங்களும் வழங்கப் பட்டிருக்கின்றன.

“எதிர்காலத்தில் குழந்தை பிறப்பு தொடர்பான பிரச்சினைகளில் எந்த ஒரு பெண்ணும் தன் உயிரை இழக்கக் கூடாது” நான் இல்லாவிட்டாலும் என்னுடைய லட்சியம் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை” என்கிறார் எத்தியோப்பியாவின் ஏஞ்சல், வாழும் மதர் தெரசா என்று கொண்டாடப்படும் கேத்தரின் ஹாம்லின் ●



# பிள்ளை நகம் கடிக்கிறதா?

**அஸ்ஹர் அன்ஸார்**

சிரேஷ்ட மனநல ஆலோசகர், துணைத்தலைவர், இலங்கை உளவள ஆலோசக நிபுணர்கள் சங்கம், இலங்கை மன்றம்

கேள்வி

எனது பிள்ளைக்கு இப்போது வயது 06 ஆகிறது. கடந்த இரண்டு வருடங்களாக நகம் கடிக்கும் பழக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றான். எவ்வளவோ சொல்லியும் கேற்கிறான் இல்லை. ஏசியும் அடித்துப் பார்த்திருக்கிறேன். சில சமயம் கடுமையாக அடித்து உணவு கொடுக்காமல் தண்டித்தும் இருக்கிறேன். நான் என்ன செய்வது? எவ்வாறு நிறுத்துவது? தயவு செய்து தவறாமல் தெளிவான ஒரு பதிலை தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகம் கடித்தல் பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை பொதுவாகவே காணமுடியுமான ஒரு பழக்கமாகும். சிலர் அவர்களை அறியாமலேயே நகம் கடிக்கின்றனர். வாசிக்கும் போதும், தொலைக்காட்சி பார்க்கும் போதும் தொலைபேசியில் பேசும் போதும், ஒரு நிகழ்வில் பங்கு பற்றும் போதும் சிறுவர்களும் பெரியவர்களும் நகம் கடிப்பதைப் பார்த்திருக்கிறோம். சில சமயம் நாமும் இதை அனுபவித்திருப்போம். சிலர் உறக்கத்தின்போதும் நகம் கடிப்பர், கனவுகளால் ஏற்படும் மன உளைச்சல் அல்லது பொதுவாக ஏற்படும் மன உளைச்சல் காரணமாக உறக்கத்தில் நகம் கடிக்கும் பழக்கம் ஏற்படுவதாக சொல்லப்படுகிறது.

7 தொடகக்கம் 10 வயது வரையிலான பிள்ளைகளில் 28 - 30 வீதமும் கட்டிளமைப் பருவத்தை உடையோரில் 45 வீதமும் வாலிபர்களில் 19-29 வீதமும் வயோதிபர்களில் 5 வீதமும் நகம் கடிக்கும் பழக்கத்ததிற்கு உட்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நகம் கடிக்கும் பழக்கம் பொரும்பாலும் குழந்தைப் பருவத்திலிருந்து ஆரம்பமாகும் ஒரு பழக்கமாகும். நாம் பெற்றோர் என்ற வகையில் எமது குழந்தைகள் நகம் கடிப்பதைக் காணும் போது வெறுப்பும் சில சமயம் கோபமும் அடைகிறோம். எம்மை அறியாமலே-யே நாம் அவர்களை ஏசவும், கைளைத் தட்டிவிடவும், வேண்டாம் என அதட்டி சொலவும் முற்படுகிறோம். சில பெற்றோர்கள் தமது பிள்ளைக்கு நகம் கடிக்க வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் ஏசியும் அடித்துப் பார்த்தும் அதை நிறுத்துகின்றான் இல்லை எனக் கோபத்தோடும் கவலையோடும் முறையிடுவதை அவதானித்திருப்போம். பிள்ளைகள் நகம் கடிக்கப் பல உடல் உள காரணங்கள் தாக்கம் செலுத்துகின்றன என்பதை நம்மில் அனேகமாகன பெற்றோர்கள் அறிந்திருப்பதில்லை. உண்மையான காரணங்களைக் கண்டறியாமல் அவசரப்பட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முறையற்ற முறைகளில் முயற்சிப்பதால் பிள்ளை வேறுவிதமான உளத்தாக்கங்களுக்கு உட்பட்டு அவதியுற காரணமாக அமையலாம்.



## நகம் கடிப்பதற்கான காரணம்

- எண்ணச் சுழற்சி நோய், சந்தேக மனப் பான்மையால் ஏற்படும் மன நிலை மாற்றம்
- குடும்பத்தில் நகம் கடிப்பவர்கள் இருந்தால் அவர்களைப் பார்த்து பழகுதல்
- அதிகூடிய செயற்ப்பாடுடைய பிள்ளைகளும் நகம் கடிக்கலாம்
- தனிமை, வெறுப்பு போன்றன. உதாரணமாகப் பெற்றோரின் பிரிவு, மனமுறிவுகள், சண்டை சச்சரவுகள், பாடசாலையில் மாணவர்களோடு அல்லது நண்பர்களோடு ஏற்படும் பிரச்சினைகள், புதிய சூழல் நெருக்கமான ஒருவரின் இழப்பு, என்பனவும் காரணமாக இருக்கலாம்.

## செய்யக் கூடாதவைகள்

- நகம் கடிக்கும் போது அடித்தல் அல்லது ஏசுதல்
- பிள்ளை மற்றவர்கள் முன் இருக்கும் போது நகம் கடிப்பது பற்றி முறையிடுதல்
- 'வேண்டாம்' என சொல்லி பலவந்தமாக தடைசெய்ய முயற்சித்தல்
- பெற்றோரின் அதிருப்தியை அடிக்கடி பிள்ளையிடம் காட்டல்

## என்ன செய்ய வேண்டும்?

- பிள்ளையின் குறைபாடுகளை தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றல்
- பிள்ளையை எப்பொழுதும் சந்தோசமாக வைத்தல்
- பிள்ளையைத் தனியாக இருக்கவிடாமல் அவர்களுடன் விளையாடுதல்
- சிறிய வீட்டு வேலைகளில் ஈடுபடுத்திக் கொள்ளல்
- பிள்ளைகள் மீது அன்பு செலுத்துவதை உணர வைத்தல்
- மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட வாய்ப்புகளை ஏற்படுத்தல்
- உங்களுக்கு அருகாமையில் அல்லது உங்கள் மடியில் பிள்ளை அமர்ந்து கொண்டிருக்கும் போது நகம் கடிக்க ஆரம்பித்தால் ' வேண்டாம் ' என்று சொல்லி தடைசெய்யாமல் மிக நுட்பமாக செயற்பட வேண்டும். ஒரு விளையாட்டுப் பொருளைக் கையில் கொடுத்து அல்லது ஒரு விளையாட்டில் ஈடுபட வைத்து அல்லது வரைவதற்கு, வாசிக்கக் கொடுத்து நகம் கடிக்கும் எண்ணத்தை மாற்ற முயற்சிக்கலாம்.
- உங்கள் பிள்ளை பெண் பிள்ளையாயின் நகம் கடிப்பதால் ஏற்படும் எதிர் விளைவுகளை மென்மையாகக் கதைத்து உங்கள் நகங்களைக் காட்டி நல்ல நகங்கள் உங்களுக்கு அழகான தோற்றத்தைத் தரும் என்று சொல்லலாம்.

## ஏற்படும் எதிர் விளைவுகள்

நகம் கடிப்பவர்கள் பெரும்பாலும் நகத்தை வெட்டுவதோ அல்லது முறையாக பராமரிப்பதோ இல்லை. தொடர்ந்து நகம் கடிப்பதால் நகமும் தோலும் சேருமிடம் காயமடைந்து வலியை ஏற்படுத்தவும் செய்யும். நகம் முறையாக வெட்டப்படாததால் சில கிருமிகளின் தொற்றுகளுக்கு இலகுவாக உள்ளாகக் கூடிய வாய்ப்பும் அதிகமுள்ளது. நகத்துக்கும் தோல் பகுதிக்கும் இடையில் காணப்படும் பக்றீரியாக்கள் உமிழ்நீருடன் மிக வேகமாக சேர்ந்து உடலை அடைகின்றன. இது வேறு விதமான உடல் சார்ந்த உபாதைகளை ஏற்படுத்திவிடக் காரணமாக அமையும். இவ்விடயங்கள் பற்றி குழந்தைகளுக்கு மிக இலகுவான முறையில் எடுத்து சொல்லி அறிவூட்ட வேண்டும்.

சாதாரணமாக நகம் கடிக்கும் பழக்கம் இயல்பாகவே நின்றுவிடக் கூடிய ஒன்றாக இருந்தபோதிலும் சிலர் நகம், தோல் முனை, நகத்தை சுற்றிய தோல் பகுதி என்பவற்றை இரத்தம் வடியும் வரையிலும் கடிப்பார்கள். இவ்வாறான பழக்கமுடையவர்களைத் தாமதியாது மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

---

08 ஆம் பக்க தொடர்ச்சி

**மைத்திரியின் தேர்தல்.....**

மற்றைய விடயம் மிகவும் முக்கியமானது தமிழ் மக்களின் பிரச்சினைகள் வெளிப்படையானவை. அவற்றுக்கான தீர்வுகளும் வெளிப்படையானவை. அவற்றை வெளிப்படையான அரங்குகளில் வைத்துப் பேசாமல் இரகசியமான அரங்குகளில் பேசித் தீர்மானிக்க முடியுமா? முதலில் மைத்திரி வெல்லட்டும் பின்னர் தமிழர் விவகாரம் பற்றி பேசலாம் என்பது சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ் மக்களை அழைத்துச் செல்வதற்கான உபாயம் மட்டுமே. தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுத் தான் மக்கள் வாக்களிக்கின்றனர். தேர்தலில் வென்ற பின்னர் ஹெலஉறுமயவுடன் ஒரு உடன்படிக்கையும் செய்யாத நிலையில் இனப் பிரச்சினையை மைத்திரி தீர்த்து வைப்பார் என நம்புவதற்கு தமிழ் மக்கள் முட்டாள்கள் அல்லர். இது விடயத்தில் மனோகணேசனிடம் இருந்த நேர்மை கூட சம்பந்தன் தலைமையிடம் இருக்கவில்லை. மனோகணேசன் மைத்திரி ஆட்சியில் தமிழ் மக்களுக்கு தேனும்பாலும் ஓடப்போவதில்லை என தெளிவாகவே குறிப்பிட்டார். இதைக் கூறும் துணிவு கூட சம்பந்தன் தலைமைக்கு இருக்கவில்லை.

உண்மையில் மைத்திரியை வேட்பாளராக நிறுத்தியமை இந்தியாவினதும், மேற்குலகத்தினதும் இணைந்த ஒரு வேலைத் திட்டமே. சீனாவின் செல்வாக்கை இலங்கையிலிருந்து அகற்றுவதே அவற்றின் இலக்கு. இந்த இலக்கு நோக்கிய நகர்விற்கு எந்தவித பிரதிபலனும் இல்லாமல் கூட்டமைப்பினர் சோரம்போயுள்ளனர். இந்தியாவும் மேற்குலகமும் தமிழ் மக்களைப் பயன்படுத்தி, தமது நலன்களை வென்று கொண்டு செல்கின்றனர். எங்கள் தலைமைகள் மட்டும் எங்கள் விவகாரத்தை முன்வைத்து பேரம் பேசாமல் இந்தியாவினதும் மேற்குலகினதும் நிகழ்ச்சிநிரலுக்குள் தமிழ் மக்களின் விவகாரங்களையும் உள்ளடக்காமல், அவற்றிற்கு அடிமைச் சேவகம் செய்கின்றன.

# கந்தையா அண்ணர்



அந்தக் குளத்தடி ஊரின் நீச்சல் தடாகம். கோடையில் வற்றிப்போன நீரின் சதுப்புக்குள்ளும் மாரி காலத்து நிறை நீர் வரை வருடம் முழுவதும் இளசுகள் முதல் முதியவர் வரை நீச்சல் அடிக்கும் தடாகம் அது. அதை விட அந்த ஊரின் வளர்ப்பு மிருகங்கள் அனைத்தினதும் தாகம் தீர்க்கும் நீரணை. அதை எல்லோரும் தளவில் என்று அழைத்தாலும் அதற்கான அர்த்தத்தை யாரும் அறிய முனைந்ததில்லை. அது ஒரு காரணப்பெயராகக் கூட இருக்கலாம். அதன் வரலாறு யாரும் கண்டு கொள்ளப்படாத ஒன்று. ஆனாலும் அந்தக் குளம் வருடத்தின் நீர் வற்றும் நாட்களில் முற்று முழுதாக சேறு எடுத்து திருத்தம் கண்டு புதிய பொலிவு பெற்று நிமிர்ந்து நிற்கும். அத்தகைய அந்தக் குளத்தின் கட்டில் தான் அந்த மெலிந்த உருவம் பெற்று மாடுகளை மேய்ச்சலுக்காக விட்டு எதோ சிந்தனையில் தன்னைத் தொலைத்து விட்டு இருக்கிறது.

"என்ன கந்தையா அண்ண இந்த சூட்டுக்க இருக்கிறியள் " வயலில் பிடுங்கிய புல்லை மாட்டுக்காகக் கட்டி தலையில் சுமந்து செல்லும் பெண்கள் அவரது நலத்தின் அக்கறையில் விசாரிப்பார்கள். ஆனாலும் "இது என் தாய் மண். இதில இருந்தா சூரியன் கூட சுடாது பிள்ளை" தன் தாய்-மண் மீதான பற்றை அவர்களுக்கு எடுத்துரைத்து சிரிப்பார் கந்தையா அண்ணர். தலையில் எப்போதும் கட்டப்பட்டு இருக்கும் ஒரு துண்டின் நிழலில் மட்டும் குளிர்மையை அடைந்து கொண்டிருப்பார். பட்டன்கள் திறந்த நிலை யில் எப்போதும் ஒரு சேட் போட்டிருப்பார். அதன் பொக்கெட்டில் எப்போதும் ஒரு பேனா வும் குறிப்பு புத்தகமும் இருக்கும். ஆனால் அவை எதற்கு பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

அந்த ஊரின் பிரபல்யமான ஒரு விவசாயி "கந்தையா" அவர் செய்யாத விவசாயம் இல்லை எங்கு கால் வைத்தாலும் அதை பொன்னாக்கும் திறமை உள்ள மனுஷன். காலை புலர முன் வயல், தோட்டம் என்று தொடங்கும் அந்த மனுசண்ட வாழ்க்கை, மாலையாகியும் முடியாத வேலையோடு பயணிக்கும். சொந்தமாக வைத்திருக்கும் பத்து ஏக்கர் காணியில் தன் முழு முயற்சிகளையும் முன்னிறுத்தி உழைத்த உழைப்பின் பயன் அவரது மனைவி பிள்ளைகளின் வெளிர்ப்பில் உணரக்கூடியதாக இருக்கும்.

நான்கு பெண் பிள்ளைகளையும் ஒரு ஆண் மகனையும் தன் வாரிசுகளாகப் பெற்றெடுத்த கந்தையா அண்ணர் அவர்களது வளர்ச்சியில் முழு முயற்சியையும் போட்டார் என்பதை விட விவசாயத்தை இமைபோல் காத்தார் என்பதே மிகப்பொருத்தமானது. "பிள்ள நான் இண்டைக்கு உரம் போடப்போறன். உதவிக்கு வாறியளே?" வினாவிலே அவரது முடிவும் எதிரொலிக்கும். தந்தையின் சொல்லை மந்திரமாக மதிக்கும் அவர்களும் அவரது சொல்லை எப்போதும் மீறியதில்லை அவர்களது பணிகள் அனைத்தும் நிறுத்தம் கண்டு அன்றைய பொழுது விவசாய கடமையாக மலர்ந்து முடியும்.

கண்ணை இமை காப்பது போல விவசாயத்தைக் காத்து வந்த கந்தையா அண்ணருக்கு எப்போதும் ஒரு பெருமிதம் இருக்கும் "நான் இந்த ஊரின் சிறந்த விவசாயி". அதை உறுதிப்படுத்துவன போலவே வெய்யிலில் காய்ந்து கொண்டிருக்கும் சிகப்பு மிளகாயும், புகையிலையும் என வீட்டு முற்றத்தின் முழுமையும் அவரது விளைச்சல்கள் நிறைந்து காணப்படும். திரும்பும் இடமெங்கும் சிறப்பான விளைச்சலின் எதிரோளிப்பால் மனமும் வீடும் நிறைந்து கிடப்பதை யாரும் மறுதலிக்க முடியாது.

**- கவிமகன் -**

"மச்சான் கந்தையா அண்ணர் நிக்கிறார் வம்பு வேணாம் மற்ற பாதையால போவம்.." இது இளசுகளின் சலசலப்பு. அவர் இளசுகளுக்கு எதிரி அல்ல ஆனால் அந்த இளசுகள் மீது மிகவும் கண்டிப்பானவர். தீய எண்ணங்களை சுமந்து கொண்டு அந்தப் பக்கம் வரும் எவரும் அவர் பார்வையில் இருந்து தப்பித்தது இல்லை. "தம்பி இது நல்லதில்ல பெண் பிள்ளைகள் இருக்கிற இடத்தில இப்பிடி செய்யாதீங்க", என்று தொடங்கும் அவரது வார்த்தைகள் சில சமயங்களில் தண்டனையில் சென்று முடிவடையும். அதனாலோ என்னவோ இளசுகளுக்கு இவர் என்றால் கொஞ்சம் பயம் தான். பெரியவர்கள் மத்தியில் நல் மதிப்பைக் கொண்டிருக்கும் இவர், சில சமயங்களில் தன்னை விட வயது முதிர்ந்தவர்களுக்கே வழிகாட்டியாக இருப்பார் என்றால் அது விவசாயத்தில் என்பது நியாயமானதே.

விவசாய கூட்டுறவு சங்கங்களால் மதிப்பளிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் விவசாயத்தின் பெருமையை நிலை நிறுத்திய அந்த மனிதனுக்குள் எங்கோ ஒளிந்து கொண்டிருந்தது ஒரு பொல்லாத நோய் யாருமே அறிந்திராத ஒன்று. அவருக்கு ஒரு காச்சல் என்பது கூட வந்திராத மனமகிழ்வு இருக்கும் "டேய் பதினாறு வயசில இருந்து மண்வெட்டி பிடிக்கும் கையடா. எங்களை நோய் எல்லாம் வந்து சாகடிக்க முடியாதுடா" என்று பெருமை கொள்ளுவார் தன் மகனிடம். அவர் ஏன் இவ்வாறு இருக்கின்றார் என்பதற்கு இன்னும் ஒரு இரகசியமும் உண்டு. அது அவரது உணவு பழக்கவழக்கம் என்றால் எந்த பொய்யும் இல்லாதது என்றே கூற முடியும்.

கமலம் குறித்த நேரத்தில் உணவோடு தோட்டத்தில் நிற்கவேண்டும். இல்லை என்றால் அவரது கண்களில் எழும் கோபத்தின் அனலை யாராலும் சந்திக்க முடியாது என்ன பிரச்சினைகள் வரினும் அதை எல்லாம் மீறி சரியான நேரத்தில் உணவை அவருக்கு அளிக்க வேண்டியது அவரது மனைவியான கமலத்தின் கடமை. தலையில் சுமந்து செல்லும் கூடையில் இருக்கும் உணவைப் பரிமாறி சிறிது நேரம் உறக்கம் கொள்ளும்வரை அவரது வேலைகளைத் தானே செய்து அவரோடு ஒன்றிப் போய் கிடக்கும் அந்த மனது கூறி கொள்ளும் "பாவம் மனுஷன். கஷ்டப்படுகுது. கொஞ்ச நேரம் தூங்கட்டும்.


நீண்டநேரம் அசதியில் தூங்கி எழும் கந்தையா எழுந்த உடன் பிள்ளைகளின் நிலை பற்றி ஆலோசிப்பார். மூத்தவளுக்கு வயசாகிட்டுது அவள் படித்து டீச்சர் ஆகிட்டால். இனி என்ன பிரச்சினை. கல்யாணத்தை பேசுறது தானே" முடிவுகள் எடுக்கப்பட்டு மாப்பிளை தேடி அலைவார். ஆனால் வரும் வரன் எல்லாம் சீதனத்தின் கொடுமையை சொல்லி நிற்க திகைத்து போய் கிடந்தார் அவர். விவசாயத்துக்காகவே தன்னை அர்ப்பணித்த கந்தையாவால் அவர்கள் கேட்கும் சீதனத் தொகையை கொடுக்க முடியாது. சிறந்த விவசாயி தான். ஆனாலும் அவரது வருமானம் ஏழு கோப்பைகளில் பரிமாறப்படும் போது எவ்வாறு அவரால் சில லட்சம் தொகையை கொடுத்து மகளுக்குத் திருமணம் செய்ய முடியும்.

"சீதனம்" சீ பெண்களின் வாழ்க்கையையே தொலைக்க வந்த இந்தக் கொடுமையை இல்லாது ஒழிக்க யாரும் வர மாட்டார்களா? என்று மனதுக்குள்ளே அழத்தொடங்கி இருந்தார். கடுமையான

(23 ஆம் பக்கம் பார்க்க)

# பார்த்தீபனின் புதுமுயற்சி "கதை திரைக்கதை வசனம் இயக்கம்"

அ.ராமசாமி



சினிமாவைப் பற்றிய சினிமா என்றோ, சினிமாவுக்குள் சினிமா என்றோ பேசி முடித்துவிடக் கூடாத ஒரு படம். அதையும் தாண்டி ஒரு புது வகையினமாக தமிழுக்கு அறிமுகமாகியிருக்கும் சினிமா எனச் சொல்ல ஆசைப்படுகிறேன். நீண்ட நெடிய தமிழ்ச் சினிமாவின் வரலாற்றில் புத்தம் புதிதாக வந்துள்ள வகையினம் இது. இந்தப் புதுவகையை வகையினத்தை மெட்டா சினிமா வகையினம் எனத் திரைக் கோட்பாளர் விளக்கிச் சொல்வர். மெட்டா என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் 'நின்றுதொலைதல்' எனச் சொல்லலாம்.

ஐரோப்பிய சினிமா உலகம் அவ்வப்போது இந்த நின்று தொலையும் மனநிலையைத் தேடியிருக்கிறது. ஆனால் தமிழ்ச் சினிமாவில் அந்த வெளிப்பாடு மிகக் குறைவு. இல்லாமலே இருந்தது. பார்த்தீபன் இந்தப் படத்தில் அதனைக் கண்டடைந்திருக்கிறார்.

"கதையே இல்லாமல் ஒரு திரைப் படம்" எனப் பார்த்தீபனும் ஒரு பொய்யைச் சொல்லியே பார்வையாளர்களைத் திரையரங்கிற்கு இழுக்க முயற்சி செய்துள்ளார். உள்ளே வந்த பார்வையாளர்களிடம் ஒரு கதைக்குப் பதிலாகப் பலகதைகளைச் சொல்கிறார். 'சொல்கிறார்' என்று சொல்வது கூடச் சரியில்லை. 'சொல்லப்படுகிறது' எனக் கூறுவதே சரியாக இருக்கும். சொல்லப்படும் கதையே நவீனத்துவத்தை உள்வாங்கிய கதையாக இருக்கக்கூடியது.

"சினிமாவுக்குக் கதை செய்வதைப் பற்றிய கதை" பார்த்தீபனால் சொல்லப்படும் கதை. அந்தக் கதையைச் சொல்லும் போது கதை செய்யும் குழுவாக இருக்கும் உதவி இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர், இணை இயக்குநராகச் செயல்படப் போகும் மூத்தவரின் கதை என்பதோடு இயக்குநரின் கதையும் பார்வையாளர்களுக்குச் சொல்லப் படுகிறது. அவர்களுக்குள் இருக்கும் படிநிலை வரிசைக்கேற்ப அவர்களின் கதைகளின் அளவும் கூடுதல் குறைவாக இருக்கிறது. வில்லத்தனமான உதவி இயக்குநரின் கதையும் கூட இருக்கிறது. அவர்களுக்குத் தொடர்பில்லாத தற்கொலைக்காகக் காவல் நிலையம் போக நேரிடும் போது அங்கே ஒட்டப்பட்டிருக்கும் குற்றவாளிகளின் பட்டியலில் இருப்பவனும் கூட இவர்களோடு உதவி இயக்குநராக இருந்தான் எனக் கதை சொல்லப்படுகிறது.

எல்லோருடைய கதைகளும் சொல்லப்பட்டாலும் இயக்குநர் தமிழின் வாழ்க்கைக் கதைதான் படமாக ஆக்கப்படும் கதையாக நீள்கிறது. ஆக்கப்படும் கதையும் இயக்குநர் தமிழின் வாழ்க்கைக் கதையின் முழுமை எனச் சொல்லிவிடவில்லை. பாதிதான் நடந்த கதை, மீதிப்பாதி நடப்பதற்குச் சாத்தியமான கதை. உண்மை பாதி, புனைவு பாதி, உண்மையின் மீது கட்டப்படும் புனைவே சினிமாவுக்கான கதையாக இருக்கமுடியும் என்ற நம்பிக்கையில்தான் நவீனத்துவம் தன் இருப்பை உறுதி செய்துள்ளது.

**காவ்யபாணி நடிப்பு என்பது ஜெர்மனிய நாடகக் கோட்பாட்டாளரும் நாடகாசிரியரும் கவியுமான பெர்ட்டோல்ட் பிரக்டின் கலையுலகத்திற்குத் தந்த கொ-டை. அது பார்வையாளர்களைப் பாத்திரத்தோடு ஒன்றவிடாமல் விலக்கி நிறுத்தும் ஒரு வகை நடிப்பு.**

தனக்குப் பிடித்துப் போனவன் தன்னைவிடச் சினிமாவை அதிகம் காதலிப்பவன் எனத் தெரிந்த பின்னும் விடாப்பிடியாகக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு வாங்கும் சம்பளத்தில் தன் கணவனைக் கலைஞனாக ஆக்கிவிடத் தயாரானவள் மட்டுமல்ல அவளது மனைவி. தன் அந்தரங்கத்தைக் கூட விட்டுக் கொடுத்துக்காதலை, வளர்த்துக் கொண்டே இருப்பவள். அவளுக்கு எதிரான இன்னொரு பாத்திரம் எதிர் வீட்டிற்கு வருகிறது. அவளுக்கும் காதலும் அதன் தொடர்ச்சியான காமமும்தான் வாழ்க்கை. கல்யாணம் ஆகாதவன் என நினைத்துக் காதல் கடிதம் கொடுத்தபின் உண்மை தெரிந்தாலும் மோகத்தோடு காதலிப்பவள். இந்த முரண் காலம் காலமாக வாழ்க்கையை சுவாரசியமாக்கும் ஒன்று. அதிலும் ஒருத்திக்கு ஒருவன் என்று விடாப்பிடியாக மூடனத்தனத்தோடு நம்பிக்கொண்டிருக்கும் இந்திய/தமிழ்ச் சமூகத்தில் இரண்டு பெண் ஒரு ஆண் என்ற முக்கோணக் கதை புதிய ஒன்றல்ல.






ஒரு முடிவைச் சொல்வதைக் கேள்விக்குள்ளாகியுள்ளது கதை திரைக்கதைவசனம் இயக்கம், அதைவிட முடிவைப் பார்வையாளனிடம் விட்டு விடவேண்டும். அதுவே சினிமா என முன்மொழிந்துள்ளார் இயக்குநர், முன்மொழிவது பார்த்தீபன் உருவாக்கிய இயக்குநர் தமிழ். அந்த இயக்குநரின்முடிவை ஏற்று விவாதத்தைத் தொடரச் செய்கிறார் இயக்குநர் பார்த்தீபன். கொஞ்சம் பின்னோக்கிப் போனால் படத்திற்குள் இருக்கும் இயக்குநர் தமிழின் சொந்தக்கதை, இயக்குநர் பார்த்தீபனின் சொந்தக் கதையாக இருக்கவும் வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பு முழுமையான உண்மை அல்ல. 50க்கு 50 நடந்தது பாதி, நடக்கக் கூடியது பாதி. நிகழ்ந்தது பாதி, நிகமும் சாத்தியங்கள் மீதி.

கதை அதைத் திரைக்கதையாக ஆக்கும் முறை ஆகியவற்றில் விவாதம் வேண்டும். அந்த விவாதம் தனிமனித வாழ்க்கையின் மீதான விமர்சனம் போல வெளிப்பட்டு, பெரும்பான்மை மனிதர்களின் வாழ்க்கைக்குள் நுழையும் விதமாக அமைய வேண்டும் என்ற கலைக்கோட்பாட்டை ஏற்று முன்வைத்துள்ளது படம். அதன் தொடர்ச்சியாகத் தமிழ்ச் சினிமா இதுவரை உருவாக்கிக் கொண்ட மொழியிலிருந்து அறிவு பூர்வமாக விலகியிருக்கிறது.

சினிமாவோடுதொடர்பில்லா இயக்குநரின் மனைவி, அவருக்குப் போட்டியாக வரப்போகும் காதலி, அவரது குடும்ப உறுப்பினர்கள் என அனைவரும் யதார்த்தபாணிக் கதாபாத்திரங்களாகத் தோன்றுகின்றனர். அதே போல் சினிமா என்னும் மோகினியும் வறுமை என்னும் துயரமும் ஒரு சேரக் குடிகொண்டிருக்கும் இரண்டு பெண்டாட்டிக்காரரான இணை இயக்குநரிடம் மட்டும் யதார்த்த நடிப்பை நடிக்கச் செய்துள்ளார். காரணம், அவர்களுக்குத் தெரிந்தது அவைதான். ஆனால் மற்ற பாத்திரங்கள் தங்களை வடிவமைத்துக் கொள்ள விரும்பும் நவீன மனிதர்கள். அதனால் அவர்களிடம் பாத்திரத்திலிருந்து நடிகரகவும் நடிகரிலிருந்து பாத்திரமாக மாறும் காவ்ய பாணி நடிப்பை கற்றுத் தந்து உருவாக்கியுள்ளார். காவ்யபாணி நடிப்பு என்பது ஜெர்மானிய நாடகக் கோட்பாட்டாளரும் நாடகாசிரியரும் கவியுமான பெர்ட்டோல்ட் பிரக்டின் கலையுலகத்திற்குத் தந்த கொ-டை. அது பார்வையாளர்களைப் பாத்திரத்தோடு ஒன்றவிடாமல் விலக்கி நிறுத்தும் ஒரு வகை நடிப்பு. அவ்வகை நடிப்பு, பார்வையாளனைத் தொடர்ந்து தன்னுணர்வு கொண்டவனாக வைத்திருக்கவும் விமர்சன உணர்வைத் தூண்டிக் கொண்டே இருக்கவும் பயன்படும்.

கதை திரைக்கதை வசனம் இயக்கம் ஒரு நவீனத் தமிழ்ச் சினிமாவாக வந்துள்ளது. நடிப்பு முறையில் மட்டுமல்லாமல், காட்சிகளின் அளவு, காட்சிகளில் இடம்பெறக் கூடிய நடிகர்கள், பின்னணி இசை, இயக்குநர் பார்த்தீபனே தோன்றிப் பேசுவது, காட்சியோடு பொருந்தவேண்டிய இசைக்குமறான இசைத் துணுக்குகளை அல்லது திரைப் படப் பாடல்களை இசைக்கச்செய்வது, அறியப் பெற்ற பிரபலங்களைத் தோன்றச் செய்வது எனப் பல நிலைகளில் பிரக்டிய பாணி இந்தப் படத்தில் கையாளப்பட்டுள்ளது. காமரா வழியாகப் பிடிக்கப்பெற்ற படக் காட்சிகளை அடுக்கிய முறையிலும், உரையாடல்கள் திடீரென்று நேர்ப்பேச்சாக மாற்றப்படுவதன் மூலமும், நாம் எந்தச் சினிமாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற கேள்வி பார்வையாளர்களுக்குத் தோன்றிக்கொண்டே இருக்கும்படி காட்சிகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. அழகு ததும்பும் அமலாபாலும் ஆர்யாவும் தான் நாயகியாகவும் நாயகனாகவும் ஆகப்போகிறார்கள் என நினைத்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களின் எண்ணம் திசை திருப்பப்பட்டு மறக்கடிக்கப்படுகிறது. சோகம் கப்பிய கண்களோடு குடிசைக்கு முன்னால் கிட்டார் வாசித்துக் கொண்டிருந்த தாப்ஸியின் கதை திரும்பவும் வராதா? என்ற ஏக்கம் நிறைவேற்றப் படவில்லை. நல்ல கதையை முடிவு செய்த பின் சேரனைப் பார்த்துப்பேசி தமிழில் பெரிய இயக்குநராகி விடுவார் என்ற எதிர்பார்ப்பும் துண்டிக்கப்படுகிறது.





நன்றி உயிர்மை

## சாளிச்சைக்கிளும் கிளாலிப்பாதையும்

சாளிச்சைக்கிளும்
கிளாலிப்பாதையும்!
கொம்படி கொழுவ
குண்டடி தொடர
பொம்பர் சுத்த
வண்டும் இரைய
செல்லும் குத்த
நிண்டு திறந்தது
கிளாலிப் பாதை
நிண்டவரெல்லாம்
ஏத்திக்கொண்டே
சுண்டெலியாக
ஓடித்திரியும்
குண்டுக்கு பயந்து
குறாவிக்கிடவாமல்
நண்டுக்குஞ்சாய்
விலத்தி மறையும்
வேலிக்கிளுவை தாவித்திரியும்
ஒலைப்படலை
ஒடிஞ்சு தெறிக்கும்
மாலைப் பொழுதும்
மனிசரை ஏத்தி
வேளைக்கு வேளை
யாழ்நகர் போகும்
ஆரும் கேட்டால்
'அயர்' எண்டு சொல்லும்
பாம்புக்கடிக்கும்
பட்டினிப்பருப்புக்கும்
வேம்புப்பட்டைக்கும்
வெருளி கட்டவும்
கிண்டிக்கொண்டே
கிளம்பி மறையும்
காயக்காறரை
ஏத்திப்பறிக்கவும்
காய்ச்சல்காறரை
தூக்கி நிமித்தவும்
தேங்காய் மூட்டை
கொட்டிப்பிரிக்கவும்
தனியாளாய்
தவண்டு முறியும்
பச்சைப்பெயின்ரு
பறுகுக்கள்ளன்
கோவம்வத்து
கொழுவுப்பட்டால்
ஆசைப்பிள்ளை ஏத்தத்தில்
ஏறி அடம்பிடித்து
அசையாமல் நின்றுடுவான்.
தட்டித்தடவி
தள்ளிப்பாத்து
சொட்டுப்பெற்றோல் பருக்கிவிட்டால்
பாய்வான்
பறப்பான்
பலதும் செய்வான்
பெற்றோல்இல்லாட்டி
மற்றோர் பானம்
ரின்னர்!
ஒத்துழைச்சோட
ஓடிக்கலோனையும்
ஒரு வாய் குடிச்சு
பல மைல் ஓடும்
அகண்ட சில்லன்
ஆருக்கும் பணியான்
வெருண்டுகொண்டும்
வெளியாலை திரியான்
நாவூறுபடாமல் நாலைஞ்சு
தேசிக்காய்
பேயூறு கொடாமல்
வேளையும்
வெண்ணீறும்
இலக்கத்தகட்டையே
இலகுவாய் மறைத்திடும்
இத்தனை கட்டியும்
இடையிலை நிக்கிற
குறையது இல்லை
இப்படி உழைச்ச
அற்புத சீவன்
எங்கை மறைஞ்சுதோ
எப்படி துலைஞ்சுதோ

– வினோதரன்–



## ஊசல்

அணிவகுத்து நின்ற
நாள்களில்
கைகொடுத்த உறவுகள்
அணி குலைந்த பின்
கைவிட்டு விட்டதே.
புனர்வாழ்வழிக்கப்பட்டு
விட்டதாகக்
கூறும் அரசு
எம்மை
புலம்பெயர வைக்கிறது.

செல்வக்குமார்

## இரவின் தடங்கள்

அந்தக் கணத்தின் நிசப்தம்
எதையும் உணர்த்திப் போனதாக
நினைவில்லை
இருட்டும் நானும் மட்டுமேயான
தெருக்களில்
மழைச்சரங்களும் சில்லூறுகளும்
என் காலடித்தடங்களுடன்
வழித்துணையாகிக் கூடவே
சலனங்களில்லாப் பொழுதுகளின்
பிரளயங்களைத் தூண்டியபடி

மௌனங்கள் இன்னமும்
மொழிபெயர்க்கப்படா
சாலைகளின் வளைவுகளுள்
ஏதோவொன்றிலிருந்து தோன்றிப் பின்
தொடர்கிறது
கனவுகளைக் கலைத்துப்போகும்
முகமூடி மனிதனைப் போல
இன்னுமொரு காலடியோசை

பாதங்கள் விரிந்து
முதுகுப் பரப்பெங்கும்
நிழலாய்ப் படர்வதை உணர்ந்து
திடுக்கிட்ட மனம் சில்லிட்டுப் போக
பிரபஞ்சத்தை நிறைத்தபடி
கண்ணெதிரே விரிகிறது
முன்னமொரு நாளில்
அணுவணுவாய் உணர்வுகளை
சிதைத்துப் போனவனின் முகம்
மற்றுமொரு மழைக்காலத்தில்
பீதியூட்டும் காலடியோசை
பின்தொடராத் தவிப்பில்
பதறுகின்ற மனத்தோடு
மறுபடியும் நான்

தெருக்கள் மட்டும்
நீண்டு கொண்டே போகும்
என்றென்றைக்குமாய்.

நன்றி– ஒலிக்காத இளவேனில்
எழுதியவர்–நிவேதா

# புகை நடுவில்

## சமஸ்கிருத கதை

சென்ற இதழ் தொடர்ச்சி................

அந்த அதிருஷ்டம் இருக்குன்னா யாராலே தடுக்க முடியும்? அவங்களுக்கே கொடுத்திடுறேன்" என்றார்.

இதற்குள் மூத்த பேரன் வந்து "ரிக்ஷா வந்திரிச்சி" என்று சொல்லி தாத்தாவை மெதுவாக ரிக்ஷா பக்கம் கூட்டிக்கொண்டு போனான்.

"என்னாங்க உங்கப்பா நமக்கு என்ன கொடுக்கணும்னு நினைச்சிருப்பாரு? "ராம்பிரகாஷ"க்கு நெருக்கமாக வந்து திவ்யா ஆர்வத்துடன் கேட்டாள்.

"எனக்கென்ன தெரியும்? "என்று தோளைக் குலுக்கிக் கொண்டு ராம்பிரகாஷ் பதில் சொன்னான். அவனுடைய உதட்டுச் சுழிப்பு வேடிக்கையாக இருந்தது. "நாம பேசினதைக் கேட்டு ரொம்ப நொந்து போயிட்டாரு போலிருக்கு. அதனாலே தான் அவரு கடுமையாப் பேசின மாதிரித் தெரியுது. அவரு சேத்து வச்ச பணம் கொஞ்சம் இருக்கு. ஒருவேளை அந்த இருபதாயிரத்தை யாருக்காவது கொடுக்கணும்னு நினைக்கிறாரோ என்னவோ? இதுக்குள்ளே அதை யாருக்காவது கொடுத்திட்டாரோ, இல்லாட்டி ஏதாச்சும் பேங்கில பிக்சட் டெபாசிட்டிலே போட்டிருக்காரோ?. அது விஷயமாத்தான் தினமும் வெளியே போயிட்டு வர்றாரு போலிருக்கு. அவரோட நினைப்புல ஏதோ ஒரு குழப்பம் தெரியுது.



எப்படியானாலும் கடவுள் புண்ணியத்திலே அவரு சூரியப்பிரகாஷ் வீட்டிலே நல்லா இருந்தாப் போதும்.

"இது நல்லாத்தான் இருக்கு! அந்த இருபதாயிரம் ரூபாயைப்பத்தி நீங்க என்கிட்ட இதுவரைக்கும் ஒண்ணுமே சொல்லலையே" என்னிக்காவது அதைப்பத்தி ஏதாச்சும் மூச்சு விட்டிருக்கீங்களா? திவ்யா கோபத்துடன் சாடினாள்.

அது அவர் போட்டு வச்சிருக்கிற பிக்சட் டெபாசிட் போட்டிருக்காரோ உன்கிட்ட சொல்லியிருந்தா என்ன செஞ்சிருப்பே?"

"நம்ம ஷோபா கல்யாணத்துக்காகக் கேட்டு வாங்கியிருப்பேன். பணத்தை அவர் யாருக்கும் கொடுக்கிறதில்லையாக்கும்! யாருக்கோ இதுக்குள்ளே கொடுத்து முடிச்சிருப்பாரு" அவளுடைய குரலில் கவலை தெரிந்தது.

நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனாலும் நமக்கென்ன அதைப் பத்தி? அந்தக் கொஞ்சப் பணத்தை வச்சி நமக்கு என்ன ஆகப்போகுது? "அது அவருகிட்ட இருந்தாலாவது அவருக்கு மனசு தெம்பா இருக்கும்." இதற்குள்ளாகத் தொலைக்காட்சியில் தெடர் தொடங்கி விட்டது பிள்ளைகள் எல்லோரும் "தயவு செஞ்சி இப்போவாச்சும் உங்க பேச்சுக்களைக் கொஞ்சம் நிறுத்திக்கிடுறீங்களா? தொடர் ஆரம்பிக்கப் போறாங்கள்" என்றார்கள்.

தொடரின் கதையம்சம், பாத்திரப் படைப்பு முதலியவற்றைப் பற்றிக் குறை பாடும் புகழுரையுமாக வாதவிவாதங்கள் செய்து முடித்து எல்லோரும் எழுந்து பிரிந்து போனார்கள். சாப்பாட்டின்போது கூட அதைப் பற்றியே பேசிப் பொழுது கழிந்தது.

திவ்யா கணவனைப் பார்த்து. "ஷோபா கல்யாணத்திற்காக நிலத்தை வித்த மூணுலட்சரூபா இருக்கு. அதுபோக பேங்கில மூணுலட்சம் இருக்கு. இன்னும் ரெண்டு லட்ச ரூபா வேணும். எப்படியிருந்தாலும் குறைஞ்ச பட்சம் எட்டு லட்சமாவது வேணுமில்ல?" என்று சொன்னாள்.

"அதுக்கு நான் தர்மராஜன்கிட்ட ஏற்கனவே சொல்லிவச்சிருக்கேன். ஏற்பாடு செஞ்சதும் அவர் நமக்குத் தகவல் சொல்வார்" என்று பதில் சொன்னான் ராம்பிரகாஷ்.

அந்த நேரத்தில் காலிங் பெல் அடித்தது. ராம்பிரகாஷ் மகனைக் கூப்பிட்டு, "யார் வந்திருக்காங்கன்னு பாரு. உள்ளே வரச்சொல்லு" என்று சொன்னாள்.

போய்த் திரும்பி வந்த மகன் சந்திரதேவ் வெளியே தர்மராஜன் வந்திருப்பதாகச் சொன்னவன், தாத்தாவைப் பற்றி விசாரிப்பதாகத் தகவல் சொன்னான்.

"இது நம்ம அதிஷ்டம் தான். இப்போதான் நாம அவரைப்பத்தி நினைச்சோம். அவரே வந்திட்டாரு. நாமகேட்ட பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டாரான்னு நீங்க போய்த் தகவல் விசாரிங்க" என்று திவ்யா கணவனை ஏவினாள்.

ராம்பிரகாஷ் சட்டென்று எழுந்து வரவேற்பறைக்குப் போனான். அவனைத் தொடர்ந்து திவ்யாவும் போனாள்.

"ஞீதாத் சார் எங்கே இருக்காங்க?" என்று தர்மராஜன் கேட்டார்.

"அவரு கொஞ்சநாள் என்தம்பி சூரியபிரகாஷ் வீட்டிலே இருந்திட்டு வரலாம்னு போயிருக்காரு" என்றான் ராம்பிரகாஷ். கொஞ்ச நேரம் அது, இது என்று என்னவெல்லாமோ பேசிவிட்டு ராம்பிரகாஷ் மெல்ல "எங்க பெண்ணோட கல்யாணம் நிச்சயமாகியிருக்கு. ஆறு லட்சம் திரட்டி வச்சிருக்கோம். இன்னும் ரெண்டு லட்ச ரூபா வேணும். அதைத்தான் உங்ககிட்ட சொல்லி வச்சிருக்கேன். தயவு செஞ்சி கொஞ்சம் சீக்கிரமாக ஏற்பாடு பண்ணிக்கொடுத்தா நல்லது. கல்யாணம் முடிஞ்சதும் மீதி இருக்கிற நிலத்தை வித்து அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்திடுறோம்" என்றான்.

"ரெண்டு லட்சமென்ன, மூணு லட்சமே வாங்கிக்கிடுங்க. ஆனால் இந்தப் பணத்தை நீங்க ஏன் உங்க அப்பாகிட்டக் கேட்கக்கூடாது?" என்று கேட்டார் தர்மராஜன்.

"அதென்னங்க, எங்கப்பாகிட்ட அவ்வளவு பணம் இருந்தா நான் ஏன் உங்ககிட்ட பணம் கேட்கப் போறேன்? உங்களுக்கு எல்லா விபரமும் தெரியும் தானே?" என்றான் ராம்பிரகாஷ்.

"என்ன நீங்க சொல்றீங்க? உங்கப்பாக்கிட்ட காசு இல்லேன்னு யாரு சொன்னது? அடடே, அவர் உங்ககிட்ட எதுவும் சொல்லலையா? இன்னிக்குதான் அவரோட பிக்சட் டெபாசிட் தொகை பத்துலட்ச ரூபாய் வந்திருக்கு. காலையிலே என்கிட்ட வந்தாரு. நான் அந்த விஷயமாகத்தான் இப்போ டின்னர் பார்ட்டிக்கு வந்திருக்கேன். என்னை இங்கே வரசொன்னதே அவர் தானே! ஆனால் திடீர்னு சூரியப்பிரகாஷ் வீட்டுக்கு போகணும்னு தோணியிருக்குப் போலிருக்கு. இருக்கட்டும் நான் சூரியப்பிரகாஷ் வீட்டுக்கே போய் அவரைப் பார்த்திடுறேன்" என்று பதிலுக்குக் கூட காத்திராமல் தர்மராஜன் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார்.

"என்னாங்க பத்து லட்ச ரூபா வந்திருக்கா!" திவ்யா வியப்பில் திளைத்து கண்களை மலங்க மலங்க விழித்தபடி கேட்டாள். அவளுக்கு அந்தரங்கத்தில் இனம் புரியாத குடைச்சல் ஏற்பட்டது. தான் எவ்வளவு மடத்தனமான காரியம் செய்து விட்டோமென மருகினாள். சரிசெய்ய முடியாத ஆதங்க நிலை!

ஒவ்வொரு சமயம் இப்படித்தான் நாம் பெரிய அளவில் சிந்திப்பதாகக் கருதிக் கொண்டு நமக்குள்ளேயே மூண்டெழும் பகைப்புகையை அடையாளம் கண்டு கொள்வதில்லை. இவ்வாறாக அந்தரங்கத்தில் ஒழிந்துகொண்டிருக்கும் பகையை வெல்ல முடியாமல் திவ்யாவைப் போன்று நமக்கு நாமே துரோகம் இழைத்துக் கொள்கிறோம். இப்படி உள்ளே ஒழிந்திருக்கும் பகையை வெல்ல முடியும் போதுதான் மனிதன் லாபமடைகிறான். வரவிருக்கும் அதிஷ்டத்தைக் கூடப் பொறுமையின்மை காரணமாகக் காலால் தள்ளி உதறிவிட நேர்கிறது!

அவலத்தால் தளர்ந்து தடுமாறி உணர்வற்ற நிலையில் உட்கார்ந்து விட்டாள் திவ்யா.


முற்றும்

டாக்டர் ப்ரஸாஸ்யமித்ர சாஸ்திரி
தமிழாக்கம் - இளம்பாரதி
கோட்டோவியங்கள் - மனோகர

# நூல் அறிமுகம்

## “யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்”

**ஆசிரியர்** – சாந்தசீலன் கதிர்காமர்
**வெளியீடு** - குமரன் புத்தக இல்லம் இலங்கை
**விலை** - 400.00




யாழ்ப்பாணஇளைஞர்காங்கிரஸ் (1924-1934) பற்றிய இந்நூலானது சத்தியசீலன் கதிர்காமரால் எழுதப்பட்டது. 1980 இல் வெளியிடப்பட்ட ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்த நூலின் ஒரு பகுதியாகவே இது வெளிவந்துள்ளது. மீள்பதிப்பாக வந்துள்ள இந்த நூல் சிங்களத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1924 இல் ஆரம்பிக்கப்பட்டது. நூலாசிரியர் இதில், இதன் தொடக்ககால அமர்வுகள், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் நோக்கங்கள் மற்றும் செயல் அட்டவணைகள், காந்தியின் வருகை, சாதி மற்றும் இனத்துவ ஒற்றுமை பற்றிய பிரச்சினைகள், 1931இல் இடம்பெற்ற தேர்தலை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்தமை, அதைத் தொடர்ந்து வந்த வாதப்பிரதிவாதங்கள் வேண்டுமென்றே உண்மையாக நடந்தவை சிதைக்கப்பட்ட முறை ஆகியன பற்றி விளக்கிச் சொல்கிறார்.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் விட்டுச் சென்றவை பற்றி மதிப்பீடு செய்கையில் அதனுடைய சாதனையானது பண்பாடு மற்றும் கல்வி ஆகிய துறைகளிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றியதிலும் உயர்ந்து நிற்கின்றது. அத்தோடு எந்தத் தேசமும் பெருமைப்படக் கூடிய விதத்தில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸில் இருந்தே மேன்மை மிக்க பல புத்திஜீவிகள் வெளிக்கிளம்பியிருக்கின்றனர்.

“அதன் பார்வைப் பரப்பானது முழுத் தீவையும் அடக்கியது. அதன் இலக்கு சுதந்திரம், தேசியஐக்கியம், மதச்சார்பின்மை மற்றும் சாதித்தடைகள் அனைத்தையும் கடத்தல். நாட்டில் உண்மையான தேசத்தின் முதலாவது வெளிப்பாடாக அது அமையும்” என்று ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த உரையில் ஹெக்ரர் அபயவர்தன கூறியிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

உண்மையில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பல வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டது. இது யாராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாதது. அந்த வகையில் சத்தியசீலனால் படைக்கப்பட்டிருக்கின்ற இந்த நூல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினுடைய மீள் வாசிப்பையும் வரலாற்று அம்சங்களையும் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தி நிற்கின்றது.

தமிழ்

15 ஆம் பக்க தொடர்ச்சி

*சிறிமா சாஸ்திரி........*

கூறப்பட்டது. பலருக்கு முழுத்தொகையும் கிடைக்கவில்லை. 4 வீதத்தவர் மட்டுமே முழுத்தொகையையும் பெற்றனர். மீதிப்பேர் முதற்கட்டப் பணமாக 3,000 ரூபா மட்டும் பெற்றனர். அனுபவம் இல்லாததால் இதில் ஈடுபட்டவர்களில் 88 வீதத்தவர்கள் வங்குரோத்து நிலையைப் அடைந்தனர்.

இந்தியாவிற்கு அனுப்பப்பட்டவர்கள் ஒரே பகுதியில் குடியேற்றப்படாமல் பல்வேறு பகுதியில் குடியேற்றப்பட்டமையினால் தம்மை நிறுவனமயப்படுத்தி, குரல் எழுப்ப முடியாதவர்களாக இருந்தனர். காலநிலை வேறுபாடுகளுக்கு முகம் கொடுக்கவும் இவர்கள் சிரமப்பட்டனர்.

இந்த நாடுகடத்தலினால் ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு ஒரு தேசிய இன இருப்பிற்குரிய வலுவானமக்கள்தொகையை இழந்தமை தான். இந்த இழப்பு பல்வேறு வழிகளிலும் தேசிய இனத்தின் தூண்களாக உள்ள நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றைச் சிதைக்கக் காரணமாக அமைந்தது. குறிப்பாக சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதையும், பெருந்தோட்ட நிலங்கள் காடாக விடப்படுவதையும், சிறுதோட்டக்காரர்களுக்கு நிலங்கள் பிரித்துக் கொடுப்பதையும் இந்த நாடு கடத்தல் இலகுவாக்கியது.

மலையக மக்களின் வரலாற்றில் இந்த நாடு கடத்தல் மிகப்பெரும் சோக நிகழ்வு. இந்த ஒப்பந்த தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க மலையக மக்கள் முன் வர வேண்டும். இதன் மூலம் வரலாற்று ரீதியாக மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தைப் புதிய தலைமுறை புரிந்து கொள்ள உதவ வேண்டும்.

04 ஆம் பக்க தொடர்ச்சி

*மேற்குலகினதும்.....*

படுத்தப்பட்டது. இலங்கை அரசுக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது என்பதற்காக தமிழர், இனப்பிரச்சினை என்ற சொற் பதங்கள் கவனமாக தவிர்க்கப்பட்டன. அவர்களின் இலக்கு மஹிந்த அரசாங்கமே ஒழிய ஸ்ரீலங்கா அரசல்ல.

ஜெனிவா சர்வதேச விசாரணை என்ற ஆயுதத்தை கையில் வைத்துக் கொண்டு, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவரை தோற்கடிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கேற்ப மஹிந்தரின் கோட்டையிலிருந்த மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக்கப்பட்டார். சந்திரிகாவிற்கும் மஹிந்தவிற்கும் இடையே நீண்டகாலமாக நிலவிய முரண்பாடு இதற்கு நன்கு பயன்படுத்தப்பட்டது. தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்தவுடன் அவரது அரசினை பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் அமைச்சரவையில் சேர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக செய்திகள் வருகின்றன.

இந்தியாவையும் மேற்குலகையும் பொறுத்தவரைதமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது மத்தியில் மூன்று அமைச்சர்களும் வடமாகாண சபையும் தான். சம்பந்தன் தலைமை இவற்றோடு திருப்திப்படும் நிலையே உள்ளது. மறுபக்கத்தில் இந்தியாவினதும், மேற்குலகினதும் இலக்கான சீனாவை இலங்கைத்தீவில் இருந்து அகற்றுதல் என்பதற்கான வேலைத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

இங்குள்ள மிகப்பெரிய சோகம் இந்தியாவினதும் மேற்குலகினதும் இலக்கிற்காக தமிழ் மக்கள் பயன்படுத்தப்படுவதுதான். 60 வருடகால இன அழிப்புக்கு எதிரான போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களது கனவுகள் தொடர்ந்தும் கானல் நீராகத்தான் இருக்கப்போகின்றதா என்பதேயாகும்.

19 ஆம் பக்க தொடர்ச்சி

*கந்தையா.....*

முயற்சிகளுக்குப் பிறகும் எந்தப் பலனும் கிடைக்காத நிலையில் சீதன பணத்தை சேகரிப்பதற்காகத் தான் எதை நேசித்தாரோ, எதற்காக இத்தனை காலமும் தன்னை அர்ப்பணித்தாரோ, வீடு முழுவதும் மகிழ்ச்சி வெள்ளம் அலைபுரண்டு ஓடுவதற்கு எது காரணமாக இருந்ததோ அதையே விற்று விடச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருந்த மனைவியின் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்க முடியாது கோபத்துடன் வெளியேறுகின்றார்.

அவருக்கு எப்போதும் தன் தோட்டத்தின் அருகில் இருக்கும் இந்தக் குளக்கட்டில் இருந்து, தான் வளர்க்கும் மாடுகளை மேய்ச்சலுக்காகவிட்டுஇருப்பதும்பிடித்தமான ஒன்று. மனைவி மீது வந்த கோபத்தின் முடிவாகத் தான் அந்தக் குளக்கரையில் இப்போது அமர்ந்திருக்கிறார். அவருக்குத் தெரியும் தன் சேமிப்புக்கள் அனைத்தையும் சேர்த்தாலும் மூத்தவளுக்கு குடுக்கிறதுக்குப் பற்றாக்குறை வரும். இந்த நிலையில் மிகுதியாக இருக்கும் மற்ற மூன்று பிள்ளைகளின் நிலை? அப்பா முதல்ல மூத்தவளோட முடிப்பம் பிறகு யோசிப்பம் என்று மனைவி கூறிய வார்த்தைகள் அவருக்கு ஏற்புடையதாகப் படவில்லை. ஒரு மகளின் திருமணத்திற்காக தான் நேசித்த மண்ணை விற்றுவிட மனது வரவில்லை.

நீண்ட நேரமாகியும் யோசனையில் இருந்து விடுபட அவரால் முடியவில்லை. சீ என்ன இந்த வாழ்க்கை? ஒரு பிள்ளையை பெற்று வளர்த்து ஆளாக்கி இப்படி கொண்டு வந்து விட்டும் பிள்ளைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர முடியாத ஏழை ஆகிவிட்டேனே, நான் என்று மனதில் இருந்த வேதனையை கண்ணில் வடிய விட்டார். செய்வது தெரியாது மாலை சரிந்தது கூடத் தெரியாது அந்தக் குளக்கட்டிலையே சரிந்தார் கந்தையா அண்ணர். அவரது விழிகளில் இருந்து ஓடிய நீர் அந்தக் குளத்து நீரோடு இணைந்து மழை நீரின் சுவை கொண்ட நீரை உவர் நீர் ஆக்கி இருக்கும். அத்தகைய வலியின் வெளிப்பாடாகவே அந்தக் கண்ணீர் இருந்தது.

கோபத்துடன் வெளியேறி சென்ற கணவனைக் காணாது ஏக்கம் கொண்டாள் கமலம். “பிள்ள அப்பாவ காணல்ல தம்பிய கூப்பிட்டு சொல்லு தேடி பார்த்து வர சொல்லி” அவனும் அருகில் இருக்கும் உறவுகளின் வீடுகளை எல்லாம் சல்லடை போட்டும் பலனின்றி திரும்பி வந்தான். “அம்மா அப்பாவ காணல. எங்க போனார் என்று தெரியல. அனைவருக்கும் பதற்றம் தொற்றிக் கொண்டது. தந்தையின் நிலை தெரியாது தவிக்கத் தொடங்கினர். அயல் வீடுகளுக்கு செய்தி தெரிந்து அவர்களும் தேடுதலில் ஈடுபட்டனர். எங்கும் கிடைக்கவில்லை.

மனைவிக்கு அப்போது தான் தான் இறுதியாகப் பேசியது நினைவில் வர “தம்பி நீ தோட்டத்தில போய் பாத்திட்டு வா” சரி அம்மா, அவனும் அவனோடு இரு நண்பர்களும் கந்தையா அண்ணரை தேட அவர் நேசித்த தோட்டத்துக்கு செல்கிறார்கள். அங்கே தந்தை குளக்கட்டின் கீழ் படுத்திருந்த கோலத்தைக் கண்டு சைக்கிளை நிலத்தில் போட்டு விட்டு டோச் வெளிச்சத்தில் ஓடுகிறான். அவன் கண்ட காட்சி அவனை உச்சக் கட்ட அதிர்ச்சிக்குள் கொண்டு சென்றது. தந்தையின் வாயில் இருந்து வெளிவந்திருந்த நுரையை துடைத்து விட்டுத் தூக்க முனைகிறான், அவனால் முடியவில்லை. அவரது கால்கள் கைகள் எந்த அசைவும் இல்லாது கிடந்தன. நண்பர்கள் இணைந்து கொள்கிறார்கள். செயலற்றுக் கிடந்த கரத்தில் இறுக்க பிடிக்கப்பட்டு கிடந்தன அந்தப் பேனாவும் குறிப்பு புத்தகமும்.

மருத்துவமனை கட்டிலில் அசைவற்று கிடக்கும் கந்தையா அண்ணரின் முடிவு...? பாரிசவாதம். “அக்கா பார்த்தியா கொடுமைய அந்த மனுஷன் எப்பிடி இருந்தது...? ஒரு நோய் நொடி இல்லாம இருந்து இப்ப இப்பிடி கட்டிலோட கிடக்குது. எழுதி வைச்சிட்டல்லே படுத்துக் கிடக்கு” அவரது குறிப்பு புத்தகத்தில் எழுதப்பட்டு இருந்த வார்த்தைகள் அவர்களால் பரிமாறப்படுகின்றன. “என் விவசாயத்தை என்னால் விட முடியாது. ஆனா பிள்ளைய கட்டி குடுக்கணும் என்றா விக்கோணும்” ஆனாலும் என் தோட்டம் எனக்கு வேணும். வசனம் முற்றுப்பெறாமலே பேனா கோடு கீறி கொண்டு சென்றிருந்தது.



இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் ஆண்டகை விமானநிலையத்தில் தனது பிரதான உரையை நிகழ்த்தினார்.



தொண்டமனாறு அக்கரைப்பகுதியில் இராணுவம் அதிகளவான மனல் அகழ்வில் ஈடுபட்ட இடத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் பார்வையிட்ட போது

---










பிரான்சில் தீவிரவாதிகளால் சூட்டுக் கொல்லப்பட்ட சார்லி கெப்டே இதழின் பணியாளர்களுக்கு இறுதி மரியாதை செய்யும் முகமாகவும் அந்தச் சூட்டுச் சம்பவத்திற்கு சர்வதேச எதிர்பை வெளிப்படுத்தும் முகமாகவும் லண்டனில் திரண்ட 18 இலட்சம் பேரின் அமைதிப் பேரணி இது.



சீனாவில் உள்ள லெஹெற லெடு உயிரியியல் பூங்காவில் ஒரு வித்தியாசமான அனுபவத்தைப் பெற முடியும். உயிரியியல் பூங்காக்களில் பொதுவாக விலங்குகள் கூண்டுகளில் இருக்கும். மனிதர்கள் சுதந்திரமாகச் சுற்றிப் பார்ப்பார்கள். ஆனால் இங்கே விலங்குகள் சுதந்திரமாக உலாவி வருகின்றன. மனிதர்கள் வாகனத்தில் உள்ள கூண்டுகளில் பயணம் செய்து, சுற்றிப் பார்க்கிறார்கள். புலிகளையும் சிங்கங்களையும் அருகில் பார்ப்பதற்காக, வாகனத்தில் மாமிசத் துண்டுகளைக் கட்டி வைக்கிறார்கள்.

இரைக்காக புலிகளும் சிங்கங்களும் உறுமிக்கொண்டு அருகில் வருகின்றன. கூண்டுக் குள் இருக்கும் மனிதர்களுக்கு த்ரில்லிங்கான அனுபவம் கிடைக்கிறது. இந்த ஒரு காரணத்துக்காகவே பூங்கா மிகவும் புகழ்பெற்றுவிட்டது. மூன்று மாதங்களுக்கு உரிய டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. புலிகளும் சிங்கங்களும் பசியுடன் அலைவதால் மனிதர்கள் விரல்களை கம்பிகளில் வைக்கக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்கள்....



உலகிலேயே மிக அதிகமான உப்புத் தன்மை கொண்ட நீர்நிலை சாக்கடல். மற்ற கடல்களைவிட 9.6 மடங்கு உப்பு இந்தச் சாக்கடலில் இருக்கிறது. அதனால் இங்கே மீன் போன்ற எந்த உயிரினங்களும் வாழ முடிவதில்லை. தண்ணீரின் அடர்த்தி அதிகம் என்பதால் மனிதர்கள் மிதந்துகொண்டே படிக்கலாம். மருத்துவக் குணம் மிக்கதாக நம்பப்படுவதால் இங்கே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகம். ஆண்டுதோறும் இந்தச் சாக்கடலில் ஒரு மீட்டர் உயரத்துக்குத் தண்ணீர் குறைந்து வருகிறது. 1950ம் ஆண்டிலிருந்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. இ துவரை 40 மீட்டர் அளவுக்குத் தண்ணீர் குறைந்துவிட்டது. ஜோர்டான் ஆற்றில் இ ருந்து வரும் தண்ணீரின் அளவு குறைவதாலேயே சாக்கடலின் தண்ணீர் அளவு குறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். சாக்கடலை ஒட்டிய பூங்காக்கள், நீர் விளையாட்டுகள் போன்றவை தண்ணீர் தொலைவுக்குச் சென்றுவிட்டதால் மூடப் பட்டிருக்கின்றன.

---

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 15.01.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.